
www.pustaka.co.in

# ரிஷி மூலம்



ஜெயகாந்தன்


www.pustaka.co.in
ரிஷி மூலம்
ஜெயகாந்தன்

http://www.pustaka.co.in

# ரிஷி மூலம்

# Rishi Moolam

Author:

த. ஜெயகாந்தன்

T. Jayakanthan

For more books

http://www.pustaka.co.in/home/author/jayakanthan

Digital/Electronic Copyright © by Pustaka Digital Media Pvt. Ltd.

All other copyright © by Author.

All rights reserved. This book or any portion thereof may not be reproduced or used in any manner whatsoever without the express written permission of the publisher except for the use of brief quotations in a book review.

பொருளடக்கம்

முன்னுரை

அத்தியாயம் 1

அத்தியாயம் 2

அத்தியாயம் 3

## முன்னுரை

இந்த ரிஷிமூலம் என்கிற கதையை நான் மூன்று வாரம் தினமணி கதிரில் எழுதினேன். அதன்பிறகு தினமணி கதிரில் வாசகர் கடிதம் ஒன்றைப்

பிரசுரித்து, ‘இனிமேல் இது போன்ற கதைகள் தினமணி கதிரில் பிரசுரிக்கப்பட மாட்டாது’ என்ற ஆசிரியர் குறிப்பும் வெளிவந்தது. அதனைத் தொடர்ந்து இந்த ரிஷிமூலம் கதையை ஆதரித்து நூற்றுக்கணக்கான கடிதங்கள் எனக்கும் கதிர் ஆசிரியருக்கும் வரலாயின. இப்போதுகூட இலக்கிய விமர்சனம் பயில்கிறவர்களாலும் வாசகர் வட்டாரங்களிலும் இந்த ரிஷிமூலம் சமயம் கிட்டுகிற போதெல்லாம் விமர்சிக்கப்படுகிறது. இது பற்றிய எத்தனைவிதமான அபிப்பிராயங்கள் உண்டோ அத்தனையையும் நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

இந்தக் கதையை எழுதியதன் மூலம் ஒரு நல்ல கதை எழுதி இருக்கிறேன் என்பதைத் தவிர நான் இந்தச் சமுதாயத்தை உயர்த்தி விட்டதாகவோ கெடுத்து விட்டதாகவோ நம்பவில்லை. அப்படிப்பட்ட நோக்கங்கள் எதுவும் - கதை எழுதுகிறவன் என்ற முறையில் எனக்குக் கிடையாது. இந்தச் சமுதாயத்தை உயர்த்துகிற பணியில் எல்லா மனிதர்க்கும் என்ன பங்கு உண்டோ, அந்தப் பங்கு எனக்கும் உண்டு. எல்லாரையும் மாதிரி நானும் ஒரு கூடை மண் கொட்டவோ, ஓட்டுப் போடவோ தயார். அந்தப் பணிக்கான எனது பங்கை மறுக்க நான் கதை எழுதுவதை ஒரு சாக்காகப் பயன்படுத்தி ஒதுங்குவது நியாயமாகாது.

நான் ஐந்தாண்டுத் திட்டங்களுக்குப் பிரசார பிரசுரங்கள் எழுத வேண்டுமானால் அதையும் மகிழ்ச்சியுடன் செய்வேன். ஆனால் அது வேறு; கதை எழுதுவது வேறு. நான் பல சந்தர்ப்பங்களில் கூறியவற்றைத்தான் மறுபடியும் இங்கே நினைவூட்டுகிறேன்.

நான் கண்டதை - அதாவது உலகத்தால் எனக்குக் காட்டப்பட்டதை, நான் கேட்டதை - அதாவது வாழ்க்கை எனக்குச் சொன்னதை நான் உலகத்துக்குத் திரும்பவும் காட்டுகிறேன். அதையே திரும்பவும் உங்களிடம் சொல்லுகிறேன். அது அசிங்கமாக, அது அற்பமாக. அது கேவலமாக அல்லது அதுவே உயர்வாக, உன்னதமாக எப்படி இருந்த போதிலும் எனக்கென்ன பழி? அல்லது புகழ்?

எனது முதல் சிறுகதைத் தொகுதி முன்னுரையில் - நான் ஒரு கம்யூனிஸ்டாக இருந்த காலத்திலேயே மேலே கண்டவாறு எழுதி இருக்கிறேன்.

ஏதோ நான் திசை மாறிவிட்டதாகவும் வழி தவறிவிட்டதாகவும் என் பின்னால் வருகின்ற சில பேர் கூக்குரலிடுகிறார்கள். பெருந்தன்மை காரணமாகவோ எனது வேலையில் நான் முனைந்திருக்கையில் ஏற்படுகின்ற அலட்சியம் காரணமாகவோ, நான் இவர்களுக்குப் பதில் சொல்லாமலும், ‘சரி, அப்படியே வைத்துக்கொள்!’ என்கிற அலுப்போடும் மௌனமாயிருந்தது உண்டு.

நான் எந்தக் கொள்கைக்கும் எந்தக் கூட்டத்துக்கும் எப்போதும் தாலி கட்டிக் கொண்டதில்லை.

ரிஷிமூலம் கதையினால் சோஷலிசத்திற்கு என்ன லாபம் என்று கேட்கிறார்கள். எத்தனையோ சமுதாயப் பிரச்சனைகள் இருக்க, இதை ஏன் எழுதவேண்டும் என்று கேட்கிறார்கள். கீழ்வெண்மணியில் உயிரோடு கொளுத்தப்பட்ட நாற்பத்தைந்து ஹரிஜன விவசாயிகளைப் பற்றி ஏன் எழுதவில்லை என்று கேட்கிறார்கள். மாணவர்களிடையே ஏற்பட்டுள்ள குமுறல்கள் பற்றி எழுதி இருக்கலாமே என்கிறார்கள்.

இவர்களது யோசனைகளுக்கு மிக்க நன்றி என்று சொல்வதைத் தவிர இவற்றிற்று என்னிடம் இலக்கிய ரீதியான வேறு பதில் இல்லை. இவற்றைப் பற்றியெல்லாம் எழுதக் கூடாது என்று நான் எங்கேயும் சொன்னதாக எனக்கு நினைவில்லை; எழுத மாட்டேன் என்றும் நான் சொல்லவில்லை.

நான் எழுதியதைப்பற்றி விமர்சனம் செய்ய வந்தவர்கள் நான் எழுதாததைப் பற்றிக் கேள்விகள் எழுப்புவது என்ன விமர்சன ஞானம் என்று எனக்குப் புரியவில்லை.

என் கதைகளைத் தாண்டி என்னைக் கணிக்க முற்படுகிற காரியத்தில் பலர் முனைந்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட

விமர்சனத்தைச் செய்ய வருகின்ற அனைவருமே தாங்கள் யார் என்பதைத்தான் எனக்குக் காட்டிக் கொள்கிறார்கள்.

தங்கள் அரை வேக்காட்டுப் படிப்பாற்றலையும், தாங்கள் தழுவி இருக்கும் கொள்கைகளின் மேல் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் வெறி மயக்கத்தையும் தமுக்கடித்து ஊரறியச் செய்ய வேண்டுமென்று நினைக்கிறவர்கள் தங்களுக்கு என்று சொந்தமாக ஒரு தமுக்கு இல்லாததனால் ஜெயகாந்தன் என்று முரசத்தை ஓங்கி முழக்குகிறார்கள். எனக்கு இதில் மகிழ்ச்சியே.

ஆனால் இந்த முரட்டு விமர்சகர்களில் பலர்கொட்டிக் கொட்டி முழக்குவது தங்கள் குருட்டுத் தனத்தைத்தான்.

மேலும் இவர்கள் இன்றைக்குத் தழுவி இருக்கிற கொள்கைகளைக் கடந்த காலத்தில் நானும் சார்ந்திருந்து இப்போது அவற்றைக் கை கழுவிவிட்டு வந்துவிட்டதாகக் கருதிக் கொண்ட கோபமும் பகைமையும் இவர்களது விமர்சனத்தின் ஆதார சுரதியாகவும் ஆரவார கோஷமாகவும் ஆர்ப்பாட்டம் செய்கிறது.

அதற்குமேல் எனக்கு ஏதாவது ஒரு பட்டம் கட்டிவிட வேண்டும் என்கிற இவர்களது ஆத்திரமும் தெரிகிறது.

‘சமுதாயம் உன்னைத் தூக்கி எறிந்துவிடும்’ - என்று எச்சரிக்கை விடுகிற மிரட்டும் தோரணை (Black Mailing)யும் தெரிகிறது.

இந்தத் தவறுகளை இவர்கள் அறியாமல் செய்கிறார்கள் எனில் இவர்கள் தெளிவு பெறுவதற்காகச் சில விஷயங்களை இங்கே சொல்வதற்கு எனது பெருந்தன்மை இடம் தருகிறது. ஏனெனில் இப்படிப்பட்ட விமர்சனங்களில் இறங்கிய அத்தனை பேரும் என்னைப் பற்றிய தப்பபிப்பிராயத்துக்கு இரையாகி இருக்கிறார்கள்.

‘நான் சமுதாயத்தை உயர்த்துவதற்காக இலக்கியம் படைக்கிறேன். சோஷலிஸமே எனது லட்சியம். புரட்சி ஓங்குக! தொழிலாளி வர்க்கம் ஜிந்தாபாத்! நான் எழுதுகிற ஒவ்வொரு எழுத்தும் மக்களுக்காகவே என்றெல்லாம்

எனக்கு நானே கட்டியம் கூறிக்கொண்டு ராஜநடை போட்டு வருவது என்னைப் பொறுத்தவரை ஒரு கோமாளித்தனமே.

இதற்குப் பொருள், அவ்வாறு நடைபோட்டுக் கொண்டு வருபவர்களை நான் கோமாளிகள் என்று கருதுகிறேன் என்பது அல்ல. அவர்கள் ராஜ பார்ட்டுக்களாகவே இருக்கலாம்.

நான் எந்தப் ‘பார்ட்’டும் அல்ல. நான் நான்தான்.

உடனே “முன்பு ஒரு புத்தகத்தின் முன்னுரையில் அப்படிச் சொல்லியிருக்கிறீர்களே, இந்தப் பிரசங்கத்தில் இப்படிச் சொன்னீர்களே!” என்று கைவிடப்பட்ட தமிழ் சினிமாக் காதலிகள் மாதிரி இவர்கள் கதறுவதைக் காண எனக்குச் சிரிப்பு வருகிறது.

அப்போது நான் ஒரு கம்யூனிஸ்ட்டாக இருந்ததனால் நான் கூறாத பொருள்களையெல்லாம் இவர்கள் வலிந்து கண்டு கொண்டு இப்போது நான் கம்யூனிஸ்டு இல்லை என்பதனால் அதே மாதிரி வலிந்து தவறான பொருள் கொண்டு மயங்குகிறார்கள் என நான் புரிந்துகொள்கிறேன்.

நான் எந்த அரசியல் கட்சியைச் சார்ந்திருந்த போதிலும் எப்போதுமே எனது இலக்கிய வாழ்க்கையைக் கலப்படமில்லாமல் நடத்தி வந்திருக்கிறேன்.

தொழிலாளர்கள், ஏழைகள், பசித்தவர்கள், விபசாரிகள் பற்றிய கதைகளை எழுதுகிறபோது நான் மார்க்ஸிசத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு கதைகள் எழுதுவதாகப் பலர் சொல்லுகிறார்கள்.

நான் அதை மறுத்ததில்லை. அது அப்படித்தானா என்று எனக்குத் தெரியாது; அதனால்தான் மறுத்ததில்லை. ஏனென்றால் நான் மார்க்ஸிசத்தில் கற்றுத் துறை போகியவன் அல்லன். நான் கம்யூனிஸ்டுக் கட்சியில் இருந்ததனால் அப்போதெல்லாம் என்னைப் பற்றி அப்படிக் கூறுவதை ஒரு பெருமையாகக் கருதி வந்திருக்கிறேன். இப்போது கூறினாலும் நான் மறுக்கமாட்டேன்.

இப்போது சொல்கிறார்கள்; நான் பிராய்டிஸத்தை அடிப்படையாகக் கொண்டு கதைகள் எழுதுகிறேனாம்!

இதையும் நான் மறுக்கப்போவதில்லை. ஏனென்றால் நான் பிராய்டையும் பயின்றதில்லை.

பிராய்ட் என்ற ஒரு ஜெர்மானியப் பெயரை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். பொருளாதாரத் துறையில் மார்க்ஸின் பெயர் எப்படி மறுக்கப்பட முடியாத ஒன்றோ, அதுபோல மனோதத்துவம் என்னும் துறையில் பிராய்டின் பெயரும் ஒன்று என்று பிராய்டையும் மார்க்ஸையும் பயின்றவர்கள் சொல்ல நான் கேட்டிருக்கிறேன்.

பிராய்டிஸத்தை அடிப்படையாகக் கொண்டு கதை எழுதுவது வெட்கப்பட வேண்டிய காரியம் அல்ல. ஆனால் இது எனக்குத் தரப்படுகின்ற அதிகபட்ச மரியாதை என்பதை மட்டும் இங்கே சொல்லிக் கொள்கிறேன்.

ஆனால், நமது விமர்சகர்களில் பலர் ஏதோ பிராய்டிஸத்தை நான் பரப்புவதாக நம்பிக்கொண்டு பிராய்டின் மீதே பகைமை கொண்டுவிட்டார்கள்!

இதைப் பார்க்க எனக்குப் பரிதாபமாக இருக்கிறது.

சமீபத்தில் ஒரு சோவியத் அறிஞர் ருஷ்ய நாட்டு உயர்தரக் கல்விக் கூடங்களிலேயே பிராய்டைப் பயிற்றுவிக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தி உள்ளார். இதை நான் குறிப்பிடக் காரணம் பிராய்ட் ஒன்றும் மார்க்ஸுக்கு எதிரி அல்ல என்று சொல்வதற்குத்தான்.

பிராய்டும்கூடத் தன்னுடைய சில ஆராய்ச்சி முடிவுகளுக்கு அனுசரணையான சான்றுகளை இலக்கிய ஆசிரியரின் நூல்களிலிருந்தே எடுத்துக் காட்டுவான்.

மனோதத்துவமும் இலக்கியமும் அதிகத் தொடர்புடையன என்பதைக் கூறுவதற்காக இதை இங்கே கூறுகிறேன்.

ஏன்? எனது கதைகளையும்கூட மனோதத்துவம் பயில்கிற சில மாணவர்களும் அதனைப் பயிற்றுவிக்கிற சில

ஆசிரியர்களும் வந்து தங்கள் பணிக்கு அவை உதவியாக இருக்கின்றன என்று என்னிடம் பாராட்டியது உண்டு.

ஆனால் அதற்காக என்று பட்டயம் கட்டிக் கொண்டு நான் கதை எழுத முடியாது.

சமுதாயம் என்னைத் தூக்கி எறிந்துவிடும் என்கிற பயம் எனக்கு இல்லை. என்னை எதிர்த்து வருகிற கூக்குரல்களில் தூக்கி எறியப்படப்போகிற ஒரு சமுதாயத்தின் மூர்க்கமான அலறலையே நான் கேட்கிறேன்.

என்னுடைய எழுத்து அனைத்துமே சமுதாயப் பிரச்சனைகளின்பாற் பட்டதன்றி வேறல்ல.

சமுதாயத்துக்கும் எனக்கும் இருக்கிற உறவின்மேல் 'மனிதனும் சமுதாயமும்' என்கிற ஒரு முத்திரையைத் தவிர வேறெந்த முத்திரையும் குத்தப்படுவதை நான் சம்மதியேன்.

இந்தச் சமுதாயத்தோடு எனக்கு உறவும் உண்டு; பகையும் உண்டு.

இது வளர்ந்து கொண்டும் இருக்கிறது; அழிந்து கொண்டும் இருக்கிறது.

உண்மையான இலக்கியம் படைக்கிற தகுதி உடைய எவனும் 'நான் சமுதாயத்தின் வளர்ச்சிக்காக எழுதுகிறேன்' என்கிற வாக்குமூலத்துடன் எழுத ஆரம்பிக்க வேண்டும் என்கிற அவசியம் இல்லை.

நான் தனிமனித சுதந்திரத்துக்கு வாதாடுகிறேன் என்பது என்னைப் பற்றிய பிறிதொரு விமர்சனம்.

தனி மனிதவாதிகள் எல்லாம் சமுதாயத்தின் எதிரிகள் என்று கருதுவது பேதைமை ஆகும். ஓர் அழிகின்ற சமுதாயத்தில் அத்துடன் சேர்ந்து அழியாமல், நாளை வருகின்ற சமுதாயத்தின் பிரதிநிதியாக இருக்கும் ஒரு சிலர் தனி மனிதர்களாகவே நிற்பர்.

சோஷலிஸ சமுதாயத்தில் தனி மனிதவாதியை எதிர்த்துப் பேசப்படுகின்ற நியாயங்களை (இது எந்த அளவு நியாயமானது என்று விமர்சனம் செய்ய இங்கே இடமில்லை) இங்கே, அகவாழ்வில் அழிந்துபோன நிலப்பிரபுத்துவப் பண்பாடுகளின் ஆளுகையும், புறவாழ்வில் நாகரிக முதலாளித்துவ சமுதாயம் கூடக் கழித்துக் கட்டிய அநாகரிக மேற்கத்திய அநாசாரப் பண்புகளின் (வெறும் வியாபார லாபம் கருதிய சினிமாக்கள் மூலம் இங்கே இறக்குமதி செய்யப்பட்டவை அவை) ஆர்ப்பாட்டங்களும் பெருமை என்றும் வளர்ச்சி என்றும் நம்பி அழிந்து கொண்டிருக்கின்ற இந்தச் சமுதாயத்தை எதிர்த்து முண்டிக் கொண்டிருக்கும் தனி மனிதர்களுடைய நியாயமான துடிப்புகளை வெறும் கலகங்களாகக் கருதி சோஷலிஸ சமுதாயத்தில் எழுகின்ற தனி நபர் வாதத்துக்குத் தருகின்ற பதிலை இங்கே தருவது நியாயமில்லை.

பாலுணர்ச்சிப் பிரச்னைகளை அடிப்படையாகக் கொண்டு நான் கதை எழுதுகிறேன் என்பது இன்னொரு தாக்குதல்.

பாலுணர்ச்சிப் பிரச்னை என்பது வெறும் படுக்கை அறைப் பிரச்சினை அல்ல. அதுவும்கூட ஒரு சமுதாயப் பிரச்னைதான்.

வயிற்றுப் பசி மாதிரி - கலாசாரம், அழகுணர்ச்சி, ஒழுக்கங்கள், வாழ்வியல் நெறிமுறை ஆகிய துறையில் பசியையும் விட அது ஓர் அடிப்படைப் பிரச்னை ஆகும்.

சமுதாயக் கொடுமைகளுக்குச் சான்று தேடிப் போகிறவர்கள் பசியை மட்டும் காண்பதில்லை. பாலுறவுகளில் ஒரு கொடுமையான சமுதாயம் எவ்வளவு கோரங்களை விளைவித்திருக்கிறது என்பதையும் காண்பார்கள்.

அடிமைச் சமூகங்கள் கிளர்ந்தெழுந்தபோதும் நிலப்பிரபுத்துவச் சமுதாயங்கள் சாய்கிறபோதும் அந்தச் சமுதாயத்துப் பெண் மக்களும். ஆண் பெண் உறவுகளும் எந்த அளவு நெருக்கப்பட்டன என்பதைப் பார்க்குமிடத்து,

அந்தப் புரட்சிகளுக்குப் பசி மாத்திரமல்ல. இந்தப் பாலுணர்வுப் பிரச்னைகளும் கூட சமபங்கு வகிக்கின்றன என்று காணமுடியும்.

பாலுணர்வுப் பிரச்னை என்பது ஏதோ பணக்கார வர்க்கத்துப் பிரச்னை என்று எண்ணுவது வடிகட்டிய பாமரத்தனமாகும்.

பாலுறவு பற்றிய ஆரோக்கியமான கண்ணோட்டமில்லாத தனி மனிதன் வளர்ந்த மனிதனாக மாட்டான். அப்படிப்பட்ட சமுதாயம் வளர்ந்த சமுதாயம் ஆகாது.

இந்த ரிஷிமூலத்து ராஜாராமனுக்கும் சாரதா மாமிக்கும் ஏற்பட்ட உறவு எந்தச் சமுதாயத்திலும் ஏற்படலாம்; ஏற்படும். அப்படி ஏற்படும்பொழுது அதன் விளைவுகள் ரிஷிமூலம் கதையில் ஏற்பட்ட மாதிரி இந்தச் சமுதாயத்தில் மட்டுமே ஏற்பட முடியும்.

நம்மைவிட வளர்ச்சியடைந்த சமுதாயங்களில் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் ஏற்படுவதில்லை என்பதல்ல; அதற்கு அவர்கள் இவ்வளவு முக்கியத்துவம் தந்து அதற்காக அழிந்து போவதில்லை.

எனது சாரதா மாமி, ராஜாராமனை விடவும் ஆரோக்கியமான மனம் கொண்டவள். அவளால் அதை ஜீரணித்துக் கொள்ள முடிகிறது. அந்தத் தவறைப் பெருந்தன்மையோடு மறக்க முடிகிறது.

ஆனால், ராஜாராமனுக்குப் பாலுணர்ச்சி பற்றிய பய உணர்ச்சி மட்டுமே இருக்கிறதே தவிர ஆரோக்கியமான பார்வை இல்லை. எனவேதான் அவனால் தன்னைத்தானே மன்னித்துக் கொள்ள முடியவில்லை.

தனது கதைக்கு ராஜாராமனே தீர்ப்பு வழங்குகிறான்; ஆற்றின் இக்கரையில் அமர்ந்துகொண்டு சுடுகாட்டில் எரிகின்ற ஒவ்வொரு சிதையிலும் தன்னை வைத்து எரித்துக் கொள்கிறானே.

ஏ! விமர்சனப் பெரியோர்களே, இதற்கு என்ன விளக்கம் காண்கிறீர்கள்? ராஜாராமனின் தத்துவங்களெல்லாம், அவன் நினைப்பெல்லாம், அவன் பேச்செல்லாம், ஆசிரியரின் ஊதுகுழல்களே (MOUTH PIECE) என்று நீங்கள் முடிவு கட்டுவீர்களேயாயின், ஏ புத்திசாலிகளே! (மன்னிக்கவும்) என்று அழைத்துச் சிரிப்பதைத் தவிர வேறு நாகரிகமான வார்த்தைகள் எனக்குக் கிடைக்கவில்லை.

ஆனால் அந்த ராஜாராமன் மீது எனக்கு நெஞ்சு நிறைந்த அனுதாபம் உண்டு. ஒரு நோயாளியிடம் டாக்டருக்கு உள்ள அனுதாபம் போன்றது அது.

ஒரு மனநோயாளியின் மன உணர்வுகளைத் தன்னிலையில் இருந்து எழுதுவதன் மூலம் விமர்சகர்களையே அதை என் நிலை என்று நான் எண்ண வைத்துவிட்டேன் என்றால் என் எழுத்தின் வலிமைக்காக நான் கர்வம் கொள்கிறேன்.

ரிஷிமூலம் என்பது ராஜாராமனின் புகழ்பாட வந்த காவியம் அல்ல, வாழ்க்கையின் அக்கரைக்குப் போய்ச் சிதையேற வேண்டிய ஒரு ஜீவன் இக்கரையிலேயே வெந்து புகைந்து கொண்டிருப்பதைக் காட்டுகிற வேதனைச் சித்திரமாகும். அது ஒரு இலக்கியாசிரியனின் கரத்தால் வரையப்பட்ட கேஸ் ஷீட் ( Case Sheet )

அவனை ரிஷி என்று நானும் சொல்லவில்லை; அவனும் சொல்லவில்லை.

அப்படிச் சொன்னவர்களைப் பார்த்து அவன் சிரித்திருக்கிறான்.

அவனுடைய வாதங்களை மறுப்பதற்குச் சராசரி அறிவு போதும். அதற்கு காந்தியையும் கார்ல்மார்க்ஸையும் துணைக்கு அழைத்துக் கொண்டு வரவேண்டாம்.

ராஜாராமன் ஒரு மன நோயாளி. ஒரு மனநோயாளியின் மனசுக்குள்ளே நிகழ்கிற சம்வாதங்கள், தர்க்கங்கள், சுய மறுப்புக்கள் சுய தரிசனங்கள் எவ்வளவு அற்புதமாக

நிகழ்கின்றன என்பதைக் காணும்போது இவன் இப்படி ஆனதற்கு நாம் வருத்தம் கொள்ளுதல் வேண்டும்.

மூடத்தனமான சமூக-குடும்பக் கட்டுகளும் ( Taboos ) தனக்குத்தானே போட்டுக்கொள்ளுகிற கட்டுகளும் ( Inhibitions ) சமுதாயப் பிரச்னைகள் அல்லவா?

இப்படிப்பட்ட போலித்தனமான மூர்க்கத்தனமான ( Taboos ) கட்டுக்களை மதங்களும் மடாலயங்களும் போற்றி பாதுகாத்துப் பரப்பியபோது. பால்ஸாக் போன்றவர்கள் அந்தத் திரைகளை அகற்றி ஒளி சொறிந்து காட்டியபோது அவற்றையும் பாலுணர்ச்சிக் கிளர்ச்சிக் கதைகள் என்று சமுதாயத்தை 'ஜாக்கி' வைத்து உயர்த்துவோர் பழித்ததும் உண்டு. ஆனால் காரல் மார்க்ஸ் பால்ஸாக்கைப் பற்றி அப்படிக் கணித்ததில்லை.

இன்று நமது சமுதாயமே ஒரு மடமாகவும், ஒவ்வொரு தனி மனிதனும் பாதிச் சாமியாராகவும் வேஷம் போடுகிற பண்பாடு வளர்ந்து வருவதை நான் காண்கிறேன்.

எனவே இங்கே SEX ஒரு பிரச்னையாகிறது. இது ஒரு சமுதாயப் பிரச்னையாகும்.

இப்படிப்பட்ட கட்டுகளினாலும் இந்தச் சமுதாயத்தில் சிறந்த தனி மனிதர்கள் உருவாக முடிவதில்லை. கல்வியும் பொருளாதார அந்தஸ்தும் இருந்தும்கூட மனவளம் படைத்த மனிதர்கள் இங்கே உருவாவதற்குச் சிரமங்கள் உள்ளன.

இதுதான் ஆடும் நாற்காலிகள் கதை.

சிறந்த தனி மனிதர்கள் உருவாக வாய்ப்பற்ற சமுதாயம் சிறந்த சமுதாயம் ஆகாது.

ஒரு சிறந்த சமுதாயத்தை உருவாக்குவதற்காகப் போராடுகிற தன்மை இல்லாத தனி மனிதத்துவத்துக்கு அர்த்தமில்லை. செக்கு மாடுகளை உற்பத்தி செய்யும் சமுதாயம் தேங்கி அழிகிற ( Philistone ) சமுதாயமாகும்.

அரசியல் அரங்கிலும் பொருளாதாரத் துறையிலும்கூட, ரொம்ப முற்போக்கான வாதங்களை வைத்திருப்பவர்கள், பாலுணர்வு பற்றியும் தனிமனித நெறிகள் பற்றியும் ஒரு முதலாளித்துவ சமுதாயத்தில் கடைப்பிடிக்கப்படுகிற வளர்ச்சிக் கண்ணோட்டம் கூட இல்லாதவர்களாய் இங்கே இருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் இவர்கள் பிற்போக்காளர்கள் என்று வர்ணிக்கிறவர்களுக்குச் சற்றும் குறையாத நிலப்பிரபுத்துவச் சமுதாய மனப்பான்மை ( Feudal mentality ) கொண்டிருக்கிறார்கள் என்பது இவர்கள் விமரிசனங்களிலிருந்து பெற முடிகிறது.

எனவேதான் அரசியல், பொருளாதாரம் ஆகிய பிரச்னைகளில் ஏதோ ஒரு இயக்கத்தோடு தற்காலிகமாகவாவது என்னால் இணைய முடிந்தாலும் ஒரு இலக்கியவாதி என்கிற முறையில் இந்த இயக்கங்களையெல்லாம் கடந்த அல்லது இவற்றோடு சம்பந்தமில்லாத, சம்பந்தமிருந்தாலும் அந்தச் சம்பந்தங்களுக்குச் சம்பந்தமில்லாத ஒரு அறிவு ஜீவி என்கிற தரத்தில் ( Intellectual level ) மட்டுமே சில தனி மனிதர்களோடு என்னால் ஒருமை காண முடிகிறது.

இந்தக் காலத்தில் நானோ இவர்களோ தனி மனிதர்களாக இருப்பது தவிர்க்க முடியாதது. இந்தத் தனி மனிதர்கள்தான் நாளை நிகழவிருக்கும் ஓர் அறிவு இயக்கத்தின் முன்னோடிகள் என்று நான் நம்புகிறேன்.

ஆகையினால் இந்தக் காலச் சூழ்நிலையில் இந்தத் தனி மனிதத்துவம் ( Individuality ) காப்பாற்றப்பட வேண்டும் என்ற பிரக்ஞையோடு நான் வாழ்கிறேன்.

இந்தத் தனிமனிதத்துவம் தனி மனிதத்துவத்துக்காக அல்ல. இந்தத் தனி மனிதத்துவமும் சமுதாயத்துக்காகவே!

நான் சமுதாயக் கண்ணோட்டமுடைய - ஆனால் சமுதாயம் என்ற பேரில் காட்டுகிற சலசலப்புகளுக்கு அஞ்சாத தனி மனிதன்.

‘நான்’ என்று சொல்வதே எனது தன்னகங்காரத்தைக் காட்டுகிறது என்று சொல்ல வருகிறவர்கள் தங்கள்மீதே மரியாதை அற்றவர்கள் என்று நான் கருதுகிறேன்.

நான் பற்றி எத்தனை விமரிசனங்கள்!

“நான்” என்பது EGO என்பாரும், மாயை என்பாரும், பொய் என்பாரும், அநித்தியம் என்பாரும்...

என்னைப் பொறுத்தவரை - நான் என்பது EGO எனின், இந்த EGO தான் மாயை எனின், இந்த மாயைதான் பொய் எனின், இந்தப் பொய்தான் அநித்தியம் எனின். இந்த அநித்தியம்தான் சாசுவதமான, மெய்யான, உன்னதமான வாழ்க்கையின் அர்த்தம் ஆகும்.

‘அஹம் பிரம்மாஸ்மி’ - நான்தான் பிரம்மம்.

“நான்” என்று பேசும்போது நான் உன்னையோ நம்மையோ மறக்கவில்லை. உன்னையும் நம்மையும் மறுக்காமல் இருப்பதற்கே நான் என்னை நம்புகிறேன். உன்னையும் நம்மையும் மதிக்கிறவன் என்பதனாலேயே நான் உன்னோடு பேசுகிறேன்.

உன்னோடு சேர்ந்து நாமாகி, தன்னை இழந்து, பின் தலையையும் இழந்த கபந்தமாகித் தறிகெட்டு ஆட நான் சம்மதியேன்.

அப்படி ஆடுகிற உங்களுக்குப் பெயர் சமுதாயம் எனில், ஏ! ஆடி அழிகிற சமுதாயமே! உன்னோடு நான் இப்போது பேசுகிறேன்.

நான் உன்னில் ஓர் அங்கம்தான். ஆனால் நான் உன்னோடு அழிகிற அங்கம் அல்ல. உன்னை அழிக்கிற அங்கம். நான் உன்னை அழித்து இன்னொன்றை உருவாக்குகிற அங்கத்தின் அம்சம் இருக்கும் உன்னோடு எனக்கு இருக்கும் உறவைவிட இனி உருவாகப்போகும் அதற்கும் எனக்கும் நெருக்கம் அதிகம். நான் அப்போது இல்லாமற்கூடப் போகலாம். ஆனால் நான்

பிரதிநிதித்துவம் கொள்கிற அந்த ‘நான்’ அதில் ஓர் அங்கமாக இருக்கும்.

உனக்கும் எனக்கும் உள்ள முரண்பாட்டில்தான் நீயே மாறி வளர்வாய். இந்த முரண்பாட்டை முனைப்பாகக் காட்டியவர்கள் தான் உன்னை மாற்றியும் வளர்த்துமிருக்கிறார்கள்.

அவர்கள் காலத்தில் நீ அவர்களை எவ்வளவு கொடுமையாகக் காவு கொண்ட போதிலும் உன்னோடு முரண்பட்ட அவர்களுக்குத் தான் - தலை இழந்து உன்னோடு கபந்தங்களாய் ஆடிப் பலியிலே பங்கு கொண்டார்களே அவர்களுக்கு அல்ல - நீ கடமைப்பட்டிருப்பதாக எப்போதும் சொல்லிக்கொண்டே இருக்கிறாய்.

எனவே, நீ என்னைத் தூக்கி எறிந்துவிடுவாய் என்ற அச்சுறுத்தலுக்கு நான் பயப்படமாட்டேன்.

நீ தூக்கி எறிந்தவர்களெல்லாம் ‘சிறப்பான எதிர்காலம்’ என்ற தொலைவிலே போய் விழுந்து சிரஞ்சீவியாய் நின்றார்கள். உன்னோடு சேர்ந்து உன் பேரால் ஆடியவர்கள் எல்லாம் உன்னோடு சேர்ந்தே காலப் புழுதியில் கரைந்தார்கள்.

என்னிடம் யாரும் சமுதாயப் பூச்சாண்டி காட்ட வேண்டாம்.

இந்தச் சமுதாயத்தை என் எழுத்து கெடுத்துவிடும் என்ற குற்ற உணர்வு எனக்கு இல்லை. புதிதாகக் கெடுப்பதற்கு இங்கு ஒன்றும் இல்லை. எனது எழுத்துக்களைப் பாடப் புத்தகமாக வைக்கச் சொல்லி நான் மனுப் போடவில்லை. எனது எழுத்துக்களுக்கு அந்தத் தகுதி இல்லை என்று நான் சொல்லவில்லை. உங்கள் பள்ளிகளுக்கு அந்தப் பக்குவம் இன்னும் வரவில்லை என்று சொல்லுகிறேன்.

நான் நிர்வாண நிலையை வர்ணித்துவிட்டதாகச் சிலர் கண் கூசுகிறார்கள். எனது நிர்வாணத்திலும் தாய்மை உண்டு.

இங்கே பலர் கதைகளில் பாத்திரங்களுக்குக் கட்டுகிற ஆடைகளே மிக ஆபாசமானவை.

பாலுணர்வைக் கிளர்த்துகிற கதைகளை நான் எழுதியதில்லை. பாலுணர்வு பற்றிய பிரச்னைகளைப் பற்றியே நான் கதை எழுதுகிறேன்.

வறுமையையும் ஏழ்மையையும் காட்டியபோது நான் அனுதாபப் பிச்சை கேட்டதில்லை. அங்கேயும் வாழ்வின் துடிப்பையும் அதன் மகத்துவத்தையும் நான் காட்டி இருக்கிறேன். அந்த மகத்துவத்தைக் காட்டவே வறுமையைப் பின்னணியாக வைத்தேன்.

ஏழைகளின் உழைப்பைத் திருடுகிற மாதிரி அவர்கள் உணர்ச்சியைத் திருடுவதும் ஒரு கேவலமான சுரண்டல் என்று நான் உணர்ந்திருக்கிறேன்.

ஒரு கட்சியின் கொள்கைத் திட்டத்துக்கு உட்பட்டு எழுதுவதுதான் முற்போக்கு இலக்கியம் என்பதை அந்தக் கட்சியின் முழுநேர ஊழியனாக இருந்தபோதுகூட நான் ஒப்புக்கொண்டதில்லை.

சமீபத்தில் வெளிவரும் எனது கதைகளில் ஆங்கிலமும் தமிழும் கலந்திருப்பது குறித்து நான் மேல்தட்டு வட்டாரத்தின் மன உணர்ச்சிகளை எழுதிப் பிற்போக்கு இலக்கியம் படைப்பதாகச் சில முற்போக்கு வீரர்கள் தாண்டிக் குதித்திருக்கிறார்கள்.

ஆங்கிலம் பிற்போக்கு பாஷை என்று யார் சொன்னார்களோ இவர்களுக்கு? மேல் தட்டு வர்க்கத்தினருக்கு இலக்கியத்தில் இடமே கிடையாது என்பது இவர்கள் எங்கு கற்ற முற்போக்குச் சூத்திரமோ?

மாக்ஸிம் கார்க்கியின் ‘ஃபோமா கார்தியே’வும் ‘ஆர்ட்டமொனாவ்’ஸும் மேல் தட்டு வர்க்கத்தினரின் மன உளைச்சலைப் பிரதிபலிக்கவில்லையா?

ஏன்? ‘டான் நதி அமைதியாக வழிகிறது’ என்ற ஷொலொகோவின் நாவல் ஒரு எதிர்ப் புரட்சிக்காரனையே

(COUNTER REVOLUTIONARY) கதாநாயகனாகக் கொண்டு ஆக்கப்பட்டிருப்பதால் அது எதிர்ப்புரட்சி இலக்கியமாகிவிடுமா?

நான் சமீபத்திலே நடந்த ஒரு கருத்தரங்கிலே சொன்னேன்: நான் தமிழில் ஒன்றுமே படிப்பதில்லை என்று கற்றவர்கள் மத்தியில் பேசுகிறேன் என்ற நம்பிக்கையில் அவ்வாறு கூறினேன். நான் அதை ஆங்கிலத்தில் சொன்னால்தான் புரியும்.

I have nothing to study in Tamil என்று இதற்கு அர்த்தம். சாரமற்ற வம்புகளும் சத்தில்லாத பொழுதுபோக்குக் குப்பைகளும் தமிழில் மலிந்து வருகிறது என்பதை (அவற்றைப் படித்துத்தான் சொன்னேன்) இங்கே தமிழில் படிக்க எதுவுமில்லை என்று. சோஷலிஸத்தையும் மார்க்ஸிஸத்தையும் கூட நாம் ஆங்கிலத்தில் தான் கற்க முடிந்தது.

நான் சந்தித்த... என்னை உருவாக்கிய கம்யூனிஸ்டுகள் எல்லாம் அறிவுபூர்வமான எல்லா விஷயங்களையும் என்னோடு ஆங்கிலத்தில்தான் விவாதித்தார்கள்.

நான் இந்தியர்களான விவேகானந்தரையும், காந்தியையும், நேருவையும் ஆங்கிலத்தின் மூலம்தான் அறிந்தேன்.

ஆங்கிலத்தை இன்னும் தமிழர் வாழ்க்கை ஒதுக்கிவிடவில்லை. அறிவியல் வாழ்க்கையால், முதல்தர அறிவுஜீவிகளால் ஆங்கிலத்தை ஒதுக்கிவிடவும் முடியாது. வளர்கிற வர்க்கம் மொழியில் இத்தனை சனாதனம் கொள்ளுவதில்லை.

தமிழில் பத்திரிகை ஆதிக்கத்தை மீறி நேரடியாக நூல் ஆசிரியர்களால் மக்களோடு தொடர்பு கொள்வதற்கு வசதியாகப் புத்தக விற்பனையைப் பெருக்குவதற்கு யோசனை கேட்டுக் கூடிய கருத்தரங்கத்தில் பொருத்தமான உபயோகமான ஒரு கருத்தினை நான் கூறினேன்.

‘அப்படியானால் ஏன் தமிழில் மாத்திரம் கதையை எழுதிக் குவிக்கின்றீர்கள்?’ எனத் தமிழ் மகன் வினா எழுப்பினால் என்ன சொல்வாரோ அவர் என்று இவர்கள் தமிழ்ப்பற்றுக் கேடயத்தோடு என்னை மடக்கி விட்டார்களாம், மடக்கி.

பதில் சொல்கிறேன்; தமிழில் படிப்பதற்கு ஒன்றுமில்லை என்று என்னைப்போல் எவ்வளவு பேர் இருக்கிறார்கள் தெரியுமா? அவர்களையெல்லாம் படிக்க வைப்பதற்குத்தான் நான் தமிழில் எழுதுகிறேன்.

அறிவை, மனதைத் திறக்காவிட்டாலும் கண்ணையாவது திறந்து பார்ப்பவனுக்கு இந்த உண்மை தெரியும்.

இது எனது கர்வமான பேச்சு அல்ல. என்னை எதிர்த்துக் கட்சி கட்டுகிறவர்களுக்கு நான் ஒரு புரட்டனைச என்று காட்ட வேண்டியிருக்கிறது.

என்னை இவர்கள் காலைவாரிவிட முடியாது.

சமுதாயம் பற்றி, தனி மனிதன்பற்றி, சமுதாயத்துக்கும் தனி மனிதனுக்கும் இருக்கவேண்டிய உறவு பற்றி, தனி மனிதனுக்கு இருக்க வேண்டிய சமுதாயக் கடமைகள் பற்றி ஒரு சமுதாயத்தில் தனி மனிதன் வசிக்க வேண்டிய பாத்திரம் பற்றிய எனது கொள்கைகள் எப்போதுமே மாறவில்லை.

ஒவ்வொரு கதையிலும் இதை நான் சொல்லிக் கொண்டிருப்பது வெட்கக்கேடான காரியம்.

நான் எழுதி ஓய்ந்த பிறகு, என்னை முழுமையாகப் பயின்ற பிறகு, கணிக்க வருவதுதான் சரியான முயற்சியாகும். அப்போதும்கூட இரண்டு அபிப்பிராயங்கள் எழுவதற்கு நியாயம் உண்டு.

நான் இங்கே கூறிய இவை அனைத்தும் என்னை, என் கதைகளை அளக்க வருகிறவர்களுக்கு உதவியாக இருக்கட்டும் என்கிற நல்லெண்ணத்தோடுதான்.

தவறான அளவு கோலால் என்னை அளந்து தவறான கணக்குகளுடன் போகவேண்டுமென்று தீர்மானித்து

விட்டவர்களுக்கு உதவுவது என் நோக்கமல்ல.

எனது சிறந்த வாசகருக்கு இங்கே முன்னுரை என்பதன் பெயரால் நான் கூறியவை அனைத்தும் வீண் என்பதை நான் அறிவேன்.

இதற்குப் பின்னாலுள்ள அந்த இரண்டு கதைகளைக் கருதி - இலக்கிய சம்பந்தமற்ற, இலக்கிய விமர்சகர்களுக்கு மிக அவசியமான... இந்த முன்னுரைக்காக எனது சிறந்த வாசகர்கள் என்னை மன்னிப்பார்களாக.

இந்த இரண்டு கதைகளையும் வெளியிட்ட தினமணி கதிர், ஆனந்த விகடன் ஆகிய நிறுவனங்களுக்கும், மீனாட்சி புத்தக நிலையத்தாருக்கும் வழக்கம்போல் எனது நன்றி உரியதாகிறது.

21.9.1969

சென்னை-31.

- த. ஜெயகாந்தன்

# 1

கிருஷ்ணையர் வீட்டுக்கு முன்னால் அக்கிரஹாரத்தை ஒட்டிக் கிழக்கு மேற்காக இருப்புப் பாதை ஓடுகிறது. அதன்மீது ஒரு நாளைக்குப் பத்துப் பன்னிரண்டு தடவைகள் - அந்தக் கிராமத்துப் பெரும்பான்மையான மனிதர்களுக்கு நேரா நேரத்துக்கு மணி சொல்வதற்கு மட்டுமே பயன்படும் - ரயில்களும் ஓடுகின்றன. வீட்டிற்குப் பின்னால் காவேரி ஓடுகிறது. எங்கோ அந்த மலை முகட்டில் பெருமையோடு பிறந்ததும், பார்ப்பவர்களை மருட்டுகிற மாதிரிப் புரண்டு நுரை கக்கி, அலைகொழித்துப் பாறைகளைத் தழுவிச் சீறிப் பாய்ந்ததும், அகண்ட காவேரி என்று பெருகிய வாழ்வில் பெயரெடுத்ததும் - எல்லாம் பழங் கதையாகித் திரும்பி அடைய முடியாத இளமைக் கனவுகளை அரை நினைப்பில் அசை போட்டுக் கொண்டு நமுட்டுச் சிரிப்பும் கொட்டாவியுமாக நடை மெலிந்து செல்லும் ஒரு கிழவியைப்போல் ஒடுங்கிக் குறுகிய ஒரு

வாய்க்கால் மாதிரி, வீரியமிழந்த விசனத்துடன் தனது இறுதியை நோக்கி அமைதியாகச் சலசலத்து ஓடுகிறது காவேரி.

இப்போது சாமியாராகிவிட்ட கிருஷ்ணையரின் இரண்டாவது மகன் - ராஜாராமன் வீட்டின் முன் பக்கத்தில் தென்னங்கீற்று வேய்ந்த கொட்டகையின் முன் நாலாபுறமும் சதுரமாக வளைந்து நீளமான அமைத்த அந்த சிமெண்டு சார்ப்பில் உட்கார்ந்து கொண்டு, ஆலின் விழுதுகள் ஆடிக்கொண்டிருக்கும் ரயில்வே ஸ்டேஷன் பிளாட்பாரத்தையும் ரயிலையும் பார்த்துக் கொண்டிருப்பான்; அல்லது காவேரி ஆற்றங்கரையின் படித்துறை அருகே இருக்கிற பாழ்மண்டபத்தில் - ஜன நடமாட்டம் இல்லாதிருக்கும் பட்சத்தில் - உச்சிவெயில் நேரத்தில் மல்லாந்து படுத்து வலதுக் காலைக் குத்திட்டு ஊன்றி இடது காலை மடித்து வலக்கால் மூட்டின் மேல் கிடத்தி, இடது பாதத்தை வேகமாக - குமுட்டியை விசிறியால் விசிறுகிற வேகத்தில் ஆட்டிக் கொண்டு படுத்திருப்பான். சில வேளைகளில் ஒருக்களித்துப் படுத்துத் தலைமுடி வழிகின்ற பிடரிக்குக் கீழே உள்ளங்கையைத் தாங்கியவாறு காவேரியாற்றை வெறித்துப் பார்த்துக் கொண்டிருப்பான். அப்போதும் கூட அந்தக் குத்திட்ட காலும் அதன்மீது மடித்த மறுகாலும் ஆடுகிற பாதமும் அப்படியேதான் இருக்கும். அவனது கறுத்த கருமையில் மின்னுகின்ற தாடி நுனி காற்றில் அலைந்து மண்டபத்தின் தரையில் பட்டுப் புழுதியுறும். வலது கையில் விரல்களுக்கிடையே பீடி புகைந்து கொண்டிருக்கும்.

ராஜாராமன் உட்கார்ந்தாலும் சரி, படுத்தாலும் சரி அதிலே ஒரு ராஜ கம்பீரம் இருக்கும்.

காவேரியாற்றைப் பார்த்தது போலவே சிமெண்டு சார்ப்பில் வீட்டின் முன்னால், தெருவையும் ரயில்வே பிளாட்பாரத்தையும் பார்த்துக் கொண்டிருக்கும்போது அவன் தனது இடது காலை வலது தொடைக்கு மேலே இழுத்து, மூங்கில் மாதிரி நிறமும் தன்மையும் கொண்ட

முழங்காலைப் புஜத்துக்குக் கீழே கொணர்ந்து யோகதண்டம் மாதிரி நிறுத்தி, அதன்மீது நீளமாக வலது கையை நீட்டியவாறு உட்கார்ந்திருப்பான்... அப்போதும் அவனது நீண்ட விரல்களுக்கிடையே பீடி புகைந்து கொண்டிருக்கும். அந்த வாகு எல்லாருக்கும் வராது.

காவேரியாற்றங் கரையிலோ அல்லது வீட்டின்முன் இருக்கும் சிமெண்டு சார்ப்பிலோ அவன் உட்கார்ந்திருந்தாலும் சரி, படுத்திருந்தாலும் சரி, அவன் பார்வை யாரையும் குறிப்பாக நோக்காது. அந்தக் கிராமத்திலுள்ள எல்லோருக்குமே அவனைத் தெரியும். அவனுக்கோ எதிரில் நிற்பவர்களைக்கூடத் தெரிவதில்லை. அவன் கண்கள் திறந்திருந்தாலும் எதிரில் இருப்பவன் இவன் தன்னைப் பார்க்கவில்லை என்றே உணர்வான். கூடப் பிறந்தவனையும், தன்னோடு தினசரி பழகிக் கொண்டிருப்பவரையும் கூடத் திடீரென 'யார் நீ?' என்று கேட்டு விடுவானோ என்கிற அளவுக்கு அவனது பார்வையில் அவன் தன்னையே ஒரு அந்நியனாக பாவித்தவனைப்போல் தோன்றுவான். அவன் தானாக யாரிடமும் பேசுவதில்லை. பேச்சுக் கொடுத்தால் பேசாமல் இருப்பதும் இல்லை. அப்படி அவன் பேசும்போது தன்னுள்ளே நிரந்தரம் கொண்டுவிட்ட மௌனம் கலையாமலே பேசுகிறான் என்பதுபோல் அவனிடம் பேச்சுக் கொடுத்தவருடைய பேச்சின் எதிரொலியாகவே அவன் பேசினான். அவன் பேசுவது மௌனம் மாதிரியே இருக்கும். எனவே அவனிடம் யாரும் பேசுவதில்லை.

சமயங்களில் ஏதோ நினைவில் தானே சிரித்துக் கொள்வான் அந்தச் சிரிப்பு ரொம்ப மோகனமாக இருக் கும். அந்த மோகனமே அந்தச் சிரிப்பைச் சந்திக்கிறவர்களின் கண்களைக் கலங்க வைக்கும் சோகம் நிறைந்ததாகவும் இருக்கும். இந்தத் தாடியையும் பீடிப் புகையையும் கடந்து அந்தச் சிரிப்பில் அவன் ஒரு குழந்தையெனத் தோன்றுவான்.

* * *

கிருஷ்ணையர் குடும்பம் ரொம்பவும் ஆசாரமானது. அவரது மூத்த பிள்ளை ரகுபதி சரியான கிராமத்து ஆள் என்றாலும் அந்தக் குடும்பத்தில் ஆசார கௌரவத்தை இதுநாள் வரை அவன் தான் காப்பாற்றி வருகிறான். கிருஷ்ணையர் மாதிரி சாஸ்திரி ஞானமோ வைதீகர்களின் மத்தியில் ஒரு பெரும் மரியாதையையோ ரகுபதியினால் பெறமுடியாது என்றாலும் அந்தக் குடும்பத்தின் புறப்பெருமைகளைக் காப்பாற்றுகிற அளவுக்கு அவனால் ஆசாரங்களை அனுஷ்டிக்க முடிந்திருக்கிறது.

கிருஷ்ணையர் தன்னைவிடவும் ஞானஸ்தனாகவும் லௌகீக விஷயங்களில் தன்னைவிட சமத்காரனாகவும் இந்தக் குடும்பத்தின் பெருமையை ஒரு பெரும் சிகரத்துக்குக்கொண்டு போகக்கூடியவன் என்று நம்பியிருந்த இந்த ராஜாராமன் இப்படித் தாடியும் பீடியும் காவியும் கந்தலுமாய் வந்து நிற்கும் கோலத்தைப் பார்த்து வயிறெரியாமல் இவன் தேசாந்திரம் போயிருந்த அந்தப் பத்தாண்டு காலமும் இவனையே எண்ணி எண்ணி ஏங்கி ஏங்கி 'ராஜாராமா ராஜாராமா...' என்று புலம்பிக் கொண்டே போன வருஷம் போய்ச் சேர்ந்து விட்டார்.

ராஜாராமனின் இந்தக் கோலத்தையும் ஆசாரங்கெட்ட நடத்தைகளையும் பார்த்த அக்ரஹாரத்துப் பெரியவர்கள் 'இவனை இப்படிப் பார்க்கிற பாவத்தைச் செய்யாமல் போய்ச் சேர்ந்தானே அந்தப் புண்ணியவான்' என்று கிருஷ்ணையரைப்பற்றிப் பேசிக் கொள்வார்கள்.

ஆனால் அருவருப்போடு முகம் சுளித்து ராஜாராமனைப்பற்றி அவனுக்குப் பின்னால் நினைத்துக் கொள்கிற அதே பெரிய மனிதர்கள் அவனை நேருக்கு நேர் கண்டு, அந்தச் சிரிப்பில் மோகனத்தைச் சந்திக்க நேரும்போது, 'துறவியாய்ப் போனவனுக்கு ஆசாரமாவது, அனுஷ்டானமாவது' என்று சமாதானமும் கொண்டார்கள்.

போன வருஷம் கிருஷ்ணையர் இறந்தபொழுது வீடு நிறைந்து வந்திருந்த உறவுக்காரர்களும் அவரது மூன்று பெண்களும் மூத்தவன் ரகுபதிக்கே சொத்து முழுவதும் -

பங்குக்கு இன்னொருவன் பிறந்திருந்தும் அவன் இருக்குமிடம் தெரியாமல் போனதால் - மொத்தமாய்ச் சேரப்போகிற 'அதிர்ஷ்டத்தை' எண்ணி எண்ணிப் பெருமூச்சுவிட்டு, அதைச் சொல்லிக்கொள்ள முடியாமல் கிருஷ்ணையரின் ஆசை மகன் ராஜாராமன் இல்லையே என்று பெரிதாகப் பிரலாபித்து அழுதார்கள்.

கிருஷ்ணையர் உயிருடன் இருக்கையிலேயே தனது மூன்று பெண்களுக்கும் சேர வேண்டியதைப் பிரித்துக் கொடுத்துவிட்டார். இரண்டாவது பிள்ளை ராஜாராமன் எங்கிருந்தாலும் தான் சாவதற்கு முன் வந்துவிடுவான் என்கிற நம்பிக்கையில் அல்லது ஆசையில் பெரியவனுக்குப் பிரித்த பங்கு போக இளையவனின் பங்கைத் தானே பாதுகாத்து வந்தார்.

ராஜாராமன் வருவதற்குள்தான் போய்விட்டால் அந்தச் சொத்துக்களைத் தன்னைப் போலவே பாதுகாத்து, அதிலிருந்து எந்த லாபமும் பெறாமல் அதன் பலன்களை அதிலேயே போட்டுப் பெருக வைத்து அவற்றைக் காபந்து செய்கிற கடமையை மட்டும் புரிந்து, ராஜாராமன் வந்த பிறகு - அவன் நிச்சயம் வருவானாம் - அவன் வசம் ஒப்புவிக்க வேண்டியது ரகுபதியின் பொறுப்பு என்று உயிலும் எழுதி வைத்திருந்தார் கிருஷ்ணையர்.

ராஜாராமனுக்குக் குடும்பத்தில் அம்பி என்று பெயர். அந்தக் குடும்பத்தையும் அந்தச் சொத்துக்களையும் அவன் பிரிந்து பத்து ஆண்டுகள் ஆன போதிலும் இந்த அம்பியின் பெயரால் அந்தக் கிராமத்தில் வீடும் வயலும் தோப்பும் பிரிக்கப்பட்டு, 'அம்பி வயலில் நடவு' என்றும் 'அம்பி வயலில் அறுவடை' என்றும் 'அம்பி தோட்டத்துப் பழம்' என்றும் அந்தக் குடும்பத்திலும், கிராமத்திலும் அவன் பெயர் விளங்கிக் கொண்டிருந்தது.

ராஜாராமன் தன் குடும்பத்தின் பெயரை எப்படி எப்படி எல்லாமோ விளங்க வைப்பானென்று கிருஷ்ணையர் பெரியதாக நம்பியிருந்தார். அந்த நம்பிக்கை ராஜாராமன் தன் பிள்ளை என்கிற அசட்டுப் பாசத்தினால் ஏற்பட்டதல்ல.

அவ்விதமெனின் அப்படிப்பட்ட அசட்டுப் பாசமோ குருட்டு நம்பிக்கையோ சீமந்த புத்திரனான ரகுபதியிடமே அவருக்கு ஏற்பட்டிருக்கலாம். அவ்விதமின்றி ராஜாராமனின் மேல் மட்டும் அப்படி ஒரு நம்பிக்கை அவருக்கு ஏற்பட்டது மிகவும் அர்த்தமிக்கது.

ராஜாராமன் இளவயதிலேயே அதீத ஞானமும் வைதீக ஆசாரங்களும் கொண்டிருந்தான். ரகுபதி முரடன்; விளையாடுவான்; விஷமம் செய்வான்; படிப்பு ஏறாது என்று எல்லாராலும் கணிக்கப்பட்டவன்.

ராஜாராமன் ஆரம்பத்தில் அக்ரஹாரத்து வேதபாட சாலையிலும், பின்னர் மாயவரத்தில் ஹைஸ்கூலிலும் சென்று படித்தான். பதினைந்து வயதில் அவன் ஹைஸ்கூர் படிப்பை முடித்தபோது கிருஷ்ணையருக்கு அவனை மேலும் படிக்க வைக்க வேண்டும் என்று தோன்றியது. அவர் பரம்பரையிலேயே கிருஷ்ணையரைத் தவிர யாரும் ஆங்கிலக் கல்வி கற்றதில்லை. கிருஷ்ணையர் மாத்திரம் அதில் முயன்று ஹைஸ்கூல் படிப்பை முடித்துச் சிதம்பரத்தில் போய் அண்ணாமலை யூனிவர்சிடியில் இண்டர்மீடியட்டில் சேர்ந்த ஒரு வருஷத்திலேயே ‘இவ்வளவு போதும்’ என்று படிப்பை நிறுத்திவிட்டார். எனவே தன் மகனாவது எவ்வளவு வேண்டுமானாலும் படிக்கட்டும்; இவனால் படிக்கவும் முடியும்; தன்னால் படிக்க வைக்கவும் முடியும் என்பதால் அந்த ஆசை அவர் மனத்துள் செழித்தது.

ராஜாராமனைக் கொண்டுபோய் அண்ணாமலை யூனிவர்சிடியில் சேர்த்தார்.

அப்போது கிருஷ்ணையரின் பால்ய கால நண்பரான சாம்புவையர் சிதம்பரத்தில் ஹோட்டல் நடத்திக் கொண்டிருந்தார்.

சாம்புவையர் பாலகாட்டுப் பிராமணர். ரொம்ப சாது; தானுண்டு தன் ஹோட்டல் உண்டு என்றிருப்பார். எப்போதாவது நினைத்துக்கொண்டால் கிருஷ்ணையருக்கு ஒரு கார்டு எழுதிப் போடுவார்;

‘கிருஷ்ணா... நேத்திக்கு ஏதோ பேச்சிலே உன்னைப் பத்தி நெனச்சுண்டேன். பார்க்கணும் போல இருக்கு. கண்ணிலே நிக்கற மாதிரி இருக்கு நாளைக்கிப் பொறப்பட்டு வரேன். கோர்ட்டு, கச்சேரி கும்மோணம் மாயவரம்னு போயிடாதே’ என்று பேசுகிற மாதிரியே பெரிய பெரிய எழுத்தில் கார்டு நிறைய எழுதுவார்.

சாம்புவையருக்குச் சாரீரம் சரீரம் இரண்டுமே கொஞ்சம் கனம். மெதுவாகப் பேசினால் தொண்டை அடைத்துக்கொண்டு சத்தமே வெளியே வராது. குரல் கம்மிப் பிசிறு அடிக்கும். எனவே மேல் ஸ்தாயியில் ‘தம்’ கட்டி அடிவயிற்றிலிருந்து குரல் எழுப்பித்தான் பேசுவார்.

சாம்புவையரின் கடிதத்தைப் படிக்கும்போது அந்தப் பெரிய பெரிய எழுத்துக்கள் ரொம்ப சப்தமாகத் தெரியும் கிருஷ்ணையருக்கு.

சாம்புவையர் கிராமத்துக்கு வந்துவிட்டால் ஒரு நாள் முழுவதும் எப்படித்தான் நிமிஷமாய்க் கரைந்து போகிறது என்றிருக்கும் கிருஷ்ணையருக்கு.

காலை ஆறு மணிக்கு வருகிற பார்சல் ரயிலில் ஏறி வருவார் சாம்பு. இரவு பத்து மணிக்குப் போகிற இன்னொரு பாசஞ்சர் வண்டியில் திரும்பி விடுவார். முப்பது மைல் தூரம்; பாசஞ்சர் ஆனதால் ஒன்றரை மணிப் பிரயாணம்.

அநேகமாய் மாதத்துக்கு ஒரு முறை - ஹோட்டலுக்கு வாராந்தர விடுமுறை நாளான புதன் கிழமையன்று கிராமத்துக்கு வந்து கிருஷ்ணையரைப் பார்த்துச் செல்வார் சாம்பு.

கிருஷ்ணையரின் மனைவி இருந்த காலத்திலும் சாம்புவையர் தனியாகத்தான் வருவார். இருபத்தைந்து வருஷத்துக்கு முன்னால் கிருஷ்ணையரின் மனைவி இந்துமதி ஆறாவது பிரசவத்தில் காலமானாள். அவள் இருக்கும் ஆறாவது பிரசவத்தில் காலமானாள். அவள் இருக்கும் வரை கூடத்தில் தூணருகே இவர்களுக்கு மணை

போட்டு இலையில் பரிமாறிய பிறகு கதவோரம் ஒதுங்கி நின்றுகொண்டு ஒவ்வொரு தடவையும்,

‘அடுத்த தடவை வரச்சே அவாளையும் அழைச்சுண்டு வாங்கோ’ என்று சொல்லிக்கொண்டே இருப்பாள்.

சாம்புவையர் வெட்கப்பட்டவர் மாதிரி இலையில் குனிந்த தலையை நிமிர்த்தாமலேயே, ‘ஆகட்டும். நீங்க தான் ஒரு தடவை வரப்படாதா?’ என்று சொல்வாரே தவிர, ஒரு தடவைகூட ‘அவாளை’ இங்கே அவர் அழைத்து வந்ததும் இல்லை. ‘இவாளும்’ ஒரு தடவை கூட அங்கே போனதுமில்லை.

கிருஷ்ணையருக்கும் சரி. சாம்புவையருக்கும் சரி; பரஸ்பரம் ஒருவர் துணை ஒருவருக்குக் கிடைத்தால் போதும்; உலகத்தையே மறந்துவிடுவார்கள். அவர் வரப்போகிறார் என்று தெரிந்ததும் எல்லாக் காரியங்களையுமே அன்றைக்கு ஒத்திப் போட்டுவிடுவார் கிருஷ்ணையர். ஆறுமணிக்கெல்லாம் ரயிலடிக்கு வந்து கிழக்கே இருந்து வரும் பார்சல் வண்டிக்காகக் காத்திருப்பார்.

நாளெல்லாம் வயலுக்கும் தோப்புக்கும் குடையை ஒரு கையிலும் வேட்டி முனையை மறுகையிலும் பிடித்துக்கொண்டு பேசிச் சிரித்தவாறு இருவரும் ஜோடியாக நடப்பார்கள். காலையில் ஒரு தடவை சாயங்காலம் ஒரு தடவை ‘ஓ’வென்று இரைந்து பேசியவாறே காவிரியில் ஒரு மணி நேரத்துக்கு மேல் குளிப்பார்கள். தோப்பிலோ, கிணத்து மேட்டிலோ, அக்ரஹாரத்திலோ, வீட்டுக்கு எதிரேயுள்ள கொட்டகையிலோ உட்கார்ந்து கொண்டு பட்சணம் கொறிப்பார்கள். பலாச்சுளையை நெய்யில் தொட்டுக் கொண்டோ, பேயன்பழத்தைத் தேனில் நனைத்துக் கொண்டோ, அந்தந்த சீஸனுக்குத் தகுந்த மாதிரி பழங்கள் சாப்பிடுவார்கள். சாவிக் கொத்தில் இருக்கின்ற கத்தியால் வெள்ளரிப் பிஞ்சை அழகாக நறுக்கித் தந்து சாம்புவை விருந்தோம்பல் செய்வார் கிருஷ்ணையர்.

தட்டு நிறைய வெற்றிலையும் சீவலும் புகையிலையும் இருக்கும். வெள்ளிக் கூஜா நிறையத் தண்ணீரும் வைத்துக் கொள்வார்கள். மாலை நேரத்தில் வீட்டிலிருந்து வேலைக்காரர்கள் இவர்கள் எங்கிருக்கிறார்கள் என்று தேடிக்கொண்டு இவர்களுடைய அளவளாவுதலுக்கு இடையூறில்லாமல், இருக்கும் இடம் தேடிக் காப்பியும் டிபனும் கொண்டு வந்து விடுவார்கள். இரவு சாப்பிட்ட பிறகு வீட்டுக்கு எதிரேயுள்ள ரயில்வே ஸ்டேஷன் பிளாட்பாரத்தில் காற்றாட உட்கார்ந்து கொள்வார்கள். அங்கே காற்று சுகமாக வீசும். சாம்புவையரை வழியனுப்பி வைப்பதற்காகத் தொலைவிலே கை கட்டியவாறு வேலைக்காரர்கள் நிற்பார்கள். கடைசியில் ரயில் வரும்நேரம் நெருங்க நெருங்கக் கிருஷ்ணையர்,

“இருந்துட்டு நாளைக்கு போகப்படதா?” என்கிற பல்லவியை ஆரம்பிப்பார்.

“அவள் காத்திண்டிருப்பாள். நான் ராத்திரிக்கே வந்துடறேன்னு சொல்லிண்டு வந்தேன். தனியா இருப்பாள்… காலையிலே வேலை இருக்கு…” என்று ஏதாவது ஒரு காரணத்தையோ அல்லது எல்லாக் காரணங்களையுமோ சொல்லிக்கொண்டு விடைபெறுவார் சாம்பு. அப்போதெல்லாம் ரகுபதி மட்டும் ‘சாம்பு மாமா, சாம்பு மாமா’ என்று இவரைச் சுற்றிக் கொண்டிருப்பான்.

ராஜாராமனைப் பார்க்க வேண்டுமென்றால் கூப்பிட்டனுப்பித்தான் காணமுடியும். கேட்டால்தான் பதில் சொல்லுவான். ஆனால் கேட்ட மாத்திரத்தில் தயக்கமில்லாமல் தெளிவாகச் சொல்லுவான். அழைத்த காரியம் முடிந்ததும், ‘நான் போகலாமா?’ என்று பெரிய மனுஷத் தோரணையில் கேட்பான். சும்மா ஆசைக்குக் கூப்பிட்டவர்களின் முகத்திலே அசடு வழிந்து விடும்.

சாம்பு மாமா வந்தவுடன் அவனைத்தான் தேடுவார். கிருஷ்ணையர் குழந்தைகள் எல்லாNமு தாயற்றவைதான் என்றாலும் இந்த ராஜாராமன் மட்டுமே தாயற்ற குழந்தைபோல் தோன்றுவான்; அவன் தாய்

இருக்கும்போதே அப்படித்தான் தோன்றுவான். எனவே அவனிடம் அவருக்கு ஒரு கனிவு. அவன் கண்களில் சுடர்விடும் ஏதோ ஒன்றில் அவருக்கு என்னமோ ஒரு மயக்கம். முன்புறம் சிரைத்த குடுமியும், உயர்த்திக் கட்டிய சிவப்புக் கரையிட்ட துண்டும் மெலிந்து சிவந்த உடம்பில் விலா எலும்புகள் தெரியும் மார்பின் மேல் பூணூலும் காண இவன் ஒரு வேதவித்து எனத் தோன்றும்.

சாம்புவையர் அவனைக் கூப்பிட்டு அனுப்பும் பொழுதெல்லாம் ஒன்று அவன் படித்துக் கொண்டிருப்பான்; அல்லது பூஜையறையில் தியானம் செய்து கொண்டிருப்பான். அவன் வந்தவுடன் அவனை எதற்கு அழைத்தோமென்பது மறந்து போகும் சாம்புவையருக்கு. அவனைப் பார்த்துக் கனிவாய்ச் சிரிப்பார். அருகே அழைத்து வாஞ்சையுடன் தடவிக் கொடுப்பார்: “ரொம்ப இளைச்சிருக்கியே! நன்னா சாப்பிடணும். எப்போ பார்த்தாலும் படிச்சுண்டே இருக்கப்படாது. கொஞ்சம் விளையாடவும் வேணும் ... கலகலன்னு சிரிக்கணும்...” என்றெல்லாம் சொல்லுவார். அப்போதும் அவன் மௌனமாகவே ‘உம்’மென்றிருப்பான்.

கிருஷ்ணையருக்கு மட்டும் இதையெல்லாம் பார்க்கும்போது சாம்புவையரின் புத்திர பாக்கியமற்ற குறை மனசுக்குப் புரிந்து, நெஞ்சம் கனத்துப் பெருமூச்சு வரும்.

ராஜாராமன் நன்றாகப் பாடுவான். அவன் குரல் ஏதோ ஓர் இனிமையான வாத்தியம்போல் ஒலிக்கும். அவன் சங்கீதம் பயின்றதில்லை. இருந்தாலும் சுருதி சுத்தமாக இருக்கும்; தாளம் தவறாது.

வரும்போதெல்லாம் ஒரு தடவையாவது அவனைப் பாடச் சொல்லிக் கேட்காமல் போனால் வந்த இடத்தில் எதையோ மறந்து வைத்துவிட்டதைப் போன்ற உணர்ச்சி ஊருக்குப் போன பிறகும் சாம்புவையருக்கு இருக்கும்.

ராஜாராமன் சொன்னதும் பாடுவான். தயக்கமோ பிகுவோ இருக்காது. ஏதோ தனக்குள்ளே சதா நேரமும் வியாபித்து நிகழ்ந்து கொண்டிருக்கும் நாதப் பிரவாகத்தை மற்றவர்களும் அனுபவிக்கட்டுமே என்கிற பெருந்தன்மைபோல் சட்டென்று ஒரு வாசலைத் திறந்தது மாதிரி, கேட்ட மாத்திரத்தில் கண்களை மூடி வாய் திறந்து ஒரு உபாசகன் போலப் பாடுவான் அவன்.

மகிஷாசுரமர்த்தினி ஸ்தோத்திரமும் ஸ_ப்ரபாதமும் பாடும்போது அவற்றை இயற்றியவனே இவன்தானோ என்று கேட்கிறவர்கள் மயங்குகிற மாதிரிப் பாடுவான். ஸம்ஸ்கிருத உச்சரிப்பு ஸ்பஷ்டமாக இருக்கும். அதே மாதிரித் தேவாரமோ திருப்புகழோ பாடும்போது தமிழ் உச்சரிப்பும் தெளிவாக இருக்கும்.

பாடி முடித்ததும் கண்களைத் திறந்து மௌனமாக அவன் பார்க்கும்போது. ‘நான் போகலாமா?’ என்று கேட்பது மாதிரி இருக்கும். சில சமயங்களில் கேட்டே விடுவான்; பிறருடன் தனது உடனிருப்பு ஓர் அநாவசியம் என்று கருதியது போலிருக்கும் அவன் தோரணை. யாரோ தன்னை எங்கோ அழைப்பது மாதிரியே - எப்போதும் அவன் புறப்படத் தயாராக இருப்பது போலவே இருப்பான்.

* * *

சாம்புவையர் அப்போதே கிருஷ்ணையரிடம் சொல்லி வைத்திருந்தார்: ‘கிருஷ்ணா! பத்தாவது முடிக்கிற வரைக்குத்தான் அம்பி உன் பிள்ளை. அப்புறம் சிதம்பரத்திலே கொண்டு வந்து என்னண்டை விட்டுடு.... அவன் காலேஜ் படிப்புப் பூரா - என் பொறுப்பு. என்ன சொல்றே? ...நீ என்ன சொல்றது? நான் சொல்லிட்டேன் அவ்வளவுதான்!”

- அதே மாதிரிப் பதினைந்து வயதில் ராஜாராமனைச் சிதம்பரத்தில் கொண்டுபோய்க் காலேஜில் சேர்த்துச் சாம்புவையர் வீட்டில் சாரதா மாமி கையில் அவனை ஒப்படைத்தார் கிருஷ்ணையர்.

அப்போதுதான் கிருஷ்ணையரே சாம்பவையரின் மனைவி சாரதாவை முதல் தடவையாகப் பார்த்தார்.

மாமியைப் பார்த்தபோது ராஜாராமனுக்கு ஐந்து வருஷத்துக்கு முன் இறந்து போன தாயின் நினைவு வந்தது. அந்த நினைவோடு நெஞ்சில் ஒரு வகையான ஆனந்தமும் வயிற்றில் ஒரு மாதிரியான பயமும் குழம்பி மார்பின் துடிப்பு சட்டைக்கு மேலே தெரிந்துவிடுமோ என்ற உணர்வில் கையை வைத்து அழுத்திக் கொண்டான் ராஜாராமன்.

கிருஷ்ணையர் சாரதா மாமியிடம் அவனை ஒப்படைத்துவிட்டு விடைபெற்றுக் கொள்ளும்போது ராஜாராமன் விம்மி விம்மி அழுதது அவன் மனசுக்கே நியாயமாக இல்லை.

“அட அசடே! உங்க மாமா உன்னைச் சமத்து சமத்துன்னு வாய் ஓயாம சொல்லுவாரே, இவ்வளவு தானா நீ!” என்று கேலியாகச் சமாதானம் கூறி அவனை இறுக்கமாக அணைத்துக் கொண்டாள் மாமி.

பட்டுப் புடவையில் மாமியின் மணமும் அவள் உடம்பின் மென்மையும் அவள் மனசின் ஆதரவும் அவள் அணைப்பின் சுகமும் அதுவரை அவன் அனுபவிக்காத ஒன்று.

அப்போதும் அவன் மாமியைத் தன் தாயோடு மனசில் ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டான்.

தன் தாயை விடவும் இந்த மாமி கொஞ்சம் உயரம்; கொஞ்சம் சிவப்பு; கொஞ்சம் அன்பானவள் என்று கூட அவனுக்குத் தோன்றியது.

ராஜாராமனின் தாய் பலவீனத்தாலும் சதா நேரமும் சிறுகச் சிறுகத் தன்னைப் பிடுங்கித் தின்னும் நோயினாலும் இரண்டு வருஷத்துக்கு ஒரு பிரசவத்தாலும் பாதிக்கப்பட்டு எப்போதுமே சிடுசிடுவென்றிருப்பாள். தன் உடம்பில் எங்கேயோ எப்போதும் வலித்துக்கொண்டிருப்பது மாதிரிச் சதா நேரமும் அவள் உதட்டைக் கடித்துக் கொண்டே

இருப்பாள். அவள் நெற்றியிலுள்ள குங்குமப் பொட்டு நெற்றிச் சுருக்கத்தால் கோடு விழுந்தே இருக்கும். ரத்தமற்ற சோகை வெறுப்பில் பூசிய மஞ்சள் திட்டுத் திட்டாய்த் தெரியும். அவளால் எந்தக் காரியமும் செய்ய முடியாது. சதா நேரமும் கைக்குழந்தையை அணைத்துக் கொண்டு அறையில் படுத்திருப்பாள். அவள் உயிரோடிருக்கிற வரைக்கும் வீட்டில் குழந்தைகள் பாடு ரொம்ப சிரமம் தான்.

தரை அதிர நடக்கக் கூடாது, அழக்கூடாது, சத்தம் போடக்கூடாது என்றெல்லாம் குழந்தைகளுக்குக் கடுமையான உத்தரவு உண்டு.

ஒரு வேளை ராஜாராமனை இப்படி உருவாக்கியதே அந்தக் கட்டுப்பாடுகள்தானோ? ரகுபதியும் மற்றக் குழந்தைகளும் அவற்றை மீறி அடியும் வசவும் வாங்கியதுண்டு.

ராஜாராமன் எப்போதாவது அம்மாவைப் பார்ப்பதற்காக அறைக் கதவைத் திறந்து கொண்டு போவான். அப்போதும் மற்றக் குழந்தைகளை விரட்டுவது மாதிரியே தன்னையும் அவள் விரட்டுவதால் மனம் சுருங்கிய அனுபவங்கள்தான் இப்போதும் அவன் நினைவில் இருக்கின்றன.

வேலைக்காரர்களும் சமையற்காரப் பாட்டியும்தான் குழந்தைகளை வளர்த்தார்கள் என்று சொல்ல வேண்டும். கிருஷ்ணையர் எப்போதாவது கொஞ்ச நேரம் கொஞ்சி விளையாடுவார்; அதட்டுவார்; புத்தி சொல்லுவார் ராஜாராமனைப் பொறுத்தவரை அதற்கெல்லாம் அவசியமில்லாதிருந்தது.

* * *

ராஜாராமனைக் காலேஜில் கொண்டு போய்ச் சேர்ப்பதற்கு முதல்நாள் கிருஷ்ணையர் அவனைக் கூப்பிட்டு அனுப்பினார். அவனிடம் குடமியை எடுத்துக் கிராப்பு வைத்துக் கொள்ளுமாறு சொன்னார். கடுக்கனும் குடமியுமாகப் போனால் மற்ற மாணவர்கள் கேலி செய்வார்கள் என்று அவர் காரணம் சொன்னபோது

அவனுக்கு முதன்முறையாக அவரிடம் வெளிப்படையாகக் கோபம் வந்தது.

“பூணூலையும் அறுத்துப் போட்டுட்டுக் கையிலே சிகரெட்டையும் பிடிச்சுக்கணும்னு சொல்லுவேளோ?” என்று அவன் கேட்டதைக் காணக் கிருஷ்ணையருக்குப் பயமாயிருந்தது. முதல் நாள் இப்படிக் கேட்டவன் அடுத்த நாள் அவனை அவர் பிரியும்போது அழுத காரியம் அவன் மனசுக்கே நியாயமாகப் படவில்லை.

அதன் பிறகு குடமியைப் பற்றியோ கடுக்கனைப் பற்றியோ அவனிடம் அவர் பேசவில்லை. அவன் இஷ்டம் என்று விட்டு விட்டார். அதிலே அவருக்குக் கொஞ்சம் பெருமையாகக்கூட இருந்தது.

இரண்டு மாதம் கழித்துக் கிருஷ்ணையர் அவனைப் பார்ப்பதற்குச் சிதம்பரம் வந்தபொழுது ராஜாராமன் கிராப்பு வைத்திருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டார். அந்த ஆச்சரியத்தோடு அச்சமும் கொண்டார். அந்த அச்சத்தோடு அவனருகே வந்து சட்டையின் காலரை நீக்கி இடது தோளைப் பார்த்தார். பூணூல் இருந்தது!

“மாமி கிராப்பு மட்டுந்தான் வச்சுக்கச் சொன்னாள்...” என்று தலையைக் குனிந்தவாறு சொன்னான் ராஜாராமன். கிருஷ்ணையர் சிரித்தார்.

உள்ளே இருந்து மாமியின் குரல் மட்டும் கேட்டது: “மாமாவுந்தான் சொன்னார். எல்லாரும் போல நம்ம கொழந்தையும் இருக்கணும்னு நேக்கு ஆசை. எங்கே போயிடறது குடுமி? வேணுமானா அப்புறம் வெச்சுண்டு போறது. நம்ம அம்பிக்குக் கிராப்பும் அழகாகத் தானே இருக்கு? கிராப்பு வெச்சுண்டதனாலே அவன் ஆசாரம் ஒண்ணும் கெட்டுப் போகலே. இந்தக் காலத்திலே எந்தப் பிள்ளை ரெண்டு வேளையும் சந்தியா வந்தனம் பண்றது? இவ்வளவு பூஜை பண்றது? இவ்வளவு விரதம் இருக்கு? அம்பி அதையெல்லாம் ஒண்ணும் விட்டுட மாட்டான்” என்று சமாதானம் கூறுகிற தோரணையில் சொன்னாள் மாமி.

“கிராமத்திலிருந்து பொறப்படறச்சே நானும் சொன்னேன். அப்ப கேக்க மாட்டேன்னுட்டான். அப்பவே எனக்குத் தெரியும். போயி ஒரு மாசத்துலே மத்தவாளைப் பார்த்தா இவன் மாறிடுவான்னு...” என்றார் கிருஷ்ணையர்.

“ஹோ, நெனைக்கறேளா? யாரைப் பார்த்தும் இவன் மாறி இருக்க மாட்டான். மாமி சொன்னாள். அதுக்கு மறு வார்த்தை கெடையாது” என்றார் சாம்பு மாமா.

“அப்படியே இருக்கட்டுமே. எனக்கும்தான் நான் ஆசைப்பட்டுச் சொல்றதுக்கு யார் இருக்கா? அவனுக்கும் தான் யாரு?....”

ராஜாராமன் எதற்குமே பதில் சொல்லவில்லை.

* * *

சாம்புவையர் வீட்டில் ராஜாராமன் வந்த பிறகு ஒரு சோபிதமே குடி புகுந்திருந்தது.

அதற்கு முன்பெல்லாம் விடியற்காலையில் எழுந்து ஹோட்டலுக்குப் போனால், மத்தியானம் ஒரு தடவை வீட்டுக்கு வந்து மௌனமாகச் சாப்பிடுவதும், திண்ணையில் பாயை விரித்துச் சற்றுத் தூங்குவதும், பின்னர் மறுபடியும் ஹோட்டலுக்குப் போனால் இரவு பத்து மணிக்கு மேல் வீட்டுக்கு வருவதுமாய் இருந்த சாம்புவையர் ராஜாராமனுக்காக அவன் காலேஜுக்குப் போகிற நேரம் தவிர மற்ற நேரமெல்லாம் மூன்று வேளையும் சாப்பிடும்போது அவனுடன் இருக்கும் சந்தோஷத்துக்காக வீட்டில் இருப்பதும், சாப்பிடும் போது மற்ற நேரமும் ராஜாராமனைச் சாக்காக வைத்துக் கொண்டு மாமியிடம் பேசுவதுமாக இருந்தார்.

மாமியின் முகத்தைப் பார்த்துச் சாம்புவையர் பேசியதே கிடையாது. சுவரைப் பார்த்துக் கொண்டோ விசிறி மட்டையின் நாரைப் பிய்த்துக் கொண்டோதான் பேசுவார். தான் இந்த வீட்டில் இல்லாதபோது இவர்கள் இருவரும் எப்படிச் சம்பாஷித்துக் கொண்டார்கள் என்று நினைக்க நினைக்க ராஜாராமனுக்கே ஆச்சரியமாக இருக்கும்.

ராஜாராமன் வந்த பிறகு அவர்கள் இருவருக்குமிடையே அவன் ஒரு பாலமானான்.

சாம்புவையர் வீட்டுக் கூடத்தில் தாயக் கட்டமும், சொக்கட்டான் கட்டமும் சிமெண்டிலேயே பதிக்கப்பட்டிருக்கும் பகலெல்லாம் மாமியும் அக்கம் பக்கத்துப் பெண்களும் இங்கே கூடி விளையாடிக் கொண்டிருப்பார்கள்.

இப்போது லீவு நாட்களில் மாமி, மாமா, ராஜாராமன் மூவரும் தாயம் விளையாடுகிற அளவுக்கு அவன் அவர்களை மத்தியில் பதினெட்டு வருஷமாக இருந்த இறுக்கத்தைத் தளர்த்தி இருக்கிறான்.

ராஜாராமன் அங்கு வந்து சேர்ந்தபோது மாமிக்கு முப்பத்தைந்து வயது. இருந்தும் ஒருநாள் மத்தியானம் காலேஜிலிருந்து வந்தபோது கூடத்தில் மாமியுடன் சொக்கட்டான் விளையாடிக் கொண்டிருந்த அக்கம் பக்கத்துக் கலியாணமாகாத கன்னிப் பெண்கள் நடுவே அவளை வித்தியாசம் காணமுடியாத இளமையுடன் அவள் இருப்பதைக் காண ஆச்சரியம் கொண்டான் அவன்.

ராஜாராமனை ஒரு வாலிபனாகக் கருதி அங்கிருந்து போய் விடுவதா, ஒரு சிறுவனாகக் கருதி அவனையும் விளையாட அழைப்பதா எனக் குழம்பி அந்தப் பெண்கள் தயங்கி நின்றபோது.

“எங்க அம்பி வந்துட்டான்..” என்று அப்படியே ஆட்டத்தை விட்டெழுந்து வந்தாள் மாமி.

“நீங்க விளையாடுங்கோ மாமி” என்று கூறித் தன் அறைக்குள் போனான் ராஜாராமன்.

அவனைத் தொடர்ந்து வந்த மாமி, “நீயும் வாயேன். விளையாடலாம்” என்று அழைத்தபோது, அவன் அவளை நிமிர்ந்து பார்த்தான்:

“நான் பொம்மணாட்டிகளோட எல்லாம் விளையாடறதில்லை.”

“என்னோட மட்டும் விளையாடறயே?...”

“நீங்க எனக்கு அம்மா மாதிரி....” என்று சொன்னபோது மாமி மனசுள் கரைந்து போனாள்.

அதைச் சொன்னதும் அவன் முகம் சிவந்து தலை கவிழ்ந்து நின்றான். திடீரென்று அவன் வளர்ந்து விட்டது மாதிரியும் பெரிய மனிதனாகிவிட்ட மாதிரியும் அவனை உற்றுப் பார்த்த மாமிக்குத் தோன்றியது. முகம் குனிந்த நிலையில் அவனது மோவாயிலும், மேல் உதட்டிலும் லேசான பூ மயில் அரும்பி இருந்ததை அவள் பார்த்தாள். ஆனாலும் அந்த உதடுகளின் பவழச் சிவப்பால் அவன் இன்னும் குழந்தை என்றே அவளுக்குத் தோன்றியது.

“உன்னை மாதிரி குழந்தைக்கு அம்மாவாயிருக்கக் கொடுத்து வைக்கணுமேடா அம்பீ” என்று அவன் கன்னத்தை வழித்துத் திருஷ்டி கழித்தாள் மாமி.

சாம்பு மாமாவுக்கு இந்த மாதிரி உணர்ச்சிகளை எல்லாம் வாய்விட்டுச் சொல்ல வராது. அவர் தன் மனசால் ராஜாராமனை மகனாகச் சுவீகரித்து ரொம்ப நாளாகி விட்டது. இப்போது கொஞ்ச நாட்களாய்க் கிருஷ்ணையரிடமே சொல்லி அவனைச் சுவீகாரம் எடுத்துக் கொள்ளலாமா என்றொரு ஆசை. கிருஷ்ணையர் அதற்குச் சம்மதிப்பாரோ என்ற பயம். ‘சுவீகாரம் என்று எடுத்துக் கொண்டால்தானா?’ என்று அந்தப் பயத்தினால் ஏற்படுகிற சமாதானம். இவன் நிரந்தரமாக இந்த வீட்டில் இப்படியே இருப்பதற்கு ஏதாவதொரு வழி செய்தால் போதும்... இன்னும் இரண்டு வருஷத்தில் இவனுக்குப் படிப்பு முடிந்துவிடும். அதன் பிறகு இங்கேயே ஏதாவது பெரிய உத்தியோகமாகப் பார்த்து வைத்து, அவனது இருப்பை இங்கேயே நிரந்தரமாக்கிக் கொண்டால் என்ன என்கிற பேராசை... அதெல்லாம் ஒவ்வொன்றாக நிறைவேறத்தான் போகிறது என்கிற கற்பனையிலேயே மிதந்து கொண்டிருந்தார்.

சாம்பு மாமா - சாரதா மாமியின் இத்தனை வருடத் தாம்பத்திய வாழ்க்கையில் அவர்கள் இருவருக்கும்

பொதுவாய் அவர்கள் இருவருடைய உணர்ச்சிகளையும் தன் வசம் ஈர்க்கத்தக்க ஒரு பொதுவான ஜீவன் இல்லாத காரணத்தினாலேயே, வெகுநாள் வரை சுவரிலும் மோட்டு வளையிலும் அப்படி ஒரு ஜீவனைத் தேடிக்கொண்டு பேசுவது மாதிரி ஒரு வீட்டிலேயே வெகுதூரம் அவர்கள் விலகியிருந்த நிலைமையை மாற்றி நடுவே வந்து அந்தத் தூரத்தைக் குறைத்து அவர்கள் நேருக்கு நேர்முகம் பார்த்துப் பேசவும், அந்தப் பொதுவான ஜீவனைப் பற்றிய தங்களது சந்தோஷத்தையும் கவலைகளையும் பரிமாறிக் கொள்ளவும் அவன் ஒரு வாய்ப்பாக ஆனது அவர்களது வாழ்க்கையின் நியதியே ஆகிப்போன சூன்யத்தைப் போக்கி இருக்கிறதல்லவா?

சாம்புவையர் சிரித்துக்கூடச் சாரதா மாமி பார்த்ததில்லை. அவருக்காக என்று அவள் எவ்வளவு சிரத்தையுடன் சமைத்துப் போட்டாலும் ‘நன்றாயிருக்கிறது’ என்று ஒரு வார்த்தை சொல்லி அவள் கேட்டதில்லை. அதே மாதிரி ஒரு நாளைக்கு உப்பே போடாமல் சமைத்தாலும், அல்லது கை தவறி இரண்டு தடவை உப்பைக் கொட்டியிருந்தாலும், ‘என்ன இப்படி இருக்கிறதே!’ என்று ஒரு முனகலையோ முகச் சுளிப்பையே கூட அவள் அவரிடம் கண்டதில்லை. பின் அவளாகவே சாப்பிடும்போது அதைக் கண்டுபிடித்து, ‘எனக்கு வாய்த்தது இப்படி ஒரு பரப்பிரம்மம்’ என்று பெருமூச்செறிந்து கொள்ளுவாள்.

அதே விதமாய் அவளும் தனது தேவைகள் எதையும் அவரிடம் உரிமையுடன் கேட்பதில்லை. அடுக்களையின் உள்ளிருந்து வேலையும் காரியமுமாக இருக்கையில் ஏதோ பாட்டுப் பாடுகிற ஸ்தாயியில் நேற்று மத்தியானம் புடவைக்காரன் வந்ததையும், அவனிடம் இரண்டு புடவைகள் எடுத்ததையும் அதற்கு நூத்தைம்பது ரூபாய் பணமாகிறது என்பதையும் தனிமையில் சொல்லிக் கொண்டிருப்பாள். அன்று மாலையோ அல்லது அடுத்த நாளோ, மாமி கூடத்தைக் கடக்கும்போதோ அல்லது எதையாவது கொணர்ந்து மாமாவின் முன்னால்

வைக்கும்போதோ மோட்டு வளையையோ சுவரையோ பார்த்துக்கொண்டு மாமா சொல்லுவார்;

“மாடத்துலே இருநூறு ரூபா வெச்சிருக்கேன் புடவைக்காரனுக்குக் கொடுக்க... எதுக்கும் மேலே அம்பது ரூபாயும் இருக்கட்டும்.”

மாமி புடவை என்றால் பட்டுதான் கட்டுவாள். நகை என்றால் வைரம்தான் அணிவாள்.

அக்கம் பக்கத்திலுள்ள பெண்கள் பார்த்து, ‘அவளுக்கென்ன? ‘ம்’கிறதுக்கு முன்னாலே நெனைச்சுது எல்லாம் வாங்கித் தர ஆத்துக்காரர் இருக்கார். இங்கேன்னா ஒரு புடவைக்கும் துணிக்கும் என்ன சண்டை நடக்கிறது!’ என்று பாராட்டாகவும் வயிற்றெரிச்சலாகவும் பொறாமைப்படும்படிதான் மாமி வாழ்கிறாள். என்றாலும் மாமாவும் மாமியும் கோவிலுக்கோ திருவிழாவுக்கோ கடைத்தெருவுக்கோ கலியாணத்துக்கோ ஒன்றாக வெளியே போய் யாரும் பார்த்ததில்லை. வீட்டிலும் ஒரு இடத்தில் ஒன்றாக அவர்கள் அமர்ந்து பேசிக் கொண்டிருந்ததையும் யாரும் கண்டதில்லை.

அவர்களது அந்தரங்க வாழ்க்கை அவர்களுக்கே ஒரு ரகசியமாக நடந்தது.

என்றைக்காவது ஒருநாள் திண்ணையில் கொசுவலை கட்டி இரண்டு விசிப்பலகைகளின் மீது விரித்த மாமாவின் படுக்கை நள்ளிரவில் சில நேரம் காலியாகக் கிடக்கும்... அதை யாராவது பார்த்துவிடுவார்களோ என்று அஞ்சியவர் மாதிரி விடிகிற நேரத்திலாவது வந்து அதில் படுத்துக்கொண்டால்தான் மாமாவுக்கு நித்திரை வரும்.

இப்படி வாழ்ந்த மாமாவும் மாமியும் ராஜாராமனை முன்னிட்டு - அவன் இரவெல்லாம் கண்விழித்துப் பரீட்சைக்குப் படிக்கிறான் என்கிற காரணத்தால் - ‘பாவம், குழந்தை கண் விழித்துப் படிக்கறபோது தாங்கள் தூங்குவது நியாயமில்லை’ என்பதற்காகக் கூடத்தில் உட்கார்ந்து கொண்டு விடிய விடியத் தாயம்

விளையாடுவார்கள்; சொக்கட்டான் விளையாடுவார்கள். இடையிடையே பிளாஸ்கிலிருந்து டீயொ காப்பியோ ஆற்றிக்கொண்டு போய் ராஜாராமனுக்குக் கொடுத்துவிட்டு வருவாள் மாமி. 'நீங்களும் தானே கண் முழிச்சிண்டிருக்கேள்?' என்று அவருக்கும் கொடுப்பாள். 'நீயும்தானே முழிச்சிண்டிருக்காய்!' என்று அவளையும் அவர் உபசரிப்பார்.

உள் அறையில் மேசை விளக்கின் அருகில் முகம் கவிழ்ந்து படித்துக் கொண்டிருக்கும் ராஜாராமனைக் கூடத்திலிருந்து 'இவனால் வந்த வாழ்வல்லவா?' என்ற நன்றி உணர்ச்சி பொங்கும் கண்களால் பார்ப்பாள் மாமி.

"இதப் பாரேன். தாயம் பந்தரண்டுக்கு உன் காயை வெட்டப் போறேன்!" என்று வழக்கமான ஸ்தாயியில் உற்சாகமாகக் கூவியவாறு இரண்டு உள்ளங்கையிலும் தாயக் கட்டையைக் கடகடவென்று உருட்டுவார் சாம்பு.

"உஸ்... அம்பிக்கு உதவிக்காக நாம்ப கண் முழிக்கிறோமாக்கும். கொஞ்சம் மெதுவாத்தான் பேசுங்கோ" என்று செல்லமாய்க் கண்டிப்பாள் மாமி.

ராஜாராமனின் அறையில் விளக்கெரிந்தால் அந்த வீடு முழுவதும் விளக்கெரியும். அவன் விழித்திருந்தால் அவர்களும் விழித்திருப்பார்கள். அவன் கண்கள் சிறிதே கலங்கினால் அவர்கள் இருவருக்கும் மனமே கலங்கிப் போகும். அவன் முகம் சற்றே வாடினாலும் அந்த வீடே களையிழந்து போகும்.

அவனுக்காக, அவனது சந்தோஷத்துக்காக அவனது முகத்தைப் பார்த்துக்கொண்டே அவர்கள் வாழ்ந்தாலும் அவர்கள் மனசே கலங்கிப் போகிற மாதிரி அடிக்கடி அவன் முகம் வாடிவிடும். அதற்கான காரணத்தைக் கேட்காமலேயே அவர்களும் வாட்டம் கொள்வார்கள். பின்னர் அவன் மகிழ்வுறுவதே அவர்களை மகிழ்விக்கத்தான் என்பது மாதிரி அவன் மாற, அவர்களும் மாறுவார்கள்.

மாமியின் அன்பும் மாமாவின் பரிவும் புறத்தே அவனை எவ்வளவு மாற்றியிருந்த போதிலும் அவன் கிராமத்திலிருந்தபோது எப்படி இருந்தானோ, அதே மாதிரித் தனிமை கொண்டு பூஜை அறையிலோ படிக்கும் அறையிலோதான் அவன் தனது பொழுதைப் பெரிதும் கழித்தான்.

அவன் அடிக்கடி கடுமையான விரதங்களை அனுஷ்டிப்பான். உபவாசம் இருப்பான். அப்போதெல்லாம் எதற்கு என்று தெரியாமலேயே அவர்களும் விரதம் அனுஷ்டிப்பார்கள். உபவாசம் இருப்பார்கள்.

அம்பி பரீட்சை எழுதப் போகிறான். மாமியும் மாமாவும் காலையில் குளித்துவிட்டு ஜோடியாகக் கோவிலுக்குப் போகிறார்கள். இவ்வளவு காலமாய் இல்லாத இந்தக் காட்சியை தெருவே வேடிக்கை பார்க்கிறது. தன் வயிற்றில் பிறந்த குழந்தைக்குக்கூட அந்த நடராஜர் முன் இவர்கள் மாதிரி இன்னொரு ஜோடி உருகி நின்று பிரார்த்தனை செய்ததில்லை.

அவன் புறப்படுவதற்கு முன் அவசர அவசரமாகப் பிரசாதத்துடன் கோவிலிலிருந்து ஓடி வந்து இருவரும் ஒருசேர அவனை வாழ்த்தி ஆசீர்வதிப்பார்கள். அவன் அவர்களை நமஸ்கரித்து எழும்போது இருவரும் அவன் மேலேயே கரைந்து பெருகித் தழுவி நிற்பார்கள்.

ஆனால் ராஜாராமனோ இவ்வளவு உணர்ச்சிப் பிரவாகத்தினிடையிலேயும் ஒட்டாதவன் மாதிரி, நீரில் மிதக்கும் நெய் போல, ‘நான் போகலாமா’ என்று விடை பெற்றுக்கொள்ளும் அவசரத்தில் இங்கே வாழ்கிறவனாகவே இருந்தான்.

எந்த நேரமும் யாரோ அவனை அழைத்துக் கொண்டிருப்பது போலவும், அந்த அவசரத்தில் மற்றவர்களின் அன்புப் பிடியில் சிக்கிச் சில நேரம் இவர்களுக்காக இருப்பது போலவும், எப்பவும் பறக்கத் தயாராய்ச் சிறகு விரித்து நிற்கும் பறவையைப் போல - தனது தனிமையில்

நிலைபெறத் தவித்துக் கொண்டிருப்பவனாகவே அவன் தோன்றினான்.

அது உண்மை எனில், பாவம் - இந்தத் தம்பதிகள் அவன் மீது தம்மிச்சையாய்த் தாங்கள் வைத்து வதைபடும் பாசமெல்லாம் எவ்வளவு வீண் என்று நினைக்கக்கூட நிதானமற்று - அவ்வித நிதானிப்பால் எங்கே இந்த உணர்ச்சிகள் தடைப்பட்டு விடுமோ என்கிற அச்சத்தில் விளைந்த அவசரத்தோடு தங்கள் உணர்ச்சிகளை அவன்மீது பொழிந்தனர்.

* * *

ராஜாராமன் பி.ஏ. பரீட்சை எழுதிவிட்டான். கல்லூரியும் மூடியாகிவிட்டது. நாளை அவன் கிராமத்துக்குப் போகப் போகிறான். இப்போதே லீவு விட்டுப் பத்து நாளாகி விட்டது.

இந்த நாலு வருஷத்தில் எத்தனையோ தடவை அவன் லீவுக்குக் கிராமத்துக்குப் போயிருக்கிறான். கல்லூரி திறக்கும் தேதிக்கு முதல் நாளே அவன் வந்து விடுவான் என்கிற நிச்சயமிருந்த அந்தச் சமயங்களிலேயே அவன் இல்லாதது மறுபடியும் சுவரையும் மோட்டு வளையையும் பார்த்துக் கொண்டு காலங்கழிக்கப் போகிற அந்தத் தனிமையை எண்ணி மாமி தவித்துப் போவாள். ஆனால் இப்போதோ அவன் படிப்பை முடீத்துக் கொண்டு போகிறான். ‘இனிமேல் எப்பொழுது வருவான் என்பதற்கு ஒரு தேதி கிடையாதே! எப்போதாவது வருவான் என்ற நம்பிக்கையில் ‘எப்போது எப்போது’ என்று இனிமேல் காத்திருக்க வேண்டியது தானா’ என்று நினைக்க நினைக்க மாமிக்கு இந்த வாழ்க்கையே ஒரு நிலையற்ற மாயை என்று தோன்றுகிறது.

இவனைத் தன்னோடு நிலையாக நிறுத்திக் கொள்ளத் தனக்கொரு நியாயமில்லையே என்று நினைக்க நினைக்க ஆத்திரம் வருகிறது. ‘அவருக்கென்ன? நினைத்தால் ஒரு நடை ஓடிப்போய் பார்த்துவிட்டு வந்துவிடுவார்’ என்பதை எண்ணி எண்ணிப் பார்க்கும்போது அவள் நெஞ்சம் பொறாமையால் எரிகிறது. ‘அவருக்கு அந்தக்

கிராமத்தோடு ராஜாராமன் இல்லாமலேயே உறவு... எனக்கு ராஜாராமன் இல்லாவிட்டால் இவரோடேயே உறவு கிடையாதே... என்ன உறவு? கையாலாகாதவர்கள் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்கிற அசட்டுத்தனம் தான்... ஆயுசுகாலம் மடியில் சுமந்தாலும், அந்தப் பத்து மாதம் வயிற்றில் சுமந்தால்தான் உறவு!' என்றெல்லாம் எண்ணி முந்தானை நனைய நனையக் கண்ணையும் மூக்கையும் துடைத்துக் கொண்டு கலங்குகிறாள் மாமி. ஆனால் இந்தக் கலக்கத்தைக்கூட அவள் யாரிடமும் காட்டிக் கொள்ளவில்லை. சிரிப்பவருடன் சிரிக்கிறாள்; பேசுபவருடன் பேசுகிறாள்.

மறுநாள் காலை ராஜாராமன் ஊருக்குப் போகிறான்: அன்று பூராவும் அவளுக்கு வேலை. ஆனால் அம்பி லீவு நாளில் மாமிக்கு ஒத்தாசையாகக் கூடமாட வேலைகள் செய்வான். அவள் எவ்வளவுதான் வேண்டாமென்று தடுத்தாலும் எல்லா வேலைகளும் செய்வான். தண்ணீர் இறைப்பான்; மாமி தள்ளித் தள்ளிவிட ஆட்டுக்கல்லில் மாவு அரைப்பான்...

அன்றைக்கும் அதே மாதிரிதான் மாமிக்கு ஒத்தாசையாக இருந்தான். என்றுமில்லாத அதிசயமாய் அன்று மாலை அவன் கோவிலுக்குப் போனான். அவன் சுவாமியைப் பூஜையறையில் தான் சேவிப்பானே தவிர கோவிலுக்கு போனதேயில்லை. அன்றைக்கு மட்டும் ஏனோ போனான்.

அவன் கோயிலிலிருந்து வீடு திரும்பியதை யாரோ பார்த்ததாகச் சொன்னார்கள். ஆனால், அவன் வீடு திரும்பவேயில்லை.

அவன் எங்கே போனான் என்று எவருக்குமே தெரியாது.

மறுநாள் சாம்பு மாமா மட்டும் தானறிந்த தெய்வங்களின் பெயரையெல்லாம் மனத்தில் ஜபித்தவாறு கிராமத்துக்கு ஓடினார். அங்கே அவன் இல்லாதது கண்டு, கிருஷ்ணையரையும் அழைத்துக்கொண்டு சிதம்பரத்துக்கு ஓடி வந்தார். எதிரில் படுகிறவர்களையெல்லாம் பார்த்து அவர்களுக்கு அவனைத் தெரியுமா, தெரியாதா என்றுகூட

யோசிக்காமல், ‘ராஜாராமனைப் பார்த்தீர்களா, ராஜாராமனை?’ என்று கேட்டுக் கொண்டே இருந்தார். கோயிலிலே போய்த் தேடினார். குளங்களையெல்லாம் சுற்றி வந்தார். அவரது கனத்த குரல் ஊரெல்லாம் சுற்றிச் சுழன்று ஒலித்துக்கொண்டே இருந்தது.

“ஸார்! எங்க ராஜாராமனைப் பார்த்தேளா?...” கிருஷ்ணையருக்குச் சாம்புவையரைப் பார்க்கப் பார்க்க வருத்தமாக இருந்தது.

“நீ இப்படி மனசு அதைரியப்படப்படாது. அவன் மகா புத்திசாலி. அவனுக்கு ஒண்ணும் ஆய்விடாது... அவன் நிச்சயம்ம வந்துடுவான்” என்று சாம்புவையருக்குக் கிருஷ்ணையர் சமாதானம் கூறினார்.

ஒரு வாரத்திற்குப் பிறகு சாம்புவையரையும் அழைத்துக் கொண்டு கிருஷ்ணையர் அந்தப் பகுதியிலேயே மிகவும் பிரசித்தமான ஒரு ஜோசியரிடம் ராஜாராமனின் ஜாதகத்தை எடுத்துக் கொண்டு போனார்.

ராஜாராமனின் ஜாதகத்தைப் பார்த்துவிட்டு அந்த ஜோசியர் வானளாவப் புகழ்ந்தார்; “இது உங்க பிள்ளையினுடைய ஜாதகம்னா சொல்றேள்? இது யாருக்குமே பிள்ளையா இருக்கிற ஜாதகம் இல்லை ஸ்வாமி... பெத்தவாள் இதைத் தன் பிள்ளைன்னு நினைச்சுண்டிருந்தால் அது அவாள் மாயை. உங்க மாயையைக் கட்டிண்டு நீங்களே அழுங்கோன்னு இந்த ஜாதகக்காரன் விலகிப் போயிடுவான். இந்த ஜாதகத்துக்குரியவன் ஒரு ரிஷி... அவனுக்கு ஒரு குறைவும் இல்லை... கவலையை விட்டுட்டுப் பொறுமையா இருங்கோ” என்று பேசிக் கொண்டே இருந்தார் ஜோசியர்.

“எங்கே போயிருப்பான்? எப்போ வருவான்?” என்று சாம்புவையர் பரிதாபமாகக் கேட்டபோது ஜோசியர் சிரித்தார்.

“நீங்க ஜோசியம் பார்க்க வந்தேளா? குறி கேக்க வந்தேளா? இந்த ஜாதகத்தைப் பார்த்துப் பலனைச் சொன்னேன்,

இதுக்குப் பேரு ஜோசியம். ஜோசியம்தான் சத்யம் இதுக்கு மேலே நான் ஏதாவது சொன்னால் ஹேஷ்யம் ஹேஷ்யம் பலிச்சாலும் உண்டு; இல்லேன்னாலும் இல்லை அப்படி ஹேஷ்யமா உங்களுக்குச் சொல்றதானால் அவன் வந்தாலும் வரலாம்; வரல்லேன்னாலும் இல்லை."

சாம்புவையருக்கு வந்த கோபத்தில் துண்டை உதறிக் கொண்டு எழுந்தார். என்ன வார்த்தை சொல்லுவதுதென்று அவரது உதடுகள் துடித்தன. "ம் நீரும் உம்ம ஜோசியமும்! உம்ம ஜோசியத்தைக் கொண்டு போய் உடைப்பிலே போடும்! என்று அவர் முகத்துக்கு நேரே கை நீட்டி வைத்து விட்டுக் கிருஷ்ணையருக்காகக் கூடக் காத்திராமல் தெருவில் இறங்கி நடந்தார் சாம்பு.

"சாம்பு! சாம்பு!" என்று கத்திக் கொண்டே பின்னால் ஓடி வந்தார் கிருஷ்ணையர். கோபமும் துயரமும் கொண்டு யாரையோ போய் அடிக்கப் போகிறவர் மாதிரி, எதையோ போட்டு உடைத்து நொறுக்கப் போகிறவர் மாதிரிப் பரபரத்து ஓடிக் கொண்டிருக்கும் சாம்புவையரை எட்டிப் பிடித்து நிறுத்தினார் கிருஷ்ணையர். அவரது உணர்ச்சிகள் சமனப்படும்படி ஆதரவாக அவரது முதுகில் தட்டிக் கொடுத்தார்.

"இந்த மாதிரி சமயத்திலேதான் நாம் கொஞ்சம் நிதானமா யோசிக்கணும். ஜோசியர் சொன்னதிலே என்ன தப்பு? அவன் எல்லாப் பிள்ளைகளையும் போலவா இருந்தான்? அவ்வளவு ஞானஸ்தனாகவும் பக்திமானாகவும் சின்ன வயசிலேருந்து அவன் இருந்ததைப் பாக்கறச்சே அப்பவே எனக்கு மனசிலே ஒரு பயம் தோணும். எங்கே இது அல்பாயுசிலே போயிடுமோன்னு ஒவ்வொரு சமயமும் 'திக்'னு அப்படி ஒரு பயம் வரும் எனக்கு. ஏதோ ஆண்டவன் நம்மை அப்படியெல்லாம் சோதிக்கல்லே. எங்கேயோ அவன் உயிரோட இருக்கான்கிற நம்பிக்கை நமக்கு நிரந்தரமா இருக்கிறதுக்கு ஒரு வழி பண்ணிட்டுப் போயிட்டானே... அதுக்காக நாம் சந்தோஷப்படணும்" என்று தைரியமாக - ஆனால் கலங்கிய கண்களைத்

துடைத்துக்கொண்டு சாம்புவையருக்குச் சமாதானம் சொன்னார் கிருஷ்ணையர்.

இப்போது சாம்புவையருக்குக் கிருஷ்ணையரின் மீதே கோபம் வந்தது.

“நேக்கென்னடா?... நானா பெத்தேன்?... நானா வளத்தேன்?... நான் பெத்திருந்தா இப்படி ஒரு காரியத்தை பண்ணி இருப்பானா?... துரோகி...! ...ரிஷியாம்... ரிஷி துரோகிடா அவன்! ஒரு கடமைக்காக இப்படிப் பதறிண்டிருக்கேன், என் கையிலே ஒப்படைச்சியே... ‘இந்தாடா உன் பிள்ளை’ன்னு உன் பிள்ளை’ன்னு உன் கையிலே திரும்பி ஒப்படைச்சுட்டு ஜன்மத்துக்கும் அவன் முகத்திலே முழிக்கறதில்லேன்னு திரும்பி இருப்பேன்டா, அதுக்கு வழியில்லாம ‘என் பிள்ளை எங்கே?’ன்னு நீ வந்து கேக்க, குத்தம் பண்ணினவன் மாதிரி நான் தெருத் தெருவா அலையறேனே... எல்லாம் என் தலை எழுத்துடா, தலை எழுத்து” என்று இரண்டு கைகளாலும் தலையில் அடித்துக்கொண்டு நடுத்தெருவிலேயே ‘ஓ’வென்று அழலானார் சாம்புவையர்.

கிருஷ்ணையருக்கு ஒன்றும் புரியவில்லை.

சாம்புவையர் தெருவெல்லாம் அழுதுகொண்டே வந்தார். அவருக்குச் சமாதானம் கூறுகின்ற வீண் முயற்சியைக் கிருஷ்ணையரும் கைவிட்டு விட்டார்.

இருவரும் சாம்புவையரின் வீட்டுக்கு வந்தார்கள். சாரதா மாமி கண்ணிலேயே படவில்லை. அடுக்களையிலிருந்து அடிக்கடி விம்முகின்ற குரலும் தலையில் அடித்துக் கொள்கிற சத்தமும் கேட்டது. அந்த வீட்டின் சூழலிலேயே ஒரு அச்சானியம் கவிந்திருந்தது.

சாம்புவையர் கூடத்தில் வெறும் தரையில் உட்கார்ந்து சுவரில் சாய்ந்து எதிர்ப்புறத் தூணில் காலை உதைத்துக் கொண்டு பிடரியில் கீழே கைகளைக் கோத்துக் கண்களை மூடியவாறு நாளெல்லாம் உட்கார்ந்திருந்தார். அவர் தன்னுள்ளே கொஞ்சம் கொஞ்சமாக இறுகி, அப்படியே

கல்லாகி விடுவாரோ என்பது போலிருந்தது அந்தத் தோற்றம்.

தரையில் குடையை ஊன்றியவாறு கிருஷ்ணையர் வெகு நேரம் நின்றிருந்தார். பின்னர் தானாகவே வந்து ஊஞ்சல் பலகையில் உட்கார்ந்து கொண்டார். அப்புறம் எழுந்து அடுக்களையை நோக்கி நடந்தார். அடுக்களை வாசலருகே, தான் வந்து நின்றதைக்கூடக் கவனியாமல் தலைவிரி கோலமாய் மூலையில் சரிந்து கிடந்த மாமியைப் பார்த்தம் அவருக்கு மனசைப் பிழிந்தது. தொண்டையைக் கனைத்துக் கொண்டார். அவர் அங்கு வந்து நிற்பதைக் கண்டதும் மாமி முகத்தைப் புடவைத் தலைப்பால் மூடிக்கொண்டு அழுதாள்.

‘இதெல்லாம் என்ன?.. நீங்க அவனை எவ்வளவு அன்பா வளர்த்தேள்னு எனக்குத் தெரியும். இப்படி அவன் போயிட்டதினாலே உங்க மேலே ஒண்ணும் பழி வந்துடாது. நாமா ஏன் கண்டபடி முடிவுக்கு வரணும்? எனக்கென்னமோ அவன் எப்படியும் திரும்பி வந்துடுவான்னு தோண்றது. நிச்சயமா அவன் உயிரோட இருப்பான் நீங்க வருத்தப்படாதேங்கோ” என்று மிகவும் ஆதரவாகக் கூறினார் கிருஷ்ணையர்.

“இந்தப் பாவி உசிரு என்னத்துக்கு இருக்குன்னு தான் நான் வருத்தப்படறேன்?” என்று மார்பில் அறைந்து கொண்டாள் மாமி.

கிருஷ்ணையர் தலையைக் குனிந்தவாறு திரும்பி நடந்தார். தான் அங்கு இருக்கும்வரை அவர்கள் சமாதானம் அடையமாட்டார்கள் என்று நினைத்தார்.

வீட்டுக்கு வந்து உட்கார்ந்த அதே நிலையிலேயே சமைந்துவிட்ட சாம்புவையரைப் பார்த்து, “அப்போ நான் வரட்டுமா?” என்றார் கிருஷ்ணையர்.

பதிலில்லை.

“சாம்பு... நான் போயிட்டு வரேன். ராஜாராமன் வந்ததும் உனக்குக் கடுதாசி போடறேன். இங்கே வந்தாலும் நீ

எனக்கு எழுது. நான் எழுதினா நீ அப்போ வருவே இல்லை?" என்று குழந்தையைக் கொஞ்சுவது மாதிரிக் கேட்டார் கிருஷ்ணையர்.

கண்களைத் திறந்து கூடப் பார்க்காமல், இரு கைகளையும் ஓசையெழத் தட்டியவாறு கூப்பி, ஒரு கைத்த சிரிப்புடன் கும்பிட்டார் சாம்பு.

அதன்பிறகு ஒரு வருஷத்துக்கப்புறம் சாம்புவையரைச் சவமாகக் கூடத்தில் கிடத்தி வைத்திருக்கும் போது, பதிலுக்குக் கும்பிடக் கிருஷ்ணையர் வந்தார்.

அப்போதுதான் ராஜாராமன் பி.ஏ. பர்ஸ்ட் கிளாஸில் பாஸாகி இருந்த செய்தியையும் அவர் அறிந்தார்.

அந்த ஒரு வருஷம் சாம்புவையரும் சாரதா மாமியும் வாழ்க்கையை ஒரு தண்டனை மாதிரிக் கழித்தார்கள். முன்பெல்லாம் சாம்புவையர் மோட்டுவளையைப் பார்த்துக் கொண்டு பேசுவார். இந்த ஒரு வருடத்தில் அவர் மோட்டு வளையையும் சுவரையும் வெறிக்க வெறிக்கப் பார்த்துக்கொண்டு மட்டுமே இருந்தார். ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை.

சாரதா மாமி உயிருள்ள பிரேதமாக அந்த வீட்டுக்குள்ளேயே உலவி வந்தாள். அக்கம் பக்கத்திலுள்ளவர்கள்கூட அவளைப் பார்த்து ரொம்ப நாளாகிவிட்டது.

சாவதற்குச் சற்றுமுன் சாம்புவையர் தன் தலையை அவள் மடியில் சாய்த்துக்கொள்ள விரும்பினார். அப்படி ஒரு குழந்தை மாதிரி அவரை மடியில் கிடத்திக் கொண்டிருக்கும்போது அவள் முகத்தையே ஒரு கடைசித் தரிசனமாகக் கண்டவாறு அவர் கூறி இறுதி வார்த்தை:

"எனக்கு யார் மேலேயும் கோபமில்லை. நீயாவது என்னை மன்னிச்சுடு!"

சாம்புவையரின் மறைவுக்குப் பிறகு அவர் பாதியில் விட்டுச் சென்ற லௌகீக காரியங்கள் அனைத்தையும் தானே முன்னின்று நடத்தி வைத்தார் கிருஷ்ணையர்.

அதன் பிறகும் எப்போதாவது ஒருமுறை வந்து அவளைப் பார்த்துச் செல்வார் அவர். வரும்போதெல்லாம் திண்ணையிலேயே உட்காருவார். மாமி கதவுக்குப் பின்னாலேயே நிற்பாள். ஒவ்வொரு தடவை வரும்போதும் ராஜாராமன் வந்துவிடுவான் என்கிற நம்பிக்கையை அவளுக்குத் தெரிவித்துவிட்டுப் போவார்.

ஆனால் அந்த ராஜாராமன் நிஜமாகவே ஒரு நாள் கிராமத்துக்குத் திரும்பி வந்தபொழுது அந்தச் செய்தியை அவளிடம் ஓடிவந்து சொல்வதற்குக் கிருஷ்ணையர் இல்லை. அவர் இல்லை என்கிற விஷயம்கூட அவளுக்குத் தெரியாது.

“அவர் வந்து ஒரு வருஷம் ஆகப்போகிறதே அவருக்கு என்னவாயிற்றோ” என்று ஏதோ யோசனையில் எண்ணிய மாமி ஒருநாள் காரியஸ்தரை அழைத்துக் கிருஷ்ணையரின் கிராமத்துக்குப் போய்ப் பார்த்து வரச் சொன்னாள்.

சாயங்காலம் கிராமத்திலிருந்து திரும்பி வந்த காரியஸ்தர், கிருஷ்ணையர் போய்விட்டதையும் ராஜாராமன் வந்து விட்டதையும் சொன்னார்.

கிருஷ்ணையரின் பெண் மக்களில் ஒருத்தி கணவனுடன் கல்கத்தாவில் இருப்பதாகவும், அவர்கள் தட்சிணேஸ்வரத்துக்குப் போயிருந்தபொழுது கங்கை நதியின் கரையிலே, நதியில் மிதந்த படகுகளை வேடிக்கை பார்த்தவாறு காவியும் தாடியுமாய் ராஜாராமனைக் கண்டதாகவும் முதலில் அவனிடம் தமிழில் பேச்சுக் கொடுத்து, அவன் தமிழ்நாட்டைச் சேர்ந்தவனென்று அறிந்து, பிறகு அவனைக் கிருஷ்ணையரின் இரண்டாவது புதல்வன் ராஜாராமன் என்று அடையாளம் கண்ட விதத்தையும் ஆதியோடந்தமாய்க் கூறினார்.

பின்னர் ரகுபதியே கல்கத்தாவுக்குப் போய் அவனை அழைத்து வந்ததையெல்லாம் சொன்னார். அவனுடைய

துறவறத்தைக் கலைக்காமல் அவனது விருப்பப்படியே இருக்கலாமென்று வாக்குறுதி தந்ததனாலேயே அவன் ரகுபதியுடன் வரச் சம்மதித்தான் என்பதையும் கூறினார். கிராமத்தில் அவனுக்கென்று ஆசிரமம் மாதிரி ஒரு கொட்டகை கட்டிக் கொடுத்திருப்பதாகவும், அதனுள்ளே அவன் சாமியாராகவே வாழ்ந்து கொண்டிருப்பதாகவும் பயமும் பக்தியும் கலந்து சொன்னார் காரியஸ்தர்.

சாரதா மாமிக்கு வீட்டில் இருப்புக் கொள்ளவில்லை.

## 2

காவேரி ஆற்றங்கரையில் இந்தப் பக்கம் படித்துறை, அதையொட்டின இந்த மண்டபம். இந்த மண்டபத்தில் அந்தக் காரை உதிர்த்த வடவண்டைத் தூண் ஓரமாகச் சுவரைப் பிளந்து கொண்டு மரமாகவே வளர்ந்துவிட்ட எருக்கு. அது உதிர்த்த சில பழுப்பு இலைகளின் நடுவே காலஞ்சென்ற மகாராஜ ராஜஸ்ரீ கிருஷ்ணையரின் கனிஷ்டகுமாரனும், இளந்துறவியும் ராஜாராமனுமாகிய நான்...

ஆமாம்; நான்தான்.

நான் என்கிற அகந்தையாம். அந்த அகந்தை எனக்கு ரொம்ப உண்டு. நான்தான் அகந்தை; அகந்தை தான் நான். என்னை வைத்துத்தான் நான் எல்லாவற்றையும் அறிகிறேன். என்னிலிருந்து விலகியும் என்னை வைத்துத் தான் நான் என்னையே அறிகிறேன்.

அதோ, ஆற்றின் அந்தப் பக்கம் அக்கரை மேட்டில் வரட்டிகள் அடுக்கி, கட்டைகள் பரப்பி, அந்த விறகுக் குவியலின் இடைவெளியிலும், அடுக்கடுக்காய்க் கரிந்து, சாம்பலாகி உதிர்ந்து உள்ளே கனியும் வரட்டிகளின் இடுக்குகளிலும், சிவப்பாய், ஆரஞ்சாய், நெருப்பாய்த் தழல்பொறிகள் பறக்க எரியும் சிதையுள், நிணமும் சதையும் உருகி எலும்பின் சட்டகங்கள் நெக்குவிடக் கம்பீரமாகத் துயில்கிறானே ராஜாராமன்...

அதனுள் நான் இல்லை; அகந்தை இல்லை; ராஜாவும் இல்லை; ராமனும் இல்லை. ஆனால் எல்லா ராஜாவும் எல்லா ராமனும், எல்லா அகந்தையும் எல்லா நானும் எல்லா இடங்களிலும் இப்படித்தான்...

ரெம்பக் காலமாக இப்படித்தான். இன்னமும் ரொம்பக் காலத்துக்கும், எல்லாக் காலத்துக்கும் இப்படியே தான்!

இது மாதிரி மனசின் நமைச்சலில் எப்போதும் எனக்குச் சிரிப்பு வரும். சிரிக்கும்போது பீடிப் புகையின் ஓர் இழை தொண்டைக்குள் இறங்கி, இருமல்... இருமல் வந்து... புரைக்கு ஏறிடுத்து... அதோடு சிரிப்பும் வராது...

நான் பீடி குடிக்கிறேன்.

கிருஷ்ணையரின் கனிஷ்டகுமாரன் ராஜாராமன் பீடி குடிக்கிறான். இதெல்லாம் என்ன கிரகசாரம்? ராஜாராமனுக்கு வருத்தம் - அவன் அப்பா இல்லையேன்னு இருந்து இதையெல்லாம் பார்த்தார்னா? அதைக் கற்பனையில் கண்டு ஒரு சிரிப்பு.

அவரையும் இதோ எரியறதே, இதே மாதிரிதான் இதே இடத்தில்தான் வச்சு எரிச்சிருப்பா... கிருஷ்ணையரோட அப்பாவை, அம்மாவை, தாத்தாவை, பாட்டியை அவருக்கு முன்னால் இருந்த வம்சத்தையே இப்படித்தான் எரிச்சிருப்பா.

என்னையும் இங்கே இதே மாதிரி வச்சு வரட்டி அடுக்கி விறகு பரப்பி, தீ மூட்டித் திகுதிகுன்னு எரிக்கத் தான் ரகுபதி அங்கேயிருந்து தேடிப் பிடிச்சு என்னை இங்கே அழைச்சிண்டு வந்திருக்கான். எனக்கு அப்பவே தெரியும். ராஜாராமனை இதே மாதிரி சிதையிலே வச்சு எரிப்பா; நான் இந்த மண்டபத்திலிருந்து பார்ப்பேன். இந்த மண்டபத்திலே படுத்துண்டு அக்கரை மேட்டிலே எரியற சிதையிலெல்லாம் அவனை நானே கொண்டு வச்சுப் பார்த்துச் சிரிச்சிருக்கேன். இப்பவும் அப்படித் தான் சிரிக்கிறேன்.

எனக்கு அடிக்கடி சிரிப்பு வரது. இந்த மாதிரி மனசின் நமைச்சலில் சிலந்தி மாதிரி என் வயத்திலேயிருந்து எண்ணங்களை இழையாய் எடுத்து வலை வலையாய்ப் பின்னி அதிலே சிக்கிக்கிறப்போ நானே சிரிச்சு அந்த வலையை அறுத்துண்டு வெளியே ஓடி வந்திடறேன்.

நான் விலகி நின்று ராஜாராமனைத் தனியாய்ப் பார்க்கிறபோதெல்லாம் எனக்குச் சிரிப்புத்தான் வரது.

நான் அடிக்கடி இவனை இப்படிப் பார்ப்பேன். இவன் போட்ட வேஷத்தையெல்லாம் ஒண்ணொன்னா இவன் கலைச்சுப் போடறப்போ எல்லாம் இது ஒரு ராஜாராமன், இது ஒரு ராஜாராமன்'னு நான் கணக்கு வச்சுண்டே வந்திருக்கேன்.

என்னை மறைக்கத்தான் இவன் எத்தனை எத்தனை திரை போட்டான்.

இவன் கடைப்பிடிச்ச ஆசாரம், அனுஷ்டானம், விரதம், வேத பாராயணம் பூஜை - புனஸ்பாரகம், ஸம்ஸ்கிருத சுலோகம், தமிழ்ப்பாடல், படிச்ச படிப்பு, வாங்கின மார்க்கு, வச்சு சிரைச்ச குடுமி போட்டுண்டிருந்த பூணூல் எல்லாம் வேஷம்! என்னை மறைக்க யாரோ கொடுத்ததை இவன் வாங்கிப் போட்ட திரைகள்! இதையெல்லாம் விலக்கி அவனுக்கே தெரியாமல் ஒளிஞ்சிண்டிருந்த என்னை நான் பார்த்துப் பார்த்துச் சிரிச்சிருக்கேன்.

இவனுக்கு நிஜமா அதிலெல்லாம் நம்பிக்கை கிடையாது. இவன் என்னைக் கண்டு பயந்துண்டு, அந்தப் பயத்திலே, என்னண்டேயிருந்து தப்பிச்சுக்கிறதுக்காக என்னை அந்த வேஷங்களிலே மறைச்சு மறைச்சு வச்சான்.

இவன் நாஸ்திகன், இவன் சூனியவாதி, இவன் நிரானுகூலன்! இப்போ இவனுக்கு என்னண்டே பயமில்லை. எந்த வேஷமும் எந்தத் திரையும் என்னையும் இவனையும் காப்பாத்த முடியாதபோது, அந்த வேஷங்களைக் கலைஞ்சு எறிஞ்சுட்டு, அந்த விலங்குகளை உடைச்சுப் போட்டுட்டு - அதுக்கு முன்னமேயே அந்த வேஷங்கள் கலைஞ்சு போனதனாலே, அந்த விலங்குகள்

உடைஞ்சு போனதனாலே - எல்லாச் சுவர்களையும் தாண்டிக் குதிச்சு நான் ஓடினேன்.

அதுக்கப்புறம் நான் எங்கேயும் ராஜாராமனில்லை. நான் வெறும் நான்தான்.

புண்ணிய NÑத்திரங்களையும் புனித தீர்த்தங்களையும் நாடி நான் ஓடல்லே. நான் ஓடிய பாதையில் எல்லா ஊர்களையும் போல், எந்த மசானமும் போலப் புண்ணிய NÑத்திரம்னு சொல்லிக்கிறாளே அந்த ஊர்க் குறுக்கிட்டப்போ அங்கேயும் நான் சஞ்சரிச்சேன்; புனித நதிகள்னு நம்பறாளே, அந்தத் தண்ணீரிலே நானும் விழுந்து புரண்டு எழுந்தேன் - அவ்வளவுதான்.

காவேரியானால் என்ன, கங் கையானால் என்ன? எந்த சாக்கடையானால் என்ன? எந்தச் சமுத்திரமானால் என்ன? எல்லாமே ஒன்றுக்கு வாய்த்த பல பெயர்கள்தானே?

எல்லா நதிக்கரையிலேயும் ஒரு மசானமும் உண்டு. எல்லா மசானங்களிலும் பிணங்கள் உண்டு. பிணங்களிலே பேதங்கள் என்ன? ஆண் பிணம், பெண் பிணம், தாய்ப் பிணம், தந்தைப் பிணம் - எல்லாம் ஒரே பிணந்தான். மசானங்களிலே எந்த மசானம் உசத்தி? எது தாழ்த்தி?

கல்கத்தா நகரத்திலே இருக்கே காளி கட்டம் - அங்கே ஓடறதே ஒரு சாக்கடை - அப்படிச் சொன்னா காளி உபாசகன் அங்கேயே பலி போட்டுடுவான் - அது கங்கையின் அம்சமோ, அல்லது கங்கையோவாம்! அந்தக் கங்கையே பாதி மசானம்தான்! அந்தக் கரையிலே உயிருள்ள பிணங்கள் தீர்த்தமாடிண்டிருக்கும்... எதிர்க்கரையிலே வெந்தும் வேகாமலும் கரிஞ்சு போன மசானப் பிணங்கள் மதிலே மிதந்துண்டிருக்கும். அதையும் பவித்திரமா அள்ளித் தலையிலே தெளிச்சுண்டு தான் போவா. அதையும் பார்த்துதான் சிரிச்சிருக்கேன். அதை எப்படி அள்ளித் தலையிலே தெளிச்சுக்கிறாளோ, அதே மாதிரி ரிஷி மகராஜ்னு என் காலிலேயும் விழுந்திட்டுப் போவா.

அவா நதி மூலமும் பாக்கறில்லே; ரிஷி மூலமும் பாக்கறதில்லை.

நான் அதுக்காக அங்கே போகல்லே. நான் போன பாதையிலே என் காலிலே நதிகளும் பட்டிருக்கு. பிணங்களும் பட்டிருக்கு....

காவி கட்டிண்டு, சடா முடி வளர்த்துண்டு தபோ முனி ஆகணும்னு... நான் போகல்லே. நான் கட்டிண்டு போன துணியே நாளாவட்டத்தில் காவியாயிடுத்து தாடியும் முடியும் நானா வளர்த்தேன்? அது தானா வளர்ந்துட்டுது? ஒரு வேஷமும் வேண்டாம்னு போனவனுக்கு அதுவே ஒரு வேஷமாப் போயிடுத்து.

எல்லாமே ஒரு வேஷம்தான். எதுவுமே வேண்டாம்னு போனா, அதுவே ஒரு வேஷம்தான்! உயிருக்கு உடல் வேஷம்; உடலுக்குப் பல வேஷம்! எனக்குச் சிரிப்புச் சிரிப்பா வரதே.

கடைசியிலே இந்த வேஷமும் இவனைக் காப்பாத்லே.

தட்சிணேஸ்வரம் மடத்தருகே தீர்க்காயுசு மாதிரிப் பெருகி சமுத்திரம் மாதிரி அகண்டு, அலை மலையாய்ச் சுருண்டு வரும் அந்த ஜீவநாதியின் பிரவாகத்தில் படகு ஒட்டிண்டு எவனோ பாட்டுப் பாடிண்டு போனானே. அதைப் பார்த்துண்டுதான் உட்கார்ந்துண்டிருந்தேன்.

'அம்பீ'ன்னு ஒரு குரல்.

ராஜாராமனின் தங்கை ஜகதா, அவள் புருஷன், பனிக்குல்லாயும் ஸ்வெட்டரும் போட்டுண்டு, அவன் கையைப் பிடிச்சுண்டு ஒரு மூணு வயசுக் குழந்தை!

ரகுபதிக்கு அம்பியானதனாலே நான் எல்லாருக்குமே அம்பி. இத்தனை நாள் இல்லாமிருந்து ராஜா ராமன் இப்போ வந்துட்டான். வேஷம் திரை ஆச்சு; நான் திரைக்குள்ளேயே ஒளிஞ்சுண்டேன்.

கங்கையானால் என்ன; காவிரியானால் என்ன? எல்லா நதிக் கரையிலேயும் ஒரு மசானம் உண்டு.

முதல்லே அவா கையைத் திமிறிண்டு, ‘நான் வரமாட்டேன்’னு இவன் ஓடினான். பத்தடி ஓடினது ‘எதுக்கு நான் ஓடணும்?’னு நெனைச்சிச் சிரிச்சிண்டே திரும்பி வந்து நின்றான். ஜகதாவோட குழந்தை இவனைப் பார்த்துண்டு வீல்னு அழறது...

அதுக்கப்புறம் ரகுபதிக்குத் தந்தியடிச்சு அவன் ஓடி வந்தான். அவனைப் பார்த்துட்டு எல்லாருமே ஒரு குறை அழுது தீர்த்தார்கள். ரகுபதி தன்னோட இவனை அழைச்சுண்டு போகக் கூப்பிட்டப்ப இவன் ரொம்ப முரண்டு பண்ணினான்.

அந்த இரண்டு நாள்ளே ரகுபதி இவன் கூடவே இருந்து, இவன் பீடி குடிக்கிறதையும், ஹுக்கா குடிக்கிறதையும், கஞ்சா குடிக்கிறதையும் பார்த்தான். மரத்தடியிலே ரெண்டு மூணு பேரா சேர்ந்து சேர்ந்து - இவளையும் ‘மகராஜ் மகராஜ்’ன்னு அழைச்சுண்டு போயி மரியாதை பண்றதையும் பார்த்தான். இவனுக்கு அதிலே ஏற்படற சுகானுபவத்தையும் பார்த்தான்.

மறுநாள் மத்தியானம் ஒரு தோலா கஞ்சா வாங்கிண்டு வந்து அங்கே மரத்தடியிலே இருக்கிற ‘மகராஜ்’களுக்குக் காணிக்கை தந்தான் ரகுபதி. தொடர்ந்து ரெண்டு மூணு நாட்கள் ரகுபதி. இவனையும் இவனது சக ‘மகராஜ்’களையும் விருந்தோம்பல் செய்து, இவனை மட்டும் தன்னோடு வரச் சொல்லிக் கூப்பிட்டான்.

“அப்பா காலமாயிட்டார்... ஒரு வருஷமாறது”ன்னு கண்ணைத் தொடைச்சிண்டே ரகுபதி சொன்னப்ப இவன் சிரிச்சான். ‘ஓ! ஒரு வருஷம் ஆயிடுத்தா?’ என்று ஒப்புக்குக் கேட்டு வைத்தான்.

“இங்கே ரொம்ப குளிர்கிறது... நேக்கு ஒரு கம்பளிச் சால்வை வாங்கிக் கொடேன்” என்று இவன் ரகுபதியை ஒரு குழந்தை மாதிரிக் கெஞ்சிக் கேட்டபோது ரகுபதிக்குத் தாங்க முடியவில்லை... அப்படி நெஞ்சில் அடக்கிய அழுகை வலித்தது.

“வாங்கித் தரேன்டா... வாங்கித் தரேன்... வீடும் நிலமும் கோட்டையும் சமுத்திரமாயிருக்கு; தலை எழுத்து, கந்தலைக் கட்டிண்டு, குளிருக்குக் கையை மடிச்சு ஒடம்பை மூடிண்டு...”

இவன் கேட்டதும்கூடச் சும்மாதான். அன்னிக்கே போயி எண்பது ரூபாய்க்கு மேலே குடுத்து ஓரமெல்லாம் பூ வேலை செய்த சாம்பல் நிறத்தில் ரகுபதி வாங்கி வந்த அந்தச் சால்வையை இவன் ஒரு தடவை கூடப் போர்த்தியதில்லை. மடிப்புப் பிரியாமல் இன்னும் அது ரகுபதியிடமே இருக்கிறது.

கடைசியில் ரகுபதியுடன் வந்து ரயிலேறும்போது, “அங்கே வந்து பீடி தருவாயா?” என்று கேட்டான் இவன்.

“ம்... நிறைய”

“பீடின்னா இதுவும் வேணும்...” என்று கையிலிருந்து சிறு பொட்டணம் ஒன்றையும் காட்டினான்.

“ம்... உனக்கு வேணும்கிறதெல்லாம்...”

“ஓ! ஜீவிதத்துக்கான தேவைகளே இவனுக்கு எவ்வளவு சுருக்கமாய் ஒரு பொட்டணத்தில் பொதிந்து கிடக்கிறதுன்னு நெனச்சப்போ ரயில் பூராத் திரும்பிப் பார்க்கற மாதிரி ஹாவ்ரா ஸ்டேஷன்லே நான் சிரிச்சிருக்கேன்... ரகுபதி பயந்துட்டான்!

இதோ எதிரிலிருக்கிற ரயிலடியிலேயிருந்து வீட்டுக்கு வர்ரதுக்குள்ளே அக்ரஹாரத்திலே கிராமமே கூடிடுத்தே.

இவன் முப்பது வயசிலேயே சாமியார் ஆயிட்டானாம். இவன் ரிஷியாம்; இவன் ஆசை பாசம் எல்லாத்தையும் துறந்துட்டானாம். இப்படித்தான் எல்லாரும் சொல்றா; எல்லாரும் நம்பறா. அப்படிப் பார்த்தா இவன் எப்பவுமே ரிஷிதான். எல்லாத்தையும் துறந்தவன் தான். சின்னக் குழந்தையா இருக்கச்சேகூட, தனக்கு இன்னது வேணும்னு தகப்பன்கிட்டேகூட இவன் கேட்டதில்லை. எதுவுமே வேண்டாதவன் மாதிரி. எல்லாமே பிறதியாருக்காகச் செய்கிற மாதிரி, மத்தவர் திருப்திக்கு ஏத்துக்கற மாதிரி

தானே இருந்தான்! தாடியும் காவியும் இப்பன்னா வந்து சேர்ந்திருக்கு! இவன் கட்டிக்கிற காவியும் மத்தவா இவன் மேலே சுமத்தினதுதான். இவனுக்கென்ன? எதுவானால் என்ன? ஒருநாள் போயி ஏதோ ஒரு புத்தியிலே எல்லாத்தையும் செரைச்சிக் கொட்டிட்டு வந்துட்டான். அதுவும் ஒரு வேஷமாத்தான் போச்சு. மழித்தல் நீட்டல். ரெண்டும் வேஷம்னா, எந்த வேஷம் தேவலை? இந்த வேஷமே தேவலைன்னு அப்படியே வளர விட்டுட்டான்.

சந்தோஷங்களையெல்லாம் துறந்து, இச்சைகளையெல்லாம் அடக்கி, புலன்களையெல்லாம் ஆண்டு - இதெல்லாம் அவனுக்கு ஒண்ணுமே தெரியாது.

இவன் சந்தோஷங்களையெல்லாம் அனுபவிச்சுட்டவன்; இச்சைகளையெல்லாம் தீத்துண்டவன்; புலன்களை அடக்க அவசியமில்லாது அதன் போக்குக்கே விட்டுப் புடிச்சுட்டவன்.

மாடு வைக்கோல் தின்னுகிற மாதிரி அசை போட்டு அசை போட்டுச் சாணம் பரப்பினாத்தானா?

யார் யாருக்காகவோ எதை எதையோ சுமந்துண்டு, காலத்துக்கு உழைத்துத் தேஞ்சிண்டு, தனக்குத் தானே துரோகம் இழைச்சுக்கிறதை ஒரு தியாகம்னு நெனைச்சுண்டு சந்தோஷம் எங்கே எங்கேன்னு அலைஞ்சு அலைஞ்சு வடுப்பட்டு, சலிப்படைஞ்சு போறவாள்ளாம் ஒண்ணு சேந்துண்டு ஒரு சுமையுமில்லாமல் வெட்ட வெளியிலே எல்லா சந்தோஷத்தையும் அனுபவிச்சுட்டு நிக்கிற இவனைப் பாத்து, எந்தச் சுமையையும் ஒடம்பிலே ஏத்திக்காத சுயநலமியான, போகிகளிலே போகியான இவனைப் பார்த்துப் பரிதாபப்படறதும் கண்கலங்கறதும், பக்தி செய்யறதும் பார்க்கப் பார்க்க எனக்குச் சிரிப்புச் சிரிப்பா வரதே.

லோகத்திலே எவனைப் பார்த்தாலும் எனக்கு முட்டாளாத் தோணறது; பைத்தியமாத் தோணறது; அல்பமாத் தோணறது; அசிங்கமாத் தோணறது. ரொம்ப பெரிய மனுஷன் ரொம்ப மகான், பெரிய ஜன சமூகத்தையே கட்டி மேய்க்கிறவாள் - இவாளைப் பார்க்கும்போது, பெரிய

முட்டாள்களா, பெரிய அல்பங்களாகத் தோணறது. இந்தப் பெரிய அல்பங்களைத் தலை மேலே தூக்கிண்டு, சின்ன அல்பங்கள் கொண்டாடறப்போ சிரிப்புச் சிரிப்பா வரது.

எல்லாருமே நானறிந்த, பார்த்த அத்தனைக் கோடிப் பேரும், இந்தக் கிருஷ்ணையன், அவன் பெண்டாட்டி இந்துமதி, ரகுபதி, அவன் பெண்டாட்டி பேரு என்னவோ - அவ ஜகதா, இன்னும் கிருஷ்ணையனும் இந்துமதியும் சேர்ந்து வரிசையாய்ப் பெத்துப் போட்டிருக்காளே, அதுகள், அதுகளோட சேர்ந்து அதுகள் பெருக்கிண்டு இருக்கே அதுகள், ஒரு பிள்ளைக்கு வக்கில்லாத அந்தச் சாம்புவையன், அவலை நினைச்சுண்டு உரலை இடிச்சுண்டாளே அந்தச் சாரதா எல்லாருக்கும் பெப்பே காட்டிட்டு, தலைமேலே தூக்கி வச்சுண்டு ஆடினவா தலை மேலேயே ஏறிட்டுப் போனானே அந்த ராஜாராமன், எல்லாமே ஒரு மாதிரியான மிருகங்கள்தான்.

இந்த மிருகங்கள் ஆடை கட்டிக்கறதுனாலே இதுகளுக்கு மனுஷாள்னு பேரு. ஸயன்ஸ் கூட அப்படித்தான் சொல்றது. ஸயன்ஸ் என்ன, ஸயன்ஸ்? நான் சொல்றேன். அது அப்படித்தான். ஆடு, மாடு, சிங்கம், புலி, கரடி, காண்டாமிருகம், மனுஷன் எல்லாமே பொதுவான மிருகக் கூட்டத்தின் தனித்தனியான பெயர்கள் எல்லாத்துக்கும் ஒண்ணுக்கொண்ணு வித்தியாசம் உண்டு; அது மாதிரி வித்தியாசப்பட்ட இன்னொரு மிருகம் மனுஷன் இந்த வித்தியாசம்தான் ஒசத்தியாம். எனக்கு அதுதான் மட்டமாப் படறது.

மனுஷனைத் தவிர மத்த மிருகங்களுக்கு நெறிகள் முறைகளெல்லாம் கிடையாது. அதனாலே அதுகளுக்கு ஒரு நஷ்டமும் இல்லை. மனுஷ மிருகங்களுக்கு நெறிகள் உண்டு. முறைகள் உண்டாம்; சாஸ்திரங்கள், சடங்குகள், தர்மங்கள், நியாயங்கள், சட்டங்கள், தண்டனைகள் எல்லாம் உண்டு. இதெல்லாம் கெடறதும் உண்டு இதைக் கெடுக்கணுங்கிற ஆசையும் உண்டு கெடுக்க முடியலையேன்னு ஆத்திரமும் உண்டு. அதுக்காகப் பலி கொள்றதும் உண்டு; பலியாகிறதும் உண்டு. தனித்தனியா

அழிச்சுட்டு எல்லாரும் கூடி அது இன்னும் இருக்குன்னு திரை பிடிக்கிறதும் உண்டு. திரையை விலக்கறவனை ஏதோ புண்ணியகாரியம் மாதிரி தீயிலே போட்டுப் பொசுக்கறதும் உண்டு. பொய் உண்டு, வேஷம் உண்டு, துரோகம் உண்டு; மனசறிஞ்ச பொய், பழக்கமாயிட்ட பொய், புரை தீர்த்த நன்மை பயக்கும்' பொய் - அதெல்லாம் அவனவன் புத்தியைப் பொறுத்த வசதி - அதே மாதிரி வேஷம்; பிறருக்குக் காட்டற வேஷம், தனக்குத் தானே போட்டுக்கற வேஷம். முட்டாள்கள் மத்தியிலே கல்விமான் வேஷம். ஜம்பம் சாயாத இடத்திலே, 'ஆன்னு அவிந்து அடங்கிய' வேஷம், உலகத்தோடு ஓட்ட ஒழுகுகிற வேஷம்...

மற்ற மிருகங்களுக்கு இதெல்லாம் கிடையாதே! மற்ற மிருகங்களுக்கு இல்லாத இதெல்லாம் மனுஷ மிருகங்களுக்கு மட்டுமே உண்டு. இதிலே எந்த மிருகம் ஒசத்தி?

மத்த மிருகங்களைப் பார்க்கறச்சே எனக்குப் பொறாமையா இருக்கு. பறவைகளைப் பார்க்கறச்சே ஏக்கமா இருக்கு. அதுகளெல்லாம் இயற்கையோட சல்லாபமாயிருக்கு. மனுஷன் மட்டும்தான் இயற்கையோட சண்டைபோட்டுண்டே இருக்கான். இதிலே இவனுக்குப் பெருமை வேறே! அசட்டுப் பெருமை. வக்கிரப் பெருமை. இதையெல்லாம் நினைச்சுப் பார்க்கறச்சே எனக்குச் சிரிப்புச் சிரிப்பா வரது. நல்லவேளை, என்னைப் பைத்தியம்னு சொல்லாம சாமியார்னு சொல்றாளே, அதை நினைச்சாலும் சிரிப்புத்தான் வரது.

இந்த ஜனங்கள் முட்டாள்கள். எனக்கு என்னைத் தெரியும். இவாளுக்கு என்னையும் தெரியாது. அவளாயும் தெரியாது. எனக்கு இரண்டும் தெரியும்.

'ஸைகோ அனாலிஸிஸ்' பண்ணிப் பார்த்த இந்த ராஜா ராமன் ஒரு அப்நார்மல்; ஒரு கேஸ்.

நான் இவனை எடுத்து தனித்தனியாகக் கூறு போட்டு அலசி அலசிப் பார்த்திருக்கேன் - இவனைத் தனியே நிறுத்தி இவனிடமிருந்து நான் தனியே விலகி, என்னாலே

இவனை ஆலிங்கனம் பண்ணிக்கவும் முடியும்; அழிச்சிடவும் முடியும். இவன் அழிஞ்சா நானும் அழிஞ்சு போவேனோ? ஏனோ அதை நான் செய்யறதில்லை அது வீண். இவன் உள்ளேயே நான் இருக்கறச்சே என் மேலேயே இவனாக நான் கவிந்து இருக்கிறபோது ஆலிங்கனம் பண்ணிக்கிறது. அழிச்சுக்கறதுங்கிற வித்தையெல்லாம் எதுக்கு?

இப்படி ஒரு பக்குவம் வரதுக்கு இவனுக்கு இருபது வருஷமாச்சு. அதுவரைக்கும் இந்த ராஜாராமன் என்ன பாடுபட்டிருக்கான்? என்னென்ன வேஷங்களிலே தன்னை ஒளிச்சிண்டிருந்திருக்கான்? ஒளிஞ்சுக்கிறது சுலபம் தான். ஒளிஞ்சிண்டே இருந்துட முடியுமா?

ஜெயிலுக்குப் பயந்து ஒளிஞ்சிண்டிருந்து ஒளிஞ்ச இடத்தையே ஜெயிலாக்கிக்கிறதா? ஒளிஞ்சிக்க வேண்டியவா ஜெயிலுக்குப் போனாலும் தண்டனைதான். ஒளிஞ்சிண்டு இருந்தாலும் தண்டனைதான். அதனால் தான் இரண்டு கைகளையும் தட்டிண்டு இவன் வெட்ட வெளியிலே வந்து நின்னுட்டான்.

மொத மொதல்லே நான் எப்போ ஒளிஞ்சிண்டேன்? எதுக்கு ஒளிஞ்சிண்டேன்? எங்கே ஒளிஞ்சிண்டேன்?

இந்துமதி - அதுதான் கிருஷ்ணையரோட பெண்டாட்டி ராஜாராமனோட அம்மா குளிக்கப் போயிருக்காள்....

அவளோட அறையைப் பூட்டிண்டு போக மறந்துட்டா. கதவிலே சாவி தொங்கறது. அதுதான் அவளோட படுக்கையறை... அதுக்குள்ளே யாரையும் விடமாட்டா. உள்ளேயே தான் இருப்பாள். சமையற்காரப் பாட்டி மட்டும் ‘இந்து இந்து’ன்னு கூப்பிட்டுண்டு, காப்பியோ பாலோ எடுத்துண்டு உள்ளே நுழைஞ்சு நுழைஞ்சு வருவாள். ஏதோ சிதம்பர ரகசியம் மாதிரி ஒரு கதவை அப்படி லேசாகத் திறந்து உடம்பை உள்ளே வாங்கிண்டு உடனே மூடிண்டுடுவாள். அம்மா இருக்கிற வரைக்கும் அந்தக் கதவு முழுசாகத் திறந்து நான் பார்த்ததே இல்லை.

சமையற்காரப் பாட்டியோ அப்பாவோ ஒரு கதவைத் திறந்துண்டு உள்ளே நுழையறச்சே கொஞ்சம் திறக்குமே, அப்போ பார்க்கிறபோதே அந்த அறை ரொம்ப நன்னாயிருக்கும். இந்த வீட்டோட சம்பந்தப்படாத, நமக்கெல்லாம் சொந்தமில்லாத யாரோ ஒருத்தர் வீட்டு அறை மாதிரி அது இருக்கும். 'இது நம்ம வீட்டு அறைதானே?... அம்மாதானே அதிலே இருக்கா?... நமக்கும் தானே அது சொந்தம்? நாம மட்டும் ஏன் போகப்படாது'னு மனசு ஏங்கும்.

அந்த அறை ரொம்பப் பெரிசு, ஜன்னல்களிலே நீலத் திரை போட்டிருக்கும். அரை வாசற்படியிலே கலர் கலரா கண்ணாடிக் குழாய்களும், மணிகளும் கோத்துக் கட்டியிருக்கும். அறைக்குள்ளே பெரிய கட்டில். அவ்வளவு பெரிசு நான் பார்த்ததேயில்லே... அகலமாயிருக்கும்... அப்போ நான் சின்னக் குழந்தையாயிருந்ததனாலே ஒரு வேளை அது எனக்கு ரொம்பப் பெரிசாத் தோணித்தோ என்னவோ? ஆனாலும், அது பெரிசுதான். அந்தக் கட்டிலிலே குறுக்கே வரிசையா அடுக்கினா இரண்டு டஜன் குழந்தைகளை அடுக்கலாம்னு தோண்றது. பட்டாசு சரம் கோக்கற மாதிரி இன்னொரு பக்கம் இன்னொரு வரிசையும் அடுக்கலாம். அந்தக் கட்டிலுக்கு நேரே பெரிய நிலைக் கண்ணாடி பதிச்ச அந்த அலமாரி நிற்கும். கட்டில் மேலே படுத்துண்டு கட்டில் முழுக்கக் கண்ணாடிலே பார்க்கலாம். அப்படிப் பார்க்கறச்சே அந்த அறை இரண்டு மடங்கு பெரிசாத் தெரியும். வெயில் காலமானா அந்த அறைக்குள்ளே குளுகுளுன்னு இருக்கும். மேல் முகட்டிலே மரப்பலகை வச்சு, அது மேலே வார்னிஷ் அடிச்சு, பளபளன்னு இருக்கும். அம்மா அந்த அலமாரியை எப்பவாவது திறப்பாள். அந்த அறைமுழுக்க அந்த அலமாரி வாசனை அடிக்கும். அந்த அறைக்குள்ளே போகணும்னு மனசு துடிக்கிறதுக்கே அந்த அலமாரி வாசனையும் அம்மா வாசனையும்தான் காரணம். அந்த அலமாரிக்குள்ளே என்ன இருக்கு? என்னன்னவோ இருக்கும்!

அப்பா அடிக்கடி அந்த அறைக்குப் போவார். ராத்திரியிலே அவர் அங்கேதான் அந்தப் பெரிய கட்டில்லேதான் படுத்துக்குவார். ஜகதா, இல்லாட்ட மீனா, எது கடைசிக் குழந்தையோ அது பக்கத்திலே இருக்கிற தொட்டில்லே படுத்துத் தூங்கும். அம்மாவும் அந்தப் பெரிய கட்டில்லே அப்பாவோடதான் படுத்துக்குவா. எனக்குத் தெரியும். நான் தொட்டில்லே படுத்துண்டிருந்தப்போ பார்த்திருக்கேன்...

எங்களுக்கு யாருக்காவது உடம்புக்கு வந்துட்டா, அந்த அறையிலேதான் படுக்க வச்சுப்பா. ரகுபதியைக் கூட உடம்புக்கு வந்துட்டா அங்கேதான் படுக்க வச்சுக்குவா... அதுக்காகவே நமக்கு உடம்புக்கு ஏதாவது வரப்படாதான்னு இருக்கும்.

மத்த நாட்களிலே நாங்க எல்லாரும் வரிசையா கூடத்திலே பாய் போட்டுப் படுத்துண்டுடுவோம். நான் தான் அறை வாசற்படி பக்கமாகப் படுத்துண்டுடுவேன். எல்லாரும் தூங்கினப்புறமும் நான் முழிச்சுண்டிருப்பேன். எல்லாரும் தூங்கினப்பறம் - அதாவது தூங்கறதா நினைச்சிண்டப்பறம் அப்பா வருவார். அவர் அறைக்குள்ளே போய்க் கதவைச் சாத்தி தாழ்ப்பாள் போட்டுக்கறப்போ இந்த வீடே எனக்குச் சொந்தமில்லாதது மாதிரி, நான் இங்கே ஏதோ ஓர் அனாதைப் பிச்சைக்காரன் மாதிரி இருக்கிறதாத்தோணும். ஏனோ அப்பா மேலே கோபம் கோபமா வரும். படுக்கையிலேயிருந்து எழுந்து எங்கேயாவது ஓடிடலாம்னு தோணும். அப்போல்லாம் சில சமயத்திலே ரயிலடி பிளாட்பாரத்திலே மணி அடிக்கிற சப்தம் கேட்கும். அந்த மணிச் சத்தம் எண்ணைக் கூப்பிடற மாதிரி இருக்கும். கொஞ்ச நாழிக்கப்பறம் ரயில் வரும். அது எனக்காகவே வந்து காத்துண்டிருக்கிற மாதிரி நிற்கும். நான் வரலியேன்னு பெருமூச்சு விட்டுண்டு புறப்படற மாதிரி அந்த ரயில் சத்தம் எனக்குத் தோணும்.

இந்த அப்பா என்னைக் கொஞ்சறது, ரொம்பப் புத்திசாலின்னு மெச்சிக்கிறது, தட்டிக் கொடுக்கிறது எல்லாமே ஒரு வேஷம்னு எனக்கு அப்பவே புரிஞ்சுடுத்து.

ராத்திரியிலே எல்லாரும் தூங்கினப்பறம், திருடன் மாதிரி எங்களையெல்லாம் கூடத்திலே படுக்க வச்சுட்டு அந்த அறைக் கதவை மெதுவாகத் திறந்து, மெல்ல உள்ளே நுழையறாரே, அந்தத் திருட்டு அப்பா மட்டுந்தான் உண்மை; பகலெல்லாம் பாக்கிற அப்பா பொய். என்னை ஏமாத்தறார் இவர். எனக்கும் இவாளை ஏமாத்த முடியும். எனக்கு மட்டும் முடியாதோ?...

அம்மா குளிக்கிறதுக்குப் போயிருக்காள். கூடத்திலே யாருமே இல்லை போகும்போது அம்மா அறைக்கதவைப் பூட்ட மறந்துட்டா போலிருக்கு. கதவிலே சாவி தொங்கறது. ‘அவள் வரதுக்குள்ளே உள்ளே போய்ப் பார்த்துட்டு வந்துட்டால் என்ன’ங்கிற நினைப்பு வந்ததும் உடம்பெல்லாம் என்னவோ பாயறது; நெஞ்சு படபடன்னு அடிச்சுக்கிறது.

அப்பா ராத்திரியிலே போவாரே, அதே மாதிரி நான் போறேன் கதவைக் கொஞ்சமாத் திறக்கறேன். ஒரு ஓரமா உடம்பை உள்ளே நுழைச்சு வாங்கிண்டுடறேன்.

ஐயோ! இந்த அறை என்னமா இருக்கு! அந்த அலமாரி நிலைக் கண்ணாடி முன்னாலே போய் இடுப்பிலே கையை வச்சுண்டு பார்க்கறேன். கட்டில் மேலே ஏறி உட்கார்ந்துக்கிறேன். உட்கார்ந்துண்டு கண்ணாடியிலே பார்க்கறேன். அப்புறம் நின்னுண்டு பார்க்கிறேன். கட்டில் மேலே படுத்துண்டு பார்க்கறேன், புரள்றேன்.

ஐயையோ! அம்மா வராள் போல இருக்கே? கூடத்திலே சத்தம் கேக்கிறதே? இப்போ என்ன பண்றது?

கட்டில்லேருந்து இறங்கிக் கட்டிலுக்கு அடியிலே ஒளிஞ்சுண்டுடறேன்.

அம்மா வராள்... கதவைத் திறந்துண்டு உள்ளே வந்து அறைக் கதவைத் தாழ்ப்பாள் போட்டுண்டு நிலைக்கண்ணாடி முன்னே நின்னு உடம்பில சுத்தியிருந்த டவலோட அந்த நாற்காலியிலே உட்கார்ந்துக்கிறா. அப்பறம் அந்த டவலையே எடுத்து தோள் மேலே வழியற

தலைமுடியைத் துவட்டிக்கிறாள். நான் கண்ணை முடிண்டுடறேன். எனக்கு என்ன பண்றதுன்னு தெரியலை. அவள் அப்படியே உட்கார்ந்துண்டிருக்காள். அப்படியே உட்கார்ந்துண்டே தலையை ஆத்திக்கறா. அப்போ யாரோ வந்து கதவைத் தட்டறா.

‘யாரது?ன்னு அம்மா கேக்கறா. நல்லவேளை! சமையல்காரப் பாட்டிதான். அந்த டவலையே உடம்பிலே சுத்திண்டு கதவண்டை போய்க் கொஞ்சமாத் திறந்து, கதவிடுக்கு வழியாப் பாட்டி கொடுத்த நெருப்புத் தட்டத்தையும் சாம்பிராணி டப்பாவையும் வாங்கிக்கிறாள். அப்பத்தான் நான் கவனிக்கிறேன், அம்மாவுக்கு ஏன் வயிறு இவ்வளவு பெரிசா இருக்கு?... எனக்கு ஏனோ அழுகை அழுகையா வரது. அம்மாவைப் பாக்கிறச்சே பாவமாயிருக்கு. நான் இப்படி ஒளிஞ்சுண்டு பார்த்துண்டிருக்கிறது தெரியாம, அவன் தன்பாட்டுக்கு உடம்பிலே துணி இல்லாம ஏதோ ஒரு பாட்டை முணுமுணுத்துண்டு இருக்கிறப்போ, அவளை ஏமாத்தறமேன்னு எனக்குப் பாவமாயிருக்கு. இவள் சீக்கிரம் ஒரு புடவையைக் கட்டிண்டு சித்தெ வெளியிலே போகமாட்டாளா, அந்தச் சமயம் நாம வெளியே ஓடப் போகலாமேன்னு இருக்கு. ‘நான் எதுக்கு இப்படி ஒளிஞ்சிண்டேன்? அதுன்னா தப்பாப் போச்சு! இப்போ என்ன பண்றது?’ன்னு குழம்பிண்டு இருக்கறச்சே, தட்டத்திலே சாம்பிராணியைப் போட்டு, நாற்காலியிலே அண்ணாந்து கழுத்துக்கு அடியிலே புகை படும்படியா வளைச்சிண்டு பின் பக்கமா சாயறா....

கட்டிலுக்கடியிலே முழங்காலையும் முழங்கையையும் தரையிலே ஊணிண்டு இருந்த நான் கொஞ்சங் கொஞ்சமா பின்வாங்கறேன். திடீர்னு அவள் பார்வை கட்டிலுக்கு அடியிலே இருந்த என் மேலே பட்டுடறது...

சாம்பிராணி நெருப்பு மேலே பட்டுட்டது மாதிரி நாற்காலியிலேருந்து துள்ளி எழுந்திருக்கிறா. இந்த பதட்டத்திலே மேலே இருக்கிற அந்தத் துணியும் கீழே விழுந்துட்டது. அதை எடுக்கிற அவசரத்திலே நெருப்புத்

தட்டத்தையும் காலாNலு ஏத்தி விட்டுடறா... துண்டை அள்ளி மார்மேலே பிடிச்சுண்டு பல்லைக் கடிச்சுண்டு கத்தறா.

“ஏ சனியனே! இங்கே வந்து கட்டிலுக்கு கீழே ஒளிஞ்சிண்டு என்ன பண்றே? வெளியே வந்து தொலை!” அவளாலே குனிஞ்சு பார்க்க முடியலே.

நான் கட்டிலுக்கு அந்தப்புறமா எழுந்து நிக்கறேன். ரெண்டு பேருக்கும் நடுவிலே கட்டில் கெடக்கு. அவளுக்குப் பின்னாலே அலமாரி நிலைக்கண்ணாடியிலே அவ பின்புறம் அப்படியே தெரியறது. எனக்கு ஒண்ணுமே சொல்லத் தோணலே. அவள் முகம் ரத்தமாகக் குழம்பியிருக்கு. அது கோபமா? அவமானமா? அருவருப்பா? பல்லைக் கடிச்சிண்டு யாரோ ஓர் அந்நியனை, இதுக்கு முன்னாலே பார்த்தே இல்லாத யாரோ ஒருத்தரை விரட்டற மாதிரி கத்தறா.

“போடா! போயிடு வெளியிலே!”

நான் கதவைத் திறந்துண்டு வெளியிலே ஓடிட்டேன். வீடே பிடிக்கல்லே. தோட்டத்துக் கதவைத் திறந்துண்டு காவேரி ஆத்தங்கரைக்கு ஓடிவந்து, இந்த மண்டபத்திலே உட்கார்ந்துண்டு அழுதேன்...

நான் செத்துப் போயிடணும்னு ஸ்வாமியை வேண்டிண்டேன். நான் செத்துப் போகணும். எனக்காக இவாளெல்லாம் அடிச்சிண்டு அழணும்னு கற்பனை பண்ணிக்கிறபோது சுகமாயிருந்தது.

நான் தெரிஞ்சு வேணும்னே அந்தத் தப்பைச் செய்யல்லே. அதுக்காக அம்மா என்னைக் கோவிச்சுண்டாள். அவள் என்னைத் தப்பா நினைச்சுண்டாள். நான் அதுக்காகவே வந்து அங்கே ஒளிஞ்சிண்டு பார்த்தேன்னு நினைச்சுண்டாள். அப்படி அவள் நினைச்சுண்டாளேன்னு நினைக்க நினைக்க எனக்கு அழுகையா வரது. நான் என்ன சொன்னாலும் அவள் அப்படி நினைச்சுண்டது மாறப் போறதில்லை.

நான் அன்னிக்கு நூறு தடவைக்கு மேலே ஸ்வாமிகிட்டே மன்னிப்பு கேட்டுண்டேன். அம்மாவுக்கு என் மேலே இருக்கிற கோபத்தை மாத்தணும்னு ஸ்வாமியைப் பிரார்த்திச்சுண்டேன். பூஜையறையில் உட்கார்ந்துண்டு ஒரு பெரிய நோட்புக்கிலே ஆயிரத்தெட்டு ஸ்ரீராம ஜெயம் எழுதினேன்.

அதுக்கப்புறம் அந்த அறைக்குள்ளே போகணுங்கிற எண்ணமே எனக்கு இல்லே.

அம்மா என்னைப் பார்க்கிறப்போல்லாம் ‘சிடு சிடு’ன்னு இருந்தாள். அவள் எப்போதுமே அப்பாவைத் தவிர எல்லார்கிட்டேயும் ‘சிடுசிடு’ன்சுண்டாள். அவள் என்னைத் தப்பா நினைச்சுண்டாள். நான் அதுக்காகவே வந்து அங்கே ஒளிஞ்சிண்டு பார்த்தேன்னு நினைச்சுண்டாள். அப்படி அவள் நினைச்சுண்டாளேன்னு நினைக்க நினைக்க எனக்கு அழுகையா வரது. நான் என்ன சொன்னாலும் அவள் அப்படி நினைச்சுண்டது மாறப் போறதில்லை.

நான் அன்னிக்கு நூறு தடவைக்கு மேலே ஸ்வாமிகிட்டே மன்னிப்பு கேட்டுண்டேன். அம்மாவுக்கு என் மேலே இருக்கிற கோபத்தை மாத்தணும்னு ஸ்வாமியைப் பிரார்த்திச்சுண்டேன். பூஜையறையில் உட்கார்ந்துண்டு ஒரு பெரிய நோட்புக்கிலே ஆயிரத்தெட்டு ஸ்ரீராம ஜெயம் எழுதினேன்.

அதுக்கப்புறம் அந்த அறைக்குள்ளே போகணுங்கிற எண்ணமே எனக்கு இல்லே.

அம்மா என்னைப் பார்க்கிறப்போல்லாம் ‘சிடுசிடு’ன்னு இருந்தாள். அவள் எப்போதுமே அப்பாவைத் தவிர எல்லார்கிட்டேயும் ‘சிடுசிடு’ன்னு தான் இருப்பாள். ஆனால் எனக்கென்னவோ அவள் ‘சிடுசிடு’ப்பைப் பார்க்கிறபோதெல்லாம் நான் அறைக்குள்ளே ஒளிஞ்சிண்டிருந்தேனே அதுக்காகத்தான் இப்படி இருக்காள்னு தோணும். என்னிக்காவது ஒரு நாளைக்கு அவளா ஆசையாக் கூப்பிடுவாள். பாட்டுப் பாடச் சொல்லுவாள். முன்னெல்லாம் அது ரொம்ப சந்தோஷமா

இருக்கும். அந்த அறையிலே ஒளிஞ்சிண்டேனே அதுக்கப்புறம் அந்த சந்தோஷமில்லை. கூப்பிட்டனுப்புவாள், போய் நிற்பேன். ஏதாவது கேட்பாள்; கேட்டதுக்குப் பதில் சொல்லுவென். பாடச் சொல்லுவாள் பாடுவேன் தட்டிக் கொடுப்பாள்; கட்டிப் பிடிச்சு முத்தம் கொடுப்பாள். ‘எப்போ இவள் என்னை விடுவாள்? இங்கேயிருந்து போகலாம்’னு இருக்கும் எனக்கு. அவள் என்னைத் தொடும்போது அருவருப்பாயிருக்கும். எங்களை எல்லாம் போகச் சொல்லிட்டுக் குழந்தைக்குப் பால் கொடுப்பாள். ஆனா அப்பா மட்டும் இருப்பார். அவரைப் போகச் சொல்லமாட்டாள். நாங்களெல்லாம் வெளியே வந்தப்புறம் அவர் அங்கேயே இருப்பார்.

ஒருநாள்கூட இந்த அம்மா எங்களுக்குச் சாதம் போட்டதில்லை. எங்களுக்கெல்லாம் சமையல்காரப் பாட்டிதான் சாதம் போடுவாள். அம்மா அப்பாவுக்கு மட்டும்தான் போடுவாள்.

அதுவும் எப்படி? கூடத்திலே தூண் ஓரமா மணை போட்டு, இலைபோட்டுச் சாதம், குழம்பு, கறி எல்லாத்தையும் உட்கார்ந்து பரிமாறுகிற அம்மாவுக்குக் கைக்கு எட்டற தூரத்திலே பாட்டி கொண்டு வந்து வைக்கணும். அப்பா வந்து உட்கார்ந்ததும் பரிமாற ஆரம்பிப்பாள். அவர் சாப்பிட்டு எழுந்தப்புறம் அந்த மணையை எடுத்துத் தூணோரமாச் சாத்திட்டு. அந்த இலைக்கு முன்னே அம்மா உட்காருவாள். அம்மாவுக்குப் பாட்டி பரிமாறுவாள்.

பாட்டிக்குக் குணம் நன்னாயிருந்தால், ‘பாவம்! அவள் உடம்புக்கு முடியறதில்லே. அவள் என்ன பண்ணுவாள்?’னு சொல்லுவாள். குணம் கொஞ்சம் வேறே மாதிரியாயிருந்தால், ‘இதுக்கெல்லாம் முடியாது; வருஷத்துக்கு ஒண்ணு பெத்துக்க மட்டும் முடியறது’ன்னு முனகிக்குவாள். அந்த மாதிரி பாட்டி அம்மாவைப் பத்தி ஏதாவது சொல்லும் போது முன்னெல்லாம் என் மனசுக்குக் கஷ்டமாக இருக்கும். இப்போதெல்லாம் பாட்டி சொல்றது சரிதானேன்னு தோண்றது.

நான் கொஞ்சங் கொஞ்சமாக அம்மாவை விட்டுத் தூரத் தூர விலகிண்டே இருந்தேன். பல நாட்கள் தொடர்ந்து அவளைப் பார்க்காமல்கூட இருந்தேன்.

அவளுக்கு உடம்பு ரொம்ப மோசமா இருந்தப்போ கூட அவளாக் கூப்பிட்டு அனுப்பினால்தான் நான் போய்ப் பார்ப்பேன். ரகுபதியும் மத்தக் குழந்தைகளும் அந்தக் கடைசி மூணு நாளும் அவளை விட்டுப் பிரியவே இல்லை. நான் பூஜை அறையிலே ஸ்வாமி கும்பிட்டுண்டிருந்தேன். ஏதோ அவளுக்காகத்தான் நான் தியானம் பண்ணிண்டிருந்ததா எல்லாரும் பேசிண்டா. ஆனால் உண்மை அப்படி இல்லை; நான் அங்கே ஒளிஞ்சிண்டிருந்தேன்.

அப்பா ஒரு பக்கம் உட்கார்ந்துண்டு. 'இந்து! இந்து! என்னை விட்டுட்டுப் போயிடாதேடீ'ன்னு கண்ணைத் தொடைச்சிக்கிறதும், அவள் கையைப் பிடிச்சிக்கிறதும், இந்த ரகுபதி, ஜகதா, மீனா இன்னும் இருக்கிறதுகளெல்லாம் இன்னொரு பக்கம் நின்னுண்டு அழறதையும் பார்க்கறச்சே தலைதலைன்னு அடிச்சிண்டு எங்கேயாவது ஓடிடலாமான்னு எனக்கு இருக்கும். இந்தக் கண்றாவியிலேருந்து தப்பிச்சுக்கிறதுக்காகப் பூஜை அறையிலே போய் ஒளிஞ்சுண்டேன்...

சாகக் கிடக்கிற அம்மாவைப் பத்தி இப்படி நினைக்கிறதும், இப்படி வந்து ஒளிஞ்சுக்கிறதும் பாவமில்லையாங்கிற நினைப்பினாலே நான் ஸ்வாமியண்டே மன்னிப்புக் கேட்டுண்டதுண்டு; அதுக்காக ஓர் ஆயிரந்தடவை ஸ்ரீராம ஜெயம் எழுதினதும் உண்டு.

அம்மா செத்துப் போனாள். எல்லாரும் 'ஓ'ன்னு அழுதா. எல்லாரும் அழறதைப் பார்த்து நானும் கொஞ்சம் அழுதேன். ரகுபதிதான் ரொம்ப அழுதான். அப்பா நினைச்சு நினைச்சு அழுதார். திடீர்னு உட்கார்ந்த இடத்திலே முகத்திலே துண்டைப் போட்டுண்டு அழுவார். அப்போல்லாம் என் மனசுக்குள்ளே சுகமாயிருக்கும். 'நன்னா வேணும்'னு மனசுக்குள்ளே சொல்லிண்டேன். இனிமே ராத்திரியிலே

திருடன் மாதிரி, பூனை மாதிரி அறைக் கதவைத் திறந்துண்டு நுழைய முடியாதோன்னோ?

ஐயோ பாவம்! அப்பாவைப் பத்தி இப்படி நினைக்கலாமோ? பாவம் இல்லையோன்னு நினைச்சி, அதுக்காகவும் நான் ஸ்வாமியிடம் மன்னிப்புக் கேட்டிருக்கேன். விபூதியை அள்ளி நெற்றி நிறையப் பூசிண்டு 'நேக்கு நல்ல புத்தியைக் குடு'ன்னு அழுதிருக்கேன்...

அம்மா செத்துப் போனப்புறம் ஒருநாள்கூட நான் அவளை நினைச்சு அழுததில்லை.

அவள் மனசிலே என்னைப் பத்தித் தப்பா நினைச்சுக்கும் படியா அன்னிக்கி நடந்துண்டதுக்காக, அநியாயமா அப்படி நடந்துட்டதுக்காக 'அம்மா, என்னை மன்னிச்சுக் கோடீ'ன்னு நான் அவளை வேண்டிண்டிருக்கேன். ஸ்வாமியை நினைச்சுப் பிரார்த்திச்சுக்குவோமே, அந்த மாதிரி அவளைப் பிரார்த்தனை பண்ணியிருக்கேன்.

அம்மாவோட அந்த அறை அவளுக்கு அப்புறம் இரண்டு கதவுகளும் விரியத் திறந்தேதான் கிடக்கும். இந்த வீட்டிலே இருக்கிற எல்லா அறைகளையும் போல தான் இப்ப அதுவும் இருக்கு. அப்பா மட்டும் ராத்திரியிலே தனியா அந்த பெரிய கட்டிலிலே படுத்துக்கறதைப் பார்த்தால் பாவமாயிருக்கு. அவர்கூட ஜகதா, மீனா, சமயத்திலே ரகுபதி - என்னையும் சமையல்காரப் பாட்டியையும் தவிர மத்தவா எல்லோரும் போய்ப் படுத்துக்குவா. பகல்லே இந்தப் பசங்க பூரா அந்த அறைக்குள்ளே போய் ஹதம் பண்றா... நான் ஒரு தடவைகூட இந்தக் கூத்திலேயெல்லாம் கலந்துண்டதே இல்லை. அது அம்மாவுக்குப் பிடிக்காத காரியம்னு எனக்குத் தெரியுமா! அதுவுமில்லாம முன்னெல்லாம் கதவை மூடிமூடி வச்சிருக்கும்போது அந்த அறையைப் பத்தி என்னென்னவோ கற்பனைகள் இருக்குமே, அதெல்லாம் ரெண்டு கதவுகளையும் திறந்து வச்சதுக்கப்புறம் 'பொசுக்'னு போயிடுத்து. அந்த அலமாரிக்கு இப்ப வாசனையே இல்லை; அந்த அறைக்கு அழகே இல்லை. எல்லாம் அம்மாவோட போயிடுத்து.

இருந்து போயிடுத்தா? இருந்ததே இல்லையா? எல்லாமே என்னோட கற்பனைதானோ? அம்மாங்கிறது கற்பனையா? ஆமாம், எல்லாமே கற்பனைதான். அம்மாங்கிறதும் அப்பாங்கிறதும் - உறவு பாசம் எல்லாமே நம்மோட கற்பனைதான்.

அம்மாங்கிற உண்மை பொய்யாகி, அம்மாங்கிற நினைப்பு ஒரு கற்பனையானப்பறம், அவள் கனவாகவும் வந்தாள்.

அன்னிக்கு நான் அறையிலே கட்டிலுக்கு அடியிலே ஒளிஞ்சிண்டிருக்கிறப்போ வந்தாளே. அதே மாதிரி வந்தாள் மார்புக்கு மேலே டவலைச் சுத்திண்டு நடந்து வரச்சே அந்தச் சின்னத்துண்டு நடுவிலே திறந்து திறந்து வேறே மூடறது. யாரும் இல்லேங்கிறதனாலே அதை லட்சியம் பண்ணாம நடந்த வராள். முழங்காலும் தொடையும் வெள்ளை வெளேர்னு - பச்சை நரம்பு ஓடறது தெரியறது. அன்னிக்கு மாதிரியே வந்து கண்ணாடி அலமாரியண்டை நின்னுண்டு அந்தத் துண்டையே எடுத்துத் தலையைத் துவட்டுகிறாள். நான் இப்போ கட்டிலுக்கு அடியிலே ஒளிஞ்சிண்டு இல்லை. அப்பா மாதிரி ‘ஜம்’முனு கட்டிலுக்கு மேலேயே படுத்துண்டிருக்கேன். நான் கண்ணை ஒண்ணும் மூடிண்டுடலை. நன்னவே பார்த்திண்டிருக்கேன். அவளுக்குப் பின்னாலேயிருந்து அவளோட பின் பக்கத்தையும் கண்ணாடியிலே தெரியிற அவளோட முன் பக்கத்தையும் - அவளை நான் முழுசாகவே பார்த்துண்டிருக்கேன். அவளும் கண்ணாடி வழியாக என்னைப் பார்க்கிறாள். நான் இங்கே இருக்கிறது தெரிஞ்சு மந்தஹாஸமா சிரிக்கிறாள் - அந்த டவலை உடம்பிலே லேசாப் போர்த்திண்டு என் பக்கத்திலே வந்து உட்கார்ந்துக்கிறாள். என்னை அப்படியே வாரி வெறும் உடம்பிலே மார்மேலே அணைச்சுக்கிறாள். அவள் ஈரக் கூந்தல் சில்லுனு என் முதுகெல்லாம் விழுந்து மூடிக்கிறது. அது ரொம்ப சுகமாயிருக்கு; அந்த சுகத்திலே நான் அழறேன்; என்னத்துக்கு அழறேன்னு தெரியல்லே. ஆனால் நான் ரொம்ப வருத்தமா ரொம்ப சோகமா நெஞ்சு வெடிச்சுப் போற மாதிரி அழறேன். ‘அம்பி! நான் உன்னை விரட்ட

மாட்டேண்டா, அன்னிக்குக் கூட நான் விரட்டலே, உங்கப்பாவுக்காத்தான் விரட்டினேன்’னு என் காதிலே ரகசியமா சமாதானம் சொல்றாள். உங்கப்பன், அந்தக் கிருஷ்ணையன் இருக்கானே அவன் மகா பாவிடா, என்னையும் என் குழந்தைகளையும் பிரிச்சு வைக்கிற பாவி. அவனோட இந்து செத்துப் போயிட்டாள். இனிமே அந்த மனுஷன் காவேரிக்கரை மண்டபத்திலே உட்கார்ந்து மசானத்தைப் பார்த்துண்டு இருக்க வேண்டியதுதான். இப்போ நான் அம்பியோட இந்துடா’ன்னு - என்னென்னவோ சொல்லிண்டு என்னைக் கட்டித் தழுவிண்டு இந்தக் கட்டில்லே அப்பாவோட படுத்திருப்பாளே, அதே மாதிரி - தழுவிண்டு போர்த்திண்டு, போர்த்திண்டு தழுவிண்டு என்னை நெருக்கி அணைச்சு... எனக்கு மூச்சு திணர்றதே... நன்னா இருக்கு.. ஆனால் திணர்றதே...

முழிச்சுண்டேன்...

ஐயோ தெய்வமே! இது என்ன, இப்படி ஒரு கெட்ட சொப்பனம் கண்டேன்! முழிச்சுண்ட உடனே உடம்பெல்லாம் கூசறதே, வயத்தை என்னவோ செய்யறதே. என் மேலேயே எனக்குக் கோபம் கோபமா வரதே, எங்கேயாவது சுவரிலே தலையை முட்டிண்டு அழலாம்போல இருக்கே. என்ன இப்படி? ஏன் இப்படியெல்லாம் கனவு காண்கிறேன்! இது என்ன சாபம்! அப்பாவையோ, அம்மாவையோ இவ்வளவு தப்பா, அசிங்கமா நான் நினைச்சதே இல்லையே? இப்படியெல்லாம் கனவு காண்றது தோஷமில்லையோ? பாவமில்லையோ?

அடுத்தநாள் முழுக்க இந்தப் பாவத்துக்கு நான் பிராயச்சித்தம் பண்றேன். பச்சைத் தண்ணீர்க் கூடக் குடிக்காமல் உண்ணாவிரதம் இருக்கேன். பூஜை அறைக்குள்ளேயே தாழ்ப்பாள் போட்டுண்டு ஸ்வாமியை ஸ்தோத்திரம் பண்றேன்... விரல் வலிக்கப் பல்லைக் கடிச்சுண்டு ஸ்ரீராம ஜெயம் எழுதறேன். வலிக்க வலிக்க நெத்தியிலே பிள்ளையார் குட்டுப் போட்டுக்கிறேன்.

முழங்கால் கெஞ்சற வரைக்கும் தோப்புக்கரணம் போடறேன்... நாள் பூராவும் அழுதுண்டே இருக்கேன்.

அப்பாவும் மத்தவாளும் அதை பக்தின்னு நினைச்சுக்கிறா; அம்மா மேலே எனக்கு இருக்கிற பக்தியினாலே நான் விரதம் இருக்கிறதாகவும், பூஜை பண்றதாகவும் பெருமையாக பேசிக்கிறா.

நானும் அடிக்கடி இந்த மாதிரிக் கனவுகள் காண்றேன் அழறேன்; விரதமிருக்கிறேன்; ஸ்ரீராமஜெயம் எழுதறேன்.

வயசு ஆக ஆக இந்தக் கனவும் வேறே வேறே மாதிரியெல்லாம் என்னைச் சூழறது....

தேவதைகள் மாதிரியும். மோகினிகள் மாதிரியும் என்னை மயக்குகிற பெண்களின் கூட்டம் எத்தனையோ என் கனவுகளில் வரது. அவாளோட நான் சல்லாபம் செஞ்சிண்டிருக்கச்சே அவாளெல்லாம் அம்மாவா ஆயிடறாளே; அந்தக் கனவுகள் கனவாகவே நிஜ உலகுக்கு வராம அப்படியே தொடர்ந்துண்டு இருந்தா நன்னாவேயிருக்கும். அந்தக் கனவு லோகத்திலே அம்மாவோட உள்ள அந்த அனுபவம் தப்புன்னோ, பாவம்னோ, அசிங்கம்னோ தோன்றதே இல்லை. அது ரொம்ப நியாயம் போலவும், அதுவே நியாயம் போலவும், அவள் எனக்குத்தான் சொந்தம்கிறது போலவும், என்னோட உரிமை போலவும் இருக்கு. முழிச்சிண்டாதான் அப்படியெல்லாம் தோணினதனாலேயே அது ரெண்டு மடங்கு தப்பாகவும், பாவமாகவும், தோஷமாகவும் ஆயிடறது.

நான் இரண்டாகிப் போனேன். அதிலே ஒண்ணு கனவுலே என்னை மயக்கறது. மகிழ்ச்சி ஊட்டறது. ஆனால் அதுவே முழிச்சுண்ட உடனே என்னை உறுத்தறது; வாள் கொண்டு என் மனசைப் போட்டு அறுக்கிறது. எனக்குள்ளே ஏதோ ஒரு குட்டிச் சாத்தான் புகுந்துண்ட மாதிரி என்னை அலைக்கழிக்கிறது. எனக்குள்ளே வந்து உட்கார்ந்துண்டு அசிங்கம் பண்றது. நான் பகலிலே எவ்வளவுக்கெவ்வளவு ராத்திரியிலே இந்த சைத்தான்தான் என்னை ஆளறது.

தூங்கினால் எங்கே இந்த கனவு வருமோன்னு பல ராத்திரிகள் நான் தூங்காமலே இருந்திருக்கேன். கடைசியிலே இந்த கனவு வந்து தொலைஞ்சாலும் சரின்னு தூங்கியிருக்கேன். ஆனால் இந்த கனவு காண்றப்போ ரொம்ப சுகமாயிருக்கு, பகவான்கிட்ட தவிர இதை நான் எந்த மனுஷாகிட்டே சொல்ல முடியும்?

நான் பெண்களை மோகிச்சதேயில்லை. மோகிக்கிறதுக்கு அவா கிட்டே என்ன இருக்கு? அப்படி ஒரு மோகம் எனக்கு வரவும் வராது. ரகுபதியும், நான் படிக்கிறச்சே என்னோட இருந்த சில பையன்களும் பொம்மனாட்டிகளைப் பத்தி என்னவெல்லாமோ பேசிக்குவா; எனக்கு அருவருப்பாயிருக்கும்; அசிங்கமாயிருக்கும்.

எனக்கு அவா பேசறது செய்யறது எல்லாம் காலித் தனமாகத் தோணும். அவாளை நான் கேவிச்சுண்டுடுவேன். ரகுபதிக்கும் என்கிட்டே பயம்தான். பெரிய வாளைக்கண்டு பயப்படறமாதிரி என்னைக் கண்டும் பையன்கள் பயப்படுவான்கள்; மரியாதை கொடுப்பான்கள். பெரியவாகூட நான் ரொம்பப் பக்திமான்னும் ஆசாரசீலன்னும் பெருமையாய்ப் புகழ்ந்து பேசிக்கிறச்சே, நான் என் மனசுக்குள்ளே அவாளை 'மடசாம்பிராணிகள்'னு நினைச்சுக்குவேன். எனக்கு எல்லார்கிட்டேயும் வரவர மரியாதை குறைஞ்சுண்டே வந்தது. ஆனால் அதை நான் வெளியே காண்பிச்சுக்கிறதில்லே...

அடிக்கடி, மாசத்துக்கோரு தடவை இந்தச் சாம்பு மாமா வந்துடும். சரியான தத்தி. அப்பாவும் அதுவுமாச் சேர்ந்துண்டு ஒரு சல்லாபம் பண்ணிக்கும்கள். இவா சல்லாபத்துக்கு நடுவே என்னை வேறெ கூப்பிட்டுப் பாடச் சொல்லிடுவா. அந்த ஸ்லோகம் சொல்லு. இந்த ஸ்லோகம் சொல்லுன்னு அப்பா வேறே அரிப்பார். ஒரு ஸ்லோகத்துக்கும் இந்த மனுஷருக்கே அர்த்தம் தெரியாது. இவா ரசனையே பொய்யின்னு எனக்கு நன்னாத் தெரியறப்போ, இவா பாராட்டுதலை நான் எப்படி நம்பறது?

ஒவ்வொரு தடவை வரும்போது, ‘காலேஜிலே படிக்கிறச்சே எங்காத்திலே கொண்டு வந்து விட்டுடு. ஹைஸ்கூல் படிக்கிற வரைக்கும்தான் உன் பிள்ளை, அப்புறம் என் பிள்ளை’ன்னு சாம்புவையர் சொல்லும்போதெல்லாம் எனக்கு எரியும். தனக்குத் சொந்தமா ஒரு பிள்ளை பெத்துக்கிறதுக்கு இந்த மனுஷனுக்குக் கையாலாகாத பலவீனம் அசிங்கமா என் மனசுக்குப் புரியும்.

கடைசியிலே அப்படியேதான் ஆச்சு. அன்னிக்கு அப்பா என்னைக் கொண்டு போய் அவாத்திலே விட்டப்போ என்னவோ ஒரு பெரிய விபரீதம் ஏற்படப் போறதுங்கிற பயம் எனக்கு வந்தது. அதனால்தான் நான் அழுதேன்.

கனவிலே அம்மாவைப் பார்க்கும்போது மட்டும் வர்ர அந்த உணர்ச்சி, அந்தப் பரவசம் - நிஜ வாழ்க்கையிலே எந்தப் பெண்கிட்டேயும் வராத, வர முடியாத அது. கனவு மாதிரியே, நிஜத்துக்குச் சாரதா மாமியைப் பார்க்கிறச்சே எனக்கு ஏற்பட்டது. அதிலே எனக்கு ஒரு சந்தோஷமும் ஏற்பட்டது. அந்த சந்தோஷத்தை, அந்தச் சந்தோஷத்துக்கான நியாயத்தை ஒவ்வொரு நாளும் தன்னைப் பெற்றெடுத்த தாயின் நினைவிலே அனுபவிச்சிண்டு அதுக்காக வாழ்க்கை பூரா தவிச்சிண்டு இருக்கானே அவனால்தான் புரிஞ்சிக்க முடியும்.

அந்த ஆத்துக்குப் போய் அவா குடும்பத்திலே நானும் ஒருத்தனா ஆன அன்னிக்கே என்னைப் பொறுத்த வரைக்கும் அந்த விபரீதம் நடந்து முடிஞ்சு போச்சு.

சாரதா மாமியைப் பார்த்ததுக்கப்பறும் என் கனவிலே அம்மா வரதேயில்லை; மாமிதான் வருவாள். அம்மா வந்த மாதிரியே வருவாள்; எல்லாம் அதே மாதிரிதான்.

ஆனால், இந்தக் கனவுகளுக்காக நான் வருத்தப்படறதில்லை; பயப்படறதும் இல்லை; ஸ்ரீராமஜெயம் எழுதறதும் இல்லை. சொல்லப்போனால் ஒவ்வொரு நாளும் இந்தக் கனவு வரணும், வரணும்னு நான் விரும்பினேன்.

ஆனால், சில சமயங்களிலே இது தப்புன்னு தோணும். தன் வயத்திலே பிறந்த குழந்தை மாதிரி என்னைப் பெற்றவள்கூடக் காட்டாத அன்பையும், பாசத்தையும் என்கிட்டே காட்டற மாமியை இப்படிக் கேவலமா, அசிங்கமா, ரகசியமா அனுபவிக்கிறது ஒரு துரோகமில்லையான்னு மனச்சாட்சி குத்தும்.

நாம் என்ன செய்ய முடியும்? கனவுகளை விரும்பறதும் வெறுக்கிறதும் கனவு கண்ட பிறகுதானே முடியறது. கனவு காண்றதே நம்ப கையிலே இல்லியே! முன்னெல்லாம் நான் காணுகிற அந்தக் கனவை இது தடுத்தது என்கிறதனாலேயே, அந்தக் கனவைவிட இது தேவலை என்கிறதனாலேயே, இதை நான் விரும்ப ஆரம்பிச்சிருக்கலாம். ஆனாலும் என் அறிவு, என் குணம், என் மனச்சாட்சி இதுக்காக உறுத்திண்டேயிருந்தது.

அந்த உறுத்தலினாலேயே, அல்லது நான் ரொம்ப நல்லவன்னு எடுத்திருக்கிற பெயரை நிலை நிறுத்திக்கணுங்கிறதனாலேயே முன்னே மாதிரி தொடர்ந்து விரதமிருந்தேன்; பக்தி செய்தேன். ஆனால் முன்னே மாதிரி எனக்கு அதிலே நம்பிக்கையில்லை; ஒரு வசதிக்காகவே நான் அதைப் பயன்படுத்திண்டேன்.

சாம்புவையரும், மாமியும் என்னைச் சீராட்டின மாதிரி பல காலம் தவம் கிடந்து பெத்தெடுத்த தன் சொந்தக் குழந்தையை யாராவது சீராட்டியிருப்பாளாங்கிறது சந்தேகம்தான். ஆனால் எனக்கு அதெல்லாம் வெறும் அசட்டுத்தனமாகத்தான் பட்டது. என் ஸ்தானத்திலே வேறே யார் இருந்திருந்தாலும் இவா இதைச் செய்திருப்பாங்கிறதனாலே அந்தச் சீராட்டுதலிலே பாத்யதை இல்லாமலேயே நான் பங்கு பெத்துண்டேன். பெத்தவாள் பாசத்தையே ஓர் அசட்டுத்தனம்னு புரிஞ்சிண்ட எனக்கு இவா பாசம் பரிதாபகரமான அசட்டுத்தனமாத் தோணித்து. இவ்வளவு பாசம் வச்சிருக்கிற இவா மனசு கோணாமல் நடக்கிறது என் கடமைன்னு நினைச்சேன்.

யார் மனசும் கோணுகிற மாதிரி நடந்து எனக்குப் பழக்கமில்லை. அந்தச் சின்ன வயசிலே என்னுடைய தப்பு எதுவுமில்லேயே அம்மாவின் மனசு கொஞ்சம் கோணிப் போனதாலே அல்லவா என் வாழ்க்கையே கோணிப் போயிடுத்து!

இந்தச் சீராட்டுதல்களையும், அசட்டுப் பாசங்களையும் தாண்டி மாமிக்கும் எனக்கும் நடுவே ஒரு தனியான உறவு மெல்லிய இழையா ஓடிண்டிருக்கிறதை என்னால் உணர முடிஞ்சது. அந்த உறவு சாம்புவையர் என்கிற அவள் புருஷனின் சிநேகிதனான கிருஷ்ணையரின் புதல்வன் இந்த ராஜாராமன் என்பதனால் ஏற்பட்டதல்ல; ஏதோ அவள் பிள்ளையில்லாக் குறைக்கு என்னைப் பிள்ளையாகப் பாவிக்கிறாளே - அதையும் மீறினது அந்த உறவு.

எங்கேயாவது ஓடுகிற ரயிலில் இதற்கு முன்னாலும் பார்த்திராத, இதற்கு அப்புறமும் பார்க்க முடியாத ஒரு முகமாக இவளைக் கண்டிருந்தாலும் இந்த உறவு ஏற்பட்டிருக்க முடியும் என்று தோன்றுகிற மாதிரியான ஓர் உறவு அது.

காலேஜிலே எத்தனையோ பேர் நவநாகரிக உடையில் மற்றப் பையன்களின் மனசைக் குத்திக் கிளறுவது மாதிரிச் சிரித்துக்கொண்டு வருகிறார்களே, அவர்களிடமெல்லாம் இந்த ஒரு கவர்ச்சியை, ஒரு சக்தியைச் சாம்பலும் கையுமாக நெற்றியில் வழிகின்ற வியர்வையைப் புறங்கையால் துடைத்துக் கொண்டு அடுக்களை வேலை செய்யும் இந்த மாமியிடம் நான் காண்கிறேன்.

நான் இவளை முதலில் கண்டவுடனே, அன்றே கனவிலே இவளைக் கண்டதனால் எனக்கு இப்படித் தோன்றுகிறதோ? அல்லது இப்படித் தோணினதனால் தான் நான் கனவில் கண்டேனே?

அவள் உட்கார்ந்து தாயம் விளையாடுகிறபோதும், என் எதிரே உட்கார்ந்து என்னை வேண்டி வேண்டி அவள் சாதம் பரிமாறுகிறபோதும், ஒரு நிமிஷம் என் முகம் வாடி இருந்தால் ‘தலை வலிக்கிறதா, ஜுரம் அடிக்கிறதா?’ என்று

பதைபதைத்து என்னை அவள் ஸ்பரிசிக்கிறபோதும் அவள் எவ்வளவுதான் என்னை ‘வேண்டாம், வேண்டாம்’ என்று தடுத்தாலும் நான் வலுக்கட்டாயமாக அவள் கையைத் தள்ளிவிட்டு ஆட்டுரலில் மாவு அரைத்துக் கொடுக்கும்போதும், நான் ஒவ்வொரு நாளும் கண்டு கொண்டிருக்கிற அந்தக் கனவு எந்த நிமிஷமும் நனவாகிவிடலாம் என்கிற மாதிரி உணர்ச்சிகளின் கொதிநிலை உச்சம் பெறுகிற போது நாங்கள் இருவருமே அதை உணர்ந்தவர்களாக, என்னை அவள் ‘கொழந்தே’ என்றோ, நான் அவளை ‘அம்மா மாதிரி’ என்றோ முறைவைத்து அழைத்துச் சமனம் உறுவோம்...

கடைசியிலே ஒரு நாள்... உறவு முறை, நெறி முறை நியாய முறை, காலம், பருவம், வயசு, சூழ்நிலை எல்லாத்தையும் நெருப்பிலே விழுந்த சருகு மாதிரி ஒரு வினாடியிலே எரிச்சுட்டு அந்தக் கனவு நனவாயிட்டுதே!...

இந்த ராஜாராமனுக்குள்ளே ஒளிஞ்சுண்டிருந்த எத்தனையோ வேஷங்களிலே மறைச்சு மறைச்சு வச்சிண்டிருந்த நான், இந்த வேஷங்களையெல்லாம், இந்தத் திரைகளையெல்லாம் ஒரு நொடியிலே கிழிச்செறிஞ்சு, இனிமே இது இவனுக்கு அவசியமில்லைன்னு ஆக்கினேன்.

பின்கட்டுத் தாழ்வாரத்திலே ஆட்டுரல்லே மாமி தள்ளித் தள்ளிவிட இவன் மாவு அரைச்சுண்டிருக்கான்.

இவனுக்குப் படிப்பு முடிஞ்சி போச்சு; பரீட்சை எழுதிப் பத்து நாளும் ஆச்சு. இன்னும் எதுக்கோ காத்திண்டிருக்கிறவன் மாதிரி ஏதோதோ சாக்குச் சொல்லிண்டு இங்கேயே இருக்கான் இவன். எந்தச் சாக்கையாவது சொல்லிண்டு இவன் இங்கேயே இருந்தால் தேவலைன்னு மாமியும் இருக்காள். இவன் ஆத்திலேயே இருக்கிறதனாலே அக்கம் பக்கத்துப் பெண்கள் யாரும் இங்கே வரதில்லை. பகலெல்லாம் தாயம் விளையாடிண்டு. இவனைப் பாட்டுப் பாடச் சொல்லிக் கேட்டுண்டு, ஊர் நியாயங்கள் பேசிண்டே பத்து நாளைக் கழிச்சாச்சு. நாளைக்கு இவன் போயே

ஆகணும். அந்த ஏக்கத்திலே மாமி வாயடைச்சு மௌனமாயிட்டாள். அடிக்கடி இவன் முகத்துக்கு எதிரேயிருந்து திரும்பிப் போறச்சேயெல்லாம் முந்தானையாலே கண்ணையும் மூக்கையும் துடைச்சு முகமே சிவந்து போயிருக்கு. நாலு வருஷமா, கைக்குழந்தையைப் பாதுகாக்கிற மாதிரின்னா பாத்திருக்காள்! அந்த உணர்ச்சிகளெல்லாம் எவ்வளவு அசட்டுத்தனமான விரயம்னு நினைக்கிறப்போ ஓர் அர்த்தமில்லாத ஆத்திரமும் அழுகையும் அடி வயத்திலேயிருந்து பொங்கி வரது. எல்லாத்தையும் அடக்கி வைச்சுண்டு, பேசறவாகிட்டே பேசறாள்; சிரிக்கிறவாகிட்டே சிரிக்கிறாள். மாமி மனசாலே படற அவஸ்தை இவனுக்குப் புரியறது. அதை அடக்கிண்டு அவள் தவிக்கிறதைப் பார்க்கிறச்சே இவனுக்குச் சிரிப்பு வரது. அவள் உணர்ச்சிகளே இவனுக்கு ரொம்ப கேலியாகத்தான் இருக்கு.

மாவைத் தள்ளிண்டே இருந்தவள் திடீர்னு இவனைத் தலை நிமிர்ந்து பார்க்கிறாள். அந்தப் பார்வை இவனுக்கு ரொம்பப் புதுசா இருக்கு. அதே சமயத்திலே நாலு வருஷமாக் கனவிலே பார்த்துப் பழகின பழசாகவும் இருக்கு.

‘ஏண்டா அம்பி அப்படிப் பார்க்கிறே?’ என்று கேட்டவாறே விலகியிருந்த மார்புத்துணியைச் சரிசெய்துகொள்ள வேண்டும் என் நினைப்பிலேயே செயலிழந்து இவனை வெறிச்சுப் பார்க்கிறா மாமி, அவள் மேல்குத்திட்ட பார்வை கலையாமல் கொஞ்சங்கூட அலுங்காமல் ஆட்டுரலின் குழவியின்மேல் இறுகிய கைகளோடு, உதடுகள் மட்டும் அசைய இவன் சொல்றான்:

‘நேக்கு அம்மா ஞாபகம் வந்துடுத்து!’

மாமியின் உதடுகளில் அழுகை துடிக்கிறது.

‘கொழுந்தே! நான் உனக்கு அம்மா மாதிரிடா...!’

கொஞ்சம் அலுங்காமல், ஆட்டுரலின் குழவியின் மேல் இறுகிய கைகளோடு, உதடுகள் மட்டும் அசைய இவன் சொல்றான்;

‘நல்ல வேளை, அம்மா செத்துப் போனாள்.’

கண்கள் குளமாகி மாமி சொல்கிறாள்:

“என்னோட நல்ல வேளை, அவள் செத்துப் போனாள். இல்லாட்ட நேக்கு இப்படி ஒரு கொழந்தை கிடைக்குமா?” என்று உணர்ச்சியில் குழறிய மொழியோடு இவனைத் தாவி மார்போடு அணைத்துக் கொள்கிறாள்.

“ஒரே ஒரு தடவை வாயாலே என்னை அம்மான்னு கூப்பிடு...”

இவனுக்கு மூச்சே திணறுகிறது! “அம்மா...”

“தெய்வமே! இந்த ஜன்மத்திலே எனக்கு இந்தப் பாக்கியம் கிடைக்கும்னு நினைச்சதே இல்லேடா கொழந்தே! இது கனவு இல்லையேடா? குழந்தை! இது கனவு இல்லையேடா?”

கனவு நனவாச்சி.

அழுதுண்டே இருந்த மாமி, ஆனந்தமா சிரிக்க ஆரம்பிச்சு, கடைசியிலே மறுபடியும் அழ ஆரம்பிச்சாள். அவள் அழறாளேன்னு இவனும் அழறான்.

இவனுக்கு மாமி சமாதானம் சொல்றாள்: “கொழந்தே! நான் உனக்கு அம்மாதான்டா. இப்பவும் நான் உனக்கு அம்மாதான். ஏதோ விதியின் குத்தம் இப்படியெல்லாம் ஆயிடுத்து. குழந்தைன்னா பெத்தவள்கிட்டே பால் குடிக்காதோ? அப்படித்தான் எல்லாம். நீ எனக்குப் பிள்ளையாகவே ஆயிட்டே”ன்னு என்னென்னவோ தன் மனசு சமாதானத்துக்கோ, அவன் மனசு சமாதானத்துக்கோ பேசிண்டே புலம்பிண்டே இருக்காள் மாமி.

இவனும் சமாதானமடைஞ்சான். இந்த ஒரு வாழ்க்கையிலே இந்த ஓர் அனுபவம் போதும்னு இவன் சமாதானம்

அடைஞ்சான். இந்த சுகத்தைத்தான். இந்த இன்பத்தைத்தான் முழுக்கவும் சம்பூர்ணமாக அனுபவிக்க முடியாத மனுஷ மிருகங்கள், இதுக்காக அலைஞ்சு, கெட்டு, தேடித் தேடி அதிலேயே உழண்டுண்டிருக்கு. நான் அதைக் காய கல்பம் பண்ணினது மாதிரி முழுக்கவும், சம்பூரணமாகவும், இதனுடைய எல்லை வரைக்கும் இந்த ஒரே அனுபவத்திலே கண்டுட்டேன்னு சமாதானம் அடைஞ்சான்.

இது நாள் வரைக்கும் தன்னை ஆட்டி அலைக்கழிச்சுண்டிருந்த அந்தக் கனவுகளெல்லாம் இனிமே சம்பவிக்காது. தன் உள்ளே ஆவாஹனம் கொண்டிருந்த அந்தச் சைத்தானை விரட்டியாகி விட்டது. ‘இதுநாள் வரைக்கும் பெற்றதாய் கூட எனக்கு வெறும் பெண்ணாகவே இருந்தாள். இனிமேல் எல்லாப் பெண்களும் எனக்குத் தாய்’ என்கிற சமாதானத்திலே இதுநாள் வரைக்கும் தலையிலே கனத்துண்டிருந்த ஒரு பாவச் சுமையை இறக்கி வச்ச மாதிரி இவன் சந்தோஷப்பட்டான்; சமாதானமடைந்தான்.

* * *

பொழுது இருட்டினப்புறம் அவன் கோவில்லேருந்து வீட்டுக்கு வந்தான்.

வழக்கமா வாசற்படியண்டை ரெண்டு பக்கமும் அந்த மாடப்பிறைகள்லே எரிஞ்சிண்டிருக்கிற அகல் விளக்கை அன்னிக்குக் காணோம். வீடு முழுக்க இருளோன்னு கிடக்கு. தோட்டத்துக் கதவும் தெருக்கதவும் ‘ஓ’ன்னு திறந்து கிடக்கு. வாசற்படி தடுக்கிடுமோன்னு நிலைப்படியைக் காலாலே தடவிண்டே, ‘மாமி விளக்கை ஏத்தலையா?”ன்னு கேக்க நினைச்சு அவனை - உள்ளே கூடத்திலேருந்து கேக்கற அழுகைச் சத்தமோ, விம்மலோ, முனகலோ - ஏதோ ஒரு சத்தம், நினைச்சுப் பார்க்காத விபரீதம் நடந்துட்டதுன்னு உணர வச்சு வாயடைக்க வச்சுட்டது.

இருட்டிலே கண்ணுக்கு ஒண்ணும் தெரியலே. ஆனால் இவன் மனசுக்கு எல்லாமே புரியறது... சாம்பு மாமாவும்

இந்த இருட்டோட இருட்டா மாமியோட இருக்கார்னு தெரியறது. கூடத்திலே தொங்கற ஊஞ்சலோட சங்கிலி ‘குறுக்’ ‘முறுக்’னு சத்தம் பண்றது. மாமாவே, மாமியோ யாரோ ஒருத்தர் ஊஞ்சல்லே படுத்துண்டு இருக்கா; இன்னொருத்தர் உக்கார்ந்துண்டிருக்கா. எது மாமா, எது மாமின்னு தெரியலே. ஊஞ்சல் மட்டும் ஒழுங்கில்லாம் கோணல் மாணலா அசையற சத்தம் கேக்கறது.

இவன் நிலைப்படியைத் தடவின பாதத்தைத் தூக்கி உள்ளே காலை வைக்கத் தைரியமில்லாம கோதமன் சாபத்திலே சிலையாகிப்போன அகலிகை மாதிரி நின்னுட்டான்...

ஊஞ்சல் பலகையிலே யாரோ மடார் மடார்னு தலையை முட்டிக்கிறா. மாமியாத்தான் இருக்கும்... மாமா அவளைத் தடுக்கிறார் போலிருக்கு.

‘உன்னை நேக்குத் தெரியாதா? நீ என்ன பண்ணுவாய்? கொழந்தே, கொழந்தேன்னு உன் மனசு ஏங்கிண்டு இருந்தது நேக்குத் தெரியும். காலா காலத்திலே உனக்கும் ஒரு கொழந்தை பிறந்திருந்தா இதெல்லாம் நடந்தே இருக்காது. நீ என்னையே ஒரு கொழந்தை மாதிரி நடத்திண்டு இருக்கியேன்னு உனக்காகத்தான், உன் கொழந்தைப் பாசம் அநியாயமாப் போறேதேன்னு தான் அவனை இங்கே அழைச்சுண்டு வந்தேன்... உனக்கு லோகமே கொழந்தையாத் தெரியறது. அதனாலே நீ லோகத்துக்கே அம்மாவாயிட முடியுமா?... பெத்த தாயையே பொண்டாள்ற லோகமாச்சேடி...’

‘இல்லை... அப்படியெல்லாம் ஒண்ணுமே நடக்கலே... அவன் இப்பவும் என் கொழந்தைதான்... நான் அவனுக்கு அம்மாதான்... நான் என்ன பண்ணுவேன்? நான் பெத்த கொழந்தை பாலுக்குத் தவிச்சுண்டு என் மார்லே கை போடற மாதிரி இருந்தது... இப்பவும் அப்படித்தான் இருக்கு. எல்லாம் விதி... விதி, விதியின் குத்தம் மதி மயங்கிப் போயிடறது. நான் உங்களுக்குத் துரோகம் செஞ்சுடலே. ரெண்டு கையிலேயும் நெருப்பை அள்ளி வெச்சுண்டு

சொல்லுவென்... என் மனசறிய நான் உங்களுக்குத் துரோகம் செய்யலே!”

ஐயோ... உன்னை நேக்குத் தெரியாதாடி? மத்தவான்னா உனக்குத் துரோகம் பண்ணி இருக்கா உன் வாழ்க்கையையே கெடுத்து உன்னை வறட்டு ஜன்மமா ஆக்கி வெச்சிருக்கேனே, நான்னா துரோகியிலே துரோகி, மகா துரோகி!...’

ஊஞ்சல் பலகையிலே மடார் மடார்னு யாரோ தலையை முடிக்கிறா. மாமா போலிருக்கு. மாமி அவரைத் தடுக்கிறாள்...

‘ஐயோ, இதென்ன கஷ்டம்? நீங்க என்னத்துக்காக இப்படி முட்டிக்கணும்?... இப்படி ஒரு காரியத்தைச் செஞ்சுட்டு வந்து தைரியத்தோட என் முன்னாடி நிக்கறதுக்கும் ஆச்சான்னு என்னை ரெண்டு துண்டமா வெட்டலாமே... அதைச் செய்யுங்கோ... அதான் ஒரு புருஷன் செய்ய வேண்டிய காரியம்... என்னத்துக்கு இந்த உசிரு? என்னத்துக்கு... என்னத்துக்கு...’ன்னு மாமி ஓங்கி ஓங்கி மார் மேலே அறைஞ்சுக்கற சத்தம் கேக்கறது.

‘போறுமே... என் புருஷ லட்சணம்!... உன்னைக் கத்தியாலே வெட்டி வேறே நான் வதைக்கணுமாக்கும்? நீ சொன்னயே அதுமாதிரி ஒண்ணுமே நடக்கலேன்னு வெச்சுக்கோ, நாளைக்குக் காலம்பற ‘சனி ஒழிஞ்சுது’ன்னு கொண்டு போய் அவன் அப்பன்கிட்டே ‘இந்தாடா உன் பிள்ளை’ன்னு கொண்டு விட்டுட்டு வந்துடறேன். என்ன கெட்டுப் போச்சு?... நாலு வருஷமா, பெத்த பிள்ளையைக் கூட ஒரு தோப்பன் அப்படி வளர்த்திருக்க மாட்டான். இவன் தோப்பன் இவனை அப்படி வளர்த்தானான்னு கேளு. நேக்கு வயத்தை எரியறதேடி... அவனைச் சும்மா விடுமா இது?...’ மாமா நறநறன்னு பல்லைக் கடிக்கிறார்.

‘வேண்டாம். நான் சொல்றதைச் சித்த கேளுங்கோ... என் கொழந்தையைச் சபிக்காதேங்கோ. போறும்... வேறே ஒண்ணும் சொல்லிடாதேங்கோ... எழுந்திருங்கோ,

வீடெல்லாம் இருண்டு கிடக்கு, விளக்கை ஏத்தறேன். கோவிலுக்குப் போய்ட்டு வருவோம்...'

ஊஞ்சல் பலகைலேருந்து எழுந்த மாமி அடுக்களைக்குப் போய் விளக்கை ஏத்திண்டு கூடத்துக்கு வந்தாள். கூடத்திலே இருந்த இருட்டு கொல்லைப்புறமா ஓடின மாதிரி வாசற்படிலே நின்னுண்டு இருந்த இவன் தெருப்பக்கமா ஓடினான். கோதமன் சாபத்துக்கு அஞ்சி ஓடற இந்திரம் மாதிரி ஓடினான்...

எதையும் நாடியோ, தேடியோ ஓடில்லே; நாடறதுக்கோ தேடறதுக்கோ ஒண்ணுமில்லாத சூன்யத்திலே இவன் ஓடினான்; இவனே ஒரு சூன்யமாக ஓடினான். எத்தனையோ உறவுகள்லே, பந்தங்கள்லே, வேஷங்கள்லே, திரைகள்லே அவன் என்னை மறைச்சு வச்சிருந்ததெல்லாம் அந்த இருட்டிலே வெளிச்சமானப்பறம், எல்லாமே ஒண்ணுமில்லாத சூனியமானப்பறம் இவன் ஓடினான்.

## 3

வீட்டின் முன் பக்கத்தில் உள்ள கொட்டகையில் சிமெண்டுச் சார்ப்பில் காலையிலிருந்து வெகு நேரமாய் ஒரே நிலையில் உட்கார்ந்து, ஆலம் விழுதுகள் ஆடிக் கொண்டிருக்கும் ரயில்வே ஸ்டேஷன் பிளாட்பாரத்தை ஏதோ ஒரு 'காமிக் சீனை'ப் பார்த்து ரசிக்கிறவன் மாதிரி சிரித்த வண்ணம் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்த ராஜாராமன் சற்றுமுன்தான் ஏதோ அவசர காரியத்தைக் கவனிக்க மறந்திருந்து அது திடீரென்று ஞாபகம் வந்தது மாதிரி எழுந்து ஆற்றங்கரை மண்டபத்தை நோக்கி நடந்தான்.

கிழக்கே இருந்து வருகின்ற பார்சல் வண்டி வரப்போகிறது என்று அறிவிக்கிற மணியும் அப்போதுதான் அடித்தது. ஆற்றங்கரைக்குப் போகும் வழியில் அக்ரகாரத்தைக் கடந்து, தெருமுனையில் உள்ள வெற்றிலை பாக்குக் கடையருகே ராஜாராமன் நிற்கிறான். அவனைக் கண்டதும்

கடைக்கார நாயக்கர் மிகுந்த மரியாதையோடு கடையிலிருந்து இறங்கி, நடுத்தெருவில் நின்று கொண்டிருக்கும் அவன் கையில் ஒரு கட்டுப் பீடியைத் தந்துவிட்டுக் கும்பிடுகிறார்.

அதை வாங்கிக் கொண்டு ராஜாராமன் குழந்தை மாதிரிச் சிரிக்கிறான்: 'நெருப்புப் பெட்டி?'

'இதோ' என்று நடுத் தெருவிலிருந்து ஒரே பாய்ச்சலாகக் கடைக்குள் தாவுகிறார் நாயக்கர். மறுபாய்ச்சலில் ராஜாராமன் கையில் நெருப்புப் பெட்டி இருக்கிறது. மறுபடியும் ஒரு கும்பிடு. ராஜாராமன் சிரித்துக் கொண்டே போகிறான். நாயக்கர் அவன் முதுகுக்குப் பின்னாலே பெருமூச்சு விடுகிறார். கடையருகே சாமான் வாங்க வந்திருந்த யாரோ இருவர் தங்களுக்குள்ளே ராஜாராமனைப் பற்றிப் பேசிக்கொள்கிறார்கள். ஒருவர், 'இது ஞானமார்க்கம்' என்கிறார். 'இல்லை, இல்லை.... அது..... அது சித்து' என்கிறார் இன்னொருவர்.

கல்லாப் பெட்டியிலிருந்து கணக்கு நோட்டை எடுத்து 'அம்பி அய்யர் கணக்கு ஒரு கட்டு பீடியும் நெருப்புப் பெட்டியும் 32 பைசா' என்று கணக்கெழுதிய பிறகு. 'இதெல்லாம் தலை எழுத்து ஐயா... இந்த அம்பி அய்யருக்கு எதிலே குறைச்சல்? வம்சத்திலேயே இல்லாத படிப்புப் படிச்சிருக்கிறார்; ஆஸ்தி இல்லியா? அழகு இல்லியா?... பெரிய அய்யர் இருந்து பார்த்தாருன்னா வயிறெரிஞ்சு போயிருப்பார்... பைத்தியக்காரன் மாதிரி காவியையும் கந்தலையும் உடம்பிலே கத்திக்கிட்டு பீடியைப் புடிச்சுகிட்டு என்ன பாவமோ... என்ன சாபமோ?...' என்று பெருமூச்செறிந்தார் நாயக்கர்.

ஆற்றங்கரை மண்டபத்துக்கு வந்த ராஜாராமன் வழக்கம்போல சுகாசனமிட்டு அமர்ந்தான். மடியிலிருந்த பொட்டணத்தை எடுத்து அதிலிருந்து கஞ்சாவை எல்லா பீடிகளிலும் ரொம்ப மும்முரமாகக் கொஞ்ச நாழி திணித்தான். அந்தக் காரியம் ஒரு பத்து நிமிஷத்துக்கு மேலாக நடந்தது. கஞ்சா திணித்த பீடியை மடி நிறையக்

கட்டிக் கொண்டான். மடியிலிருந்து ஒன்றை எடுத்து மிகுந்த ஆர்வத்தோடு ஒரு புன்னகையுடன் பார்த்தான். பீடியைப் பற்றவைத்து ஒரு முறை ஆழ்ந்து புகையுறிஞ்சி ஊதினான். சாவதானமாகச் சரிந்து அந்த மண்டபத்துப் புழுதித் தரையில் ஒருக்களித்துப் படுத்து, தலைமுடி வழிகின்ற பிடரிக்குக் கீழே உள்ளங்கையைத் தாங்கி, வலக்காலைக் குத்திட்டு ஊன்றி, இடது காலை மடித்து, வலக்கால் மூட்டின் மேல் கிடத்தி, இடது பாதத்தை வேகமாக - குமுட்டியை விசிறியால் வீசுறுகிற வேகத்தில் ஆட்டியவாறு... அவனது சிவந்த விழிகளின் பார்வை ஆற்றின் பார்வை ஆற்றின் அக்கரை மேட்டில் பதியும்போது...

வரட்டிகள் அடுக்கிக் கட்டைகள் பரப்பி மேலே ஈரமண் பூசிய சிதையினுள்ளிருந்து புகை மண்டலம் பெருகிக் கொண்டிருந்தது. கிழக்கே இருந்து வந்து நிற்கிற பாசஞ்சர் வண்டி ரயிலடியிலிருந்து புறப்படுவதற்காக அடிக்கின்ற மணியோசை கேட்கிறது.

ஒற்றைப் பிரயாணியாகக் கையில் ஒரு துணிப்பையுடன் சாரதா மாமி ஸ்டேஷன் மாஸ்டரிடம் டிக்கெட்டைக் கொடுத்து விட்டு, ‘இங்கே கிருஷ்ணையர் வீடு எங்கோ இருக்கு?’ என்று விசாரிக்கிறாள். கேட்கும்போதே அவள் பார்வை அக்ரகாரத்தில் முன்புறம் தென்னோலை வேய்ந்த கொட்டகை இருக்கும் அந்த வீட்டில் பதிகிறது. ஸ்டேஷன் மாஸ்டரும் அந்த வீட்டையே காட்டுகிறார்.

மாமிக்கும் கிருஷ்ணையர் வீட்டில் கிருஷ்ணையரையும் ராஜாராமனையும் மட்டுமே தெரியும். எப்போதோ ஒரு முறை ரகுபதியைப் பார்த்திருக்கிறாள். ரகுபதிக்குக் கலியாணம் நிச்சயமானபோது ராஜாராமன் போய் இரண்டு வருஷமும் சாம்புவையர் போய் ஒரு வருஷமும் ஆகியிருந்தது - கிருஷ்ணையரும் ரகுபதியும் பத்திரிகை கொடுக்கத்தான் வந்திருந்தார்களே தவிர அழைக்க வரவில்லை. அப்போது அவள் ரகுபதியைப் பார்த்திருக்கிறாள். ‘இப்போது அவனுக்கு நினைவிருக்குமோ என்னவோ?’ என்று அவள் மனசு தயங்குகிறது. ‘வரும்போது காரியஸ்தரையும் கூட

அழைச்சுண்டு வந்திருக்கலாமோ' என்றும் நினைத்துக் கொள்கிறாள்.

தன்னைத் தெரியாத அன்னியர்களிடம் தான் இன்னாரென்று வலிந்து அறிமுகம் செய்துகொண்டு உறவாடுவதற்கு மனசு கூசுகிறது. 'கிருஷ்ணையர் இருந்தார்னா...?' என்று ஏங்குகிறது. 'அவர் இறந்ததையே எனக்குச் சொல்லி அனுப்பாத இவர்களுக்குத் தன்னை எப்படித் தெரியப் போகிறது?' என்ற நினைப்பில் அக்ரகாரத்தில் ஒவ்வொரு வீட்டையும் அடையாளம் தேடிப் பார்த்தவாறு வருகிறாள் மாமி.

'யாருக்குத் தெரிஞ்சால் என்ன? தெரியாவிட்டால் என்ன?... என் கொழந்தைக்கு என்னைத் தெரியாமல் போயிடுமா, என்ன? ஐயோ... அவன் சாமியாரா இருக்கானாமே! இது என்னடாப்பா அநியாயம்? நான் பார்த்து அவனைக் கேக்கறேன். அவனைப் பெத்தவர் இருந்தா விடுவாரோ? அப்பிடியே இவன் துறவறத்தைக் கலைக்காம வச்சிக்கறேன்னு வாக்குக் கொடுத்துக் கூட்டிண்டு வந்தானாம் இந்த அண்ணன்காரன்! நான் சொன்னால் அம்பி கேப்பான். என் வார்த்தையைத் தட்டவே மாட்டான். ராஜாராமனைக் கல்யாணராமனா நான் பார்க்கத்தான் போறேன்' என்றெல்லாம் மனசுகள் பேசியவாறே கிருஷ்ணையரின் வீட்டு வாசலில் வந்து நின்று ஆர்வத்தோடு முதலில் அந்தக் கொட்டகையைப் பார்த்தாள் மாமி.

அந்தக் கொட்டகையைப் பார்க்கும்போதே அவளுக்கு வயிற்றை என்னவோ செய்தது.

'இந்தக் கொட்டகையிலேதான் அவன் இருக்கானாமே! படுக்கை ஒண்ணையும் காணோமே?.. பூட்டு திறப்ப ஒண்ணும் கிடையாதோ? ஈசுவரா! என்ன இப்படி ஒரு தலையெழுத்து!' என்று அவள் மனம் பொருமி நிற்கும்போது வீட்டுக்குள்ளிலிருந்து வந்த ரகுபதி மாமியின் முதுகுப்பறத்தை மட்டுமே பார்த்தான்.

விலையுயர்ந்த பட்டுப்புடவையும், தங்க பிரேம் கண்ணாடியுமாய் நின்ற மாமியைப் பார்த்து மிகுந்த மரியாதையுடன் கேட்டான் ரகுபதி.

'யார் வேணும்? இது கிருஷ்ணையர் அகம்.'

ரகுபதியின் குரல் கேட்டு மாமி திரும்பினாள்.

'வாங்கோ, வாங்கோ! மன்னிக்கணும்... என்ன இப்படி திடீர்னு. ஒரு கடுதாசி எழுதிப் போட்டிருந்தா நான் வந்து அழைச்சுண்டு வந்திருப்பேனே... வெயில்லே நிக்கறேளே... உள்ளே வாங்கோ... அடீ இவா யாரு தெரியுமோ?...' என்று ஏகக் களோபரத்துடன் உள்ளே ஓடினான் ரகுபதி. மாமி முகம் சுளித்து மனசுக்குள் சிரித்துக் கொண்டாள்.

'நான் கடுதாசி எழுதிப் போடணுமா? உங்கப்பா காலமானரே; அதுக்கு ஒரு கடுதாசிப் போடணும்னு உனக்குத் தோணலையே' என்று மனசுக்குள் நினைத்துக் கொண்டு கொட்டகையின் சிமெண்ட் சார்ப்பிலேயே உட்கார்ந்தாள்.

உள்ளே இருந்து இடுப்பில் இடுக்கிய கைக்குழந்தையோடு மனைவியை அழைத்துக் கொண்டு வந்த ரகுபதி, மாமி திண்ணையிலேயே உட்கார்ந்து கொண்டிருக்கும் காரணத்தை உணர்ந்து துணுக்குற்றான்.

'என்ன எப்படி? உள்ளே வாங்கோ' என்று கெஞ்சினான்.

'இருக்கட்டும், வாசற்படியண்ட வந்து நின்னா வாங்கோன்னுதானே சொல்லுவாய். உன் தோப்பனார் காலமாயிட்டாராமே... எனக்கு ஒரு கடுதாசி போடப்படாதா? என்னை மாதிரி ஆனவா கல்யாணத்துக்குத் தான் வரப்படாது... அது போகட்டும்... உன் தோப்பனாராச்சு, நீயாச்சு... என் கொழந்தை வந்திருக்கானாமே?- ஒரு வருஷமாச்சாமே... ஏன் எனக்குச் சொல்லலே? நான் என் கொழந்தையைப் பார்க்கத்தான் வந்திருக்கேன். அவன் இப்போ எங்கே? இந்தக் கொட்டகை தானே அவன் வீடு? நான் இங்கேயே இருக்கேன். எனக்கு அவனை மொதல்லே

பார்க்கணும்... மத்ததெல்லாம் அப்புறம் பேசிக்குவோம். அவன் எங்கே?' என்று பதைத்தாள் மாமி.

'பெரியவா என்னை மன்னிக்கணும்... தப்புதான் நான் சின்னவன். அப்பா ஒண்ணொண்ணும் செய்யச் சொல்லி அதைச் செய்துதான் பழக்கம். திடீர்னு எல்லா பாரத்தையும் என் தலையிலே போட்டு அவர் போயிட்டார். அந்தக் குழப்பத்திலே தப்பு நடந்து போச்சு... பெரிய தப்புத்தான்... மன்னிக்கும்படியாகக் கேக்கறதுக்குக்கூட வெட்கமா இருக்கு...' என்று இரண்டு கைகளையும் அவள் முன்னால் கூப்பி நின்று மன்றாடினான் ரகுபதி.

'காவேரிக்கரை பிராமணனுக்கு இதெல்லாம் சொல்லியா தரவேண்டும்' என்று மாமி மனசில் நினைத்துக் கொண்டாள், இந்தக் கூழைக் கும்பிடுக்கு மசியாதவளாக மாமி கேட்டாள்! 'அதையெல்லாம் விடு. இப்போ அம்பி எங்கே? எனக்குப் பார்க்கணுமே.'

'இங்கேதானே இருந்தான். சித்த மிந்தி பார்த்தேனே' என்று அங்கும் இங்கும் ஓடினான் ரகுபதி.

'இங்கே இல்லேன்னா காவிரிக் கரையிலேதான் இருப்பார். போய் பார்த்து அழைச்சுண்டு வாங்களேன்' என்றாள் அவன் மனைவி.

'பேசிண்டு இருங்கோ... ஒரு ஓட்டமாய்ப்போயி அழைச்சுண்டு வரேன்' என்று புறப்பட்ட ரகுபதியைத் தடுத்த மாமி தனது துணிப் பையுடன் எழுந்தாள்.

'வேண்டாம்பா. நானே போய்ப் பாத்துடறேன்.'

'வெயில்லே வந்துட்டு... சித்தே சிரம பரிகாரம் பண்ணின்டு இருந்தேள்னா நான் அழைச்சுண்டு வந்துடலாம்னு...' என்று குழைந்தான் ரகுபதி.

'ம் என் சிரமத்துக்குப் பரிகாரம் என் கொழந்தையைப் பார்க்கறதுதான். இவ்வளவு தூரம் ரயிலேறி வந்திருக்கேனே ஆத்தங்கரை வரைக்கும் நடக்க முடியாதா என்ன?' என்று மற்ற யாரையும் லட்சியம் செய்யாதவளாகத்

தெருவில் இறங்கி நடந்தாள் மாமி. ரகுபதியும் கூடவே போனான். அவன் மனைவி மாமியின் முதுகுக்குப் பின்னால் உதட்டைப் பிதுக்கிக் கொண்டு உள்ளே போனாள்.

ஆற்றங்கரை மண்டபத்திலே ஒருக்களித்துப் படுத்த நிலையில் அக்கரை மேட்டு மயானச் சிதையில் தன்னை மானசீகமாகக் கொண்டு வைத்து எரித்தவாறே இதற்குள் நான்கு பீடிகளைப் புகைத்த போதையில் ராஜாராமன் சிரிக்க ஆரம்பித்தான்...

'எவ்வளவு அகலமாயினும் சரி, குறுகியிருப்பினும் சரி, உயிர் வாழ்க்கை என்பது இரண்டு கரைகளுடைய இந்த ஆறு மாதிரி தான். இந்த உடம்பை ஒரு தோணி மாதிரி இதில் மிதக்கவிட்டு இக்கரையிலிருந்து அக்கரைக்குப் போனால்... அதன் பிறகு சடலத்தை, தோணியை அக்கரையிலே போட்டுவிட்டு உயிர் மட்டும் தொடர்ந்து யாத்திரை போகிறது... தோணியையும் யார் சுமப்பார்கள்?... சுமக்க வேண்டாம். அதை எதற்குச் சுட்டு எரிக்கிறார்கள்?' என்று என்னவோ நினைத்துக்கொண்டு ராஜாராமன் சிரிக்கிறான்.

'காவேரிக்கு இக்கரையில் நான் இருந்தாலும் வாழ்க்கையில் அக்கரை கடந்த தோணியாக மாறிப் போனபின் சுட்டெரிக்கும் நேரம் வரத்தான் காத்திருக்கிறேனோ' என்று நினைக்கிறான்.

இன்னும் ஒரு பீடியைப் பற்றவைத்துக் கொள்ளுகிறான்.

அப்போது தூரத்திலிருந்து மண்டபத்தையும் ராஜாராமனையும் கண்ட மாமி ஓட்டமும் நடையுமாக என்னமாய் ஓடி வருகிறாள்! ரகுபதியினால் அவள் வேகத்தைப் பிடிக்க முடியவில்லை...

'அம்பீ!... அடே... அம்பீ! என் கண்ணே; என் கொழந்தே!' அவனை அவள் அடையுமுன் அவள் குரல் வந்து மண்டபத்தில் மோதுகிறது.

வாயில் வைத்த பீடியுடன், அவளது மூன்று நான்கு அழைப்புக்குப் பின்னர் மெதுவாகச் சற்றே ஒருக்களித்த நிலையில் தலை திரும்பிப் பார்த்தான் ராஜாராமன்.

இரண்டு கைகளையும் ஏந்தியவாறு - ஒருவகையில் உள்ள துணிப்பையிலிருந்து என்னமோ கீழே விழுகிறது - அதைக்கூடக் கவனிக்காமல் - அவள் ஓடி வருகிறாள். கண்களிலிருந்து தாரை தாரையாய்க் கண்ணீர் பெருகுகிறது. வந்து விழுந்துவிடப் போகிறாள் என்ற பதைப்புடன், அவள் பையிலிருந்து விழுந்த கண்ணாடிக் கூட்டையும் எடுத்துக்கொண்டு அவளைப் பிடிப்பதற்காகப் பின்னால் ஓடி வருகிறான் ரகுபதி.

அவள் மண்டபத்தை நெருங்க நெருங்க ஏதோ தனக்குச் சம்பந்தமில்லாத யாரோ இருவர் ஒருவரை ஒருவர் துரத்திக்கொண்டு ஓடி வருவதை வேடிக்கை பார்க்கிறவன் மாதிரிச் சிரித்துக்கொண்டே ரசித்த ராஜாராமன், படுத்த நிலையிலிருந்து எழுந்து உட்கார்ந்தான். எழுந்து உட்கார்ந்து சிரித்தவாறே அவளைப் பார்க்கிறான். மாமிக்கு வாயடைத்துப் போகிறது. தேகமே பதைக்கிறது; வயிற்றை அழுத்திக் கொண்டு அழுதவாறே நடைமெலிந்து தள்ளாடியவாறே மண்டபத்தை அடைகிறாள்.

ராஜாராமன் இந்த உணர்ச்சிகளிலிருந்தும் பாசத்திலிருந்தும் சம்பந்தப்படாமல் விலகி நின்றே அதே சிரிப்புடன் இவளைப் பார்க்கிறான்.

அந்தப் பார்வை இவளுக்கு அவன் தன்னைப் பார்க்கவேயில்லை என்று உணர்த்துகிறது. இதோ அடுத்து அவன் வாய் திறந்து, ‘யார் நீ! என்ன இதெல்லாம்?’ என்று கேட்டுவிடப் போகிறானோ என்கிற திகிலும் ‘அப்படிக் கேட்டுவிடக் கூடாதே’ என்ற பதைப்பில் அந்தக் கேட்கப்படாத கேள்வி தருகின்ற சோகமும் அவளால் தாங்க முடியவில்லை. குலுங்கிக் குலுங்கி அழுகிறாள்.

“அம்பீ! இவாளைத் தெரியலையா உனக்கு?” என்று ரகுபதி குறுக்கிடுகிறான்.

ராஜாராமன் சிரித்தவாறே தன்னுள் நிரந்தரம் கொண்டு விட்ட மௌனம் கலையாமலே அலுங்காத சிரிப்புடன் ரகுபதியின் கேள்விக்கு எதிரொலி மாதிரி பதில் சொல்லுகிறான்.

“தெரியாமல் என்ன?... தெரியுமே...”

“என் குழந்தைக்கு என்னைத் தெரியாமலா போயிடும்... இதெல்லாம் என்ன கோலம்டா, அம்பீ!” என்று மாமி அழுகிறாள்.

“ரகு அண்ணா, இவாளை ஆத்துக்கு அழைச்சுண்டு போயேன்...” என்று பீடிப் புகையை ஊதியவாறே சொல்கிறான் ராஜாராமன்.

“இருக்கட்டும்டா அம்பி... உன்னைப் பார்க்கத்தானே நான் வந்தேன். என்ன அவசரம்?” என்று மண்டபத்துப் புழுதித் தரையில் தூணோரமாக மாமியும் உட்கார்ந்து கொள்கிறாள்.

ராஜாராமன் திடீரெனச் சிரிக்கிறான்.

மாமிக்கு அந்தச் சிரிப்பு பயமாக இருக்கிறது.

சிரிப்பு அடங்கிய பின் அவன் பார்வை எல்லாம் அக்கரைமேட்டில் எரிகின்ற சிதையில் பதிகிறது.

மாமி துணிப்பையிலிருந்து என்னென்னவோ பட்சணங்கள் எல்லாம் எடுக்கிறாள்.

“உனக்குப் பிடிக்குமே...” என்று வெல்லப்பாகில் தோய்ந்த பலாச்சுளை - அதற்குச் ‘சக்கப் பிரட்டல்’ என்று பெயர் - எடுத்து அவன் கையில் வைக்கிறாள். அவனும் ஒரு கையில் பீடியும், மற்றொரு கையில் அந்தப் பலகாரமுமாய் உட்கார்ந்து மாறி மாறி ஒரு இழுப்புப் பீடிப்புகையும் அதை ஒரு கடியுமாகச் சாப்பிடுகிறான்.

“அவனுக்கு...” என்று ரகுபதியை காட்டுகிறான்.

“இருக்கட்டும். நான் இப்போதுதான் சாப்பிட்டேன்” என்று தடுக்கிறான் ரகுபதி.

மாமி அடிக்கடி முந்தானையால் கண்களைத் துடைத்துக் கொள்கிறாள்.

“அம்பீ... நீ பாசாயிட்டாய், தெரியுமோ?” என்று திடீரெனச் சொல்கிறாள் மாமி.

அவன் அவள் முகத்தைப் பார்க்கிறான். வெறித்த வெறுமையான பார்வை. வாயிலுள்ளதை விழுங்க முடியாமல் பெருங்குரலில் சிரிக்கிறான்.

மாமிக்கு அந்தச் சிரிப்பு இப்போதும் பயமாக இருக்கிறது.

“நீ போன அடுத்த வருஷமே, மாமா என்னை விட்டுப் போயிட்டார்.”

‘ஓ! அப்பவே, அப்பவே போயிட்டாரா...! ஓஹோ? உங்களைவிட்டுட்டு த்சு...த்சு...” என்று யாரோ சொல்லிக் கொடுத்ததைச் சொல்லிக் காட்டுவது மாதிரிக் கூறுகிறான்.

மாமி சற்று நேரம் அவனைக் கூர்ந்து பார்க்கிறாள்.

‘இவனுக்குச் சித்தப் பிரமை ஏதாவது ஏற்பட்டிருக்குமோ?’ என்றொரு சந்தேகம் வருகிறது! ஆனாலும் இவன் தன்னை அடையாளம் கண்டுகொண்டதாகச் சொன்னதையும் ரகுபதியிடம் ‘இவாளை வீட்டுக்கு அழைச்சுண்டு போ!’ என்று சொன்னதையும் நினைத்தால் அப்படியெல்லாம் இருக்காது என்று தோன்றுகிறது. முன் இருந்த ஏதோ ஒன்று இப்போது இவனிடம் இல்லாததுபோல் இருக்கிறது. அது என்னவென்று மனசுக்கு மட்டுமே புரிகிறது. ‘ஒருவேளை இவனது சாமியார்க் கோலமும் - இதென்ன கருமம் - ஒரு பீடியையும் வெச்சுண்டு இதெல்லாம்தான் அப்படித் தோண்றதோ?’ என்று மனசு குழம்புகிறது.

ஆனால் இவனை இப்படியே இருக்க விடுவதற்கு மட்டும் மாமிக்கு மனம் பொறுக்கவில்லை. மற்றவர்கள் எல்லாம் இவனை இப்படியே பொறுப்பில்லாமல் விட்டிருக்கிறார்கள்

என்று எல்லார் மேலேயும் அவளுக்கு மனசுக்குள் கோபம் கோபமாய் வருகிறது.

‘இவன் என் பேச்சை மறுக்க மாட்டான். என் வார்த்தையைத் தட்ட மாட்டான்...’ என்று அசட்டு நம்பிக்கை வேறு வளர்கிறது.

‘அம்பி... நான் எதுக்கு இப்போ இங்கே வந்திருக்கேன் தெரியுமோ!’ என்று ஒரு புன்னகையுடன் பீடிகை போடுகிறாள் மாமி.

அவன் பார்வை மசானத்தையே வெறிக்கிறது.

‘என்னைப் பாருடா கொழந்தை’ என்று தைரியத்தை வரவழைத்துக் கொண்டு தாடி அடர்ந்த இவனது மோவாயைத் திருப்புகிறாள் மாமி.

‘என் கொழந்தையே முந்தி மாதிரியே பார்க்கணும்னு வந்திருக்கேன்... என் ராஜாராமனைக் கலியாணராமனா பார்க்கணும்னு ஓடி வந்திருக்கேன். நீ நிச்சயம் வருவாய்னு நான் பத்து வருஷமா காத்திண்டிருக்கேண்டா கொழந்தை. உங்க மாமா சேர்த்து வெச்சிருக்கிற சொத்துக்களையெல்லாம் உன் கையிலே ஒப்படைச்சுட்டு உன் கையாலே நேக்கு கொள்ளி வெக்கணும்னுதான் புதையல் காக்கிற பூதம் மாதிரி உக்காந்துண்டு இருக்கேன்டா கொழந்தே! இந்த வேஷம் போறும்டா... உனக்கு என்ன கொறைச்சல்! ராஜா மாதிரி வாழலாம்டா... இந்தப் பிடிவாதத்தை விரக்தியையெல்லாம் விட்டொழிச்சுடு... என்னோட வரதானாலும் வா, இங்கே இருக்கறதானாலும் இரு... இந்த சாமியார்க் கோலத்தைப் பார்க்கப் பார்க்க வயிறெல்லாம் எரியறது. இது மட்டும் வேண்டாம்டா... போறும்... கொழந்தை... போறும்’ என்று பேசிக் கொண்டே அழுகிறாள் மாமி.

‘ம்... என்னதான் நடக்கிறது பார்ப்போமே’ என்று மார்பின் மீது கையைக் கட்டிக் கொண்டு வேடிக்கை பார்த்துக் கொண்டு நிற்கிறான் ரகுபதி.

மாமி பேசி முடிப்பதற்குள் மேலும் இரண்டு பீடிகளைப் பற்ற வைத்துவிட்டான், ராஜாராமன்.

அவள் பேச்சின் ஒரு வார்த்தையைக்கூட அவன் பொருள் புரிந்து கிரகித்தான் என்று தோன்றவில்லை. எங்கோ பார்த்துக்கொண்டு ஏதோ நினைவில் சிரிக்கிறான்.

தனது இடது காலை இழுத்து வலது தொடைக்கு மேலே யோக தண்டம் மாதிரி புஜத்துக்குக் கீழே நிறுத்தி இடது கையை நீளமாக அதன்மீது நீட்டி, தலை நிமிர்ந்து, 'யார் இவள்?' என்று கேட்கிற மாதிரி திடீரென்று அவளைப் புதிதாகப் பார்த்தான். கூர்மையாக அவள் விழிகளில் ஊசிகொண்டு தைப்பது மாதிரி பார்த்தவாறே சொல்லுகிறான்:

'உங்க கொழந்தை அதோ, அக்கறை மேட்டிலே எரிஞ்சிண்டு இருக்கு... உங்க சொத்து ஆஸ்தியெல்லாத்தையும்கூட வெச்சு எரிச்சுட்டு வாங்கோ... ராஜாராமன்... நான் எல்லாம் அங்கே நன்னா எரிஞ்சிண்டு இருக்கே... பாருங்கோ... திரும்பிப் பாருங்கோ" என்று அவன் பேசும்போது அவளுக்குப் பயமாக இருக்கிறது. அவன் பேச்சை மறுத்தோ இடைமறித்தோ பேச அவளுக்கு வாய் வரவில்லை-

"இல்லாட்டா ஒண்ணு செய்யுங்கோ... எல்லாத்தையும் பீடியா மாத்திக் கொண்டு வாங்கோ... நானே எரிக்கிறேன்..." என்று சொல்லிவிட்டு 'ஓ'வென்று ரொம்ப ஹாஸ்யமாகப் பேசிவிட்ட பெருமையுடன் சிரிக்கிறான்.

அழுத கண்களை அழுந்தத் துடைத்துக் கொண்டு மாமி அவனை உற்றுப் பார்க்கிறாள்.

'இவன் என் குழந்தை இல்லை. அவன் இப்படிப் பேச மாட்டான். இவன் சொல்றது நெஜம். இவன் என் குழந்தை இல்லை. இவன் யார் குழந்தையும் இல்லை' என்று மாமியின் மனசுக்குப் புரிகிறது. தான் இவனிடம் இப்படியெல்லாம் பேசியதே தப்போ என்று இப்போது தோன்றுகிறது.

அவள் மௌனமாகக் காவேரிக் கரையின் அக்கரை மேட்டில் எரிகின்ற சிதையைப் பார்த்துக் குமுறுக் குமுறி அழுகிறாள்.

அக்கரை மேட்டில் வரட்டிகள் அடுக்கி, கட்டைகள் பரப்பி, ஈர மண் பூசிய சிதையினுள்ளிலிருந்து பெருகிய புகை குறைந்து, திடீரென விறகுக் குவியலின் இடைவெளிகளிலும், வரட்டி அடுக்கின் ஊடாகவும், சிவப்பாகவும் ஆரஞ்சு நிறமாகவும் வானோக்கி உயர்ந்த தீ எழுந்து, தணலாய் எரிகிறது.

ராஜாராமன் பீடிப் புகையுடன் வாய் திறந்து குழந்தை மாதிரிச் சிரிக்கிறான்.

முற்றும்